Hither return no more ! That deeds and birth cling not,
To sever bonds of this deceitful sensuous frame the might is Tnine !
Lord who dost dance, trampling dense darkness down !
Dancer in Tillai ! Dweller in the Southern Pandi land !
Thou Who dost cut off evil birth !—Adoring ever, Thee they name,
Whom words declare not ; then, 'HEATH THY SACRED FEET
In Civan's town who daell, —full many a one,—beneath
The feet of Civan, lowly bending utter praise.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள்

அருளிச்செய்த

# கந்தபுராணம்

*

## தக்ஷகாண்டம்

*

## அடிமுடி தேடு படலம்

மூலமும்

கலாநிதி, பண்டிதமணி

சி. கணபதிப்பிள்ளை

செய்த

உரையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அடிமுடி தேடு படலம்

இங்கிது நிற்கமுன் னிறைவன் வந்துழி
யங்குற நின்றதோ ரமரர் தங்களுட்
செங்கம லத்துறை தேவன் றக்கனுந்
துங்கமின் மைந்தனை நோக்கிச் சொல்லுவான்.

இங்கு இது நிற்க—இஃது இங்ஙனமாக, முன் இறைவன் வந்துழி—முன்பு சிவபெருமான் அங்கே எழுந்தருளியபோது, அங்கு உற நின்றது ஓர் அமரர் தங்களுள்—அங்கு மிக்கு நின்றதொரு தேவர் கூட்டத்துள், தக்கன் ஆம் துங்கம் இல் மைந்தனை—தக்கனாகிய இழிவு அடைந்த தம் புதல்வனை, செங்கமலத்து உறை தேவன் நோக்கிச் சொல்லுவான்—செந்தாமரை மலரிலிருக்கும் பிரமதேவர் நோக்கிக் கூறுவார்.

யாதுமுன் னுணர்ந்தனை யாது செய்தனை
யாதவண் கருதினை யாரிற் பெற்றனை
யாதுபின் செய்தனை யாது பட்டனை
யாதிவண் பெற்றனை யாதுன் னெண்ணமே.

யாது முன் உணர்ந்தனை—மகனே நீ முன் எதனை என்னிடம் படித்தாய்; யாது செய்தனை—படித்தபின் எதனை முயன்று செய்தாய்; யாது அவண் கருதினை—அந்த அரிய தவமுயற்சிக்கண் எதனை அடையக் கருதினாய்; யாரில் பெற்றனை—நீ அடையக் கருதியவைகளை யாரிடத்திற் பெற்றாய்; பின் யாது செய்தனை—அடையக் கருதிய ஐசுவரியங்களை அடைந்தபின் யாது செய்தாய்; யாது பட்டனை—அதனால் என்ன பாடு பட்டாய்; யாது இவண் பெற்றனை—இவ்விடத்தில் இப்பொழுது என்ன பரிசு பெற்றிருக்கின்றாய்; யாது உன் எண்ணம்—இனி உன் எண்ணம் யாது.

வேதங்களையுணர்ந்து, தவஞ்செய்து, மோக்ஷத்தைக் கருதாமற் செல்வத்தைக் கருதி, அதனைச் சிவபெருமானாற் பெற்று, பின் அவரை நிந்தித்து யாகஞ் செய்து, இறந்து, ஆட்டுத் தலையைப் பெற்றாய்; இனியேனும் ஏற்ற பரிகாரத்தைச் செய்வாயா என்பார் இவ்வாறு வினவினார் என்க.

பொன்றுத லில்லதோர் புலவர் யாவர்க்கும்
வன்றிறன் முனிவரர் தமக்கும் வையமேற்
றுன்றிய வந்தணர் தொகைக்குந் துன்னெனக்
கொன்றுயி ருண்பதோர் கூற்ற மாயினாய்.

பொன்றுதல் இல்லதோர் புலவர் யாவர்க்கும்—மரணம் இல்லாததொரு தேவர் கூட்டத்துக்கும், வன்திறல் முனிவரர் தமக்கும்—தவவலி படைத்த முனிவரர் கூட்டத்திற்கும், வையம் மேல் துன்றிய அந்தணர் தொகைக்கும்—பூமியிற் பொருந்திய பிராமணர் கூட்டத்துக்கும், துன்னெனக் கொன்று உயிர் உண்பது ஓர் கூற்றம் ஆயினாய்—விரைந்து கொன்று உயிரைப் பருகுவதொரு கூற்றுவன் ஆயினாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரையுந் தொலைத்தனை சிறந்த தக்கனும்
பேரையுந் தொலைத்தனை பேதை யாகிநின்
னேரையுந் தொலைத்தனை யேவல் போற்றுந
ராரையுந் தொலைத்தனை யலக்க ணெய்தினாய்.

சீரையும் தொலைத்தனை—தவஞ்செய்து பெற்ற சிறப்புக்களையுந் தொலைத்தாய்; சிறந்த தக்கனும் பேரையும் தொலைத்தனை—வேதம் உணர்ந்து சிறந்த தக்கன் என்கின்ற புகழையுந் தொலைத்தாய்; பேதையாகி—அறிவிலியாய், நின் னேரையும் தொலைத்தனை—உன் முக அழகையுங் கெடுத்தாய்; ஏவல் போற்றுநர் ஆரையும் தொலைத்தனை—உன் ஏவலைப் பேணுவோர் எவரையும் இழந்தாய்; அலக்கண் எய்தினாய்—துன்பமொன்றனையே பேறாகப் பெற்றாய். (4)

நின்னுணர் வல்லது நிகரின் மேலவர்
சொன்னது முணர்ந்திலை தொல்லை யூழினா
லிந்நிலை யாயினை யிறையை யெள்ளினாய்
முன்னவ னுயர்நிலை முழுதுந் தேர்ந்தநீ.

முன்னவன் உயர்நிலை முழுதும் தேர்ந்தநீ—முதல்வராகிய சிவபெருமானது உயர்ந்த இயல்பு முழுவதையும் என்பாற் கேட்டுத் தெளிந்த மகாபண்டிதனான நீ, தொல்லை ஊழினால் இறையை எள்ளினாய்—பழைய ஊழ்வினைப் பயனால் முழுமுதற் பொருளை நிந்தித்தாய்; நிகர் இல் மேலவர்—ஒப்பில்லாத திருநந்தி தேவர் முதலிய மேலோர்கள் சொன்னதும் உணர்ந்திலை—சொன்ன புத்திமதிகளையும் பொருள் செய்தாயல்லை; இந்நிலை ஆயினை—இவ்வாற்றால் இந்த நிலையை எய்தினாய்; நின் உணர்வு அல்லது—உன் அறிவு அறிவன்று. (5)

இயற்படு வளம்பெறீஇ யீசன் மேன்மைக
ளயர்த்தனை நின்னள வன்று மையலு
னுயிர்த்தொகை தமக்கெலா முள்ள தாதலான்
மயக்கினை யடைந்தனை மற்றென் செய்திநீ

இயல் படும் வளம் பெறீஇ—தகுதியமைந்த செல்வத்தைப் பெற்று, ஈசன் மேன்மைகள் அயர்த்தனை—சிவபெருமானின் மேன்மைகளை மறந்தாய்; நின் அளவு அன்று—செல்வம் வந்துற்றகாலைத் தெய்வத்தை மறத்தல் சிறப்பாக உன்னிடத்தில் மாத்திரம் உள்ளதொரு குற்றமன்று; மையல் தான் உயிர்த்தொகை தமக்கு எலாம் உள்ளது—இவ்வாறாய மயக்கந்தான் ஆன்மவர்க்கம் அனைத்துக்கும் பொதுவாய் அமைந்ததொரு குற்றமாம்; ஆதலால் நீ மற்று என் செய்தி மயக்கினை அடைந்தனை—ஆதலினாலே ஆன்மவர்க்கத்துட்பட்ட நீ வேறு என்ன செய்வாய், மயக்கம் அடைந்தாய். (6)

முற்றுணர் வெய்தியே முழுத ளித்திடப்
பெற்றவெங் கண்ணினும் பெரிது மாமயக்
குற்றன முற்பக லுதுகண் டின்றுபோ
னெற்றியங் கண்ணினா னருளி னீக்கினான்

முற்று உணர்வு எய்தி—சிவபெருமானுடைய திருவருளினாலே எல்லாவற்றையும் அறியும் முற்றறிவைப் பொருந்தி' முழுது அளித்திடப் பெற்ற—உலகம் முழுவதையும் படைத்துக் காக்க அதிகாரம் பெற்ற, எம் கண்ணினும்—பிரம விஷ்ணுக்களாகிய எங்களிடத்திலேயும், முன் பகல் பெரிதும் மா மயக்கு உற்றன—முன்னொரு காலத்திற் பெரிதும் இருண்ட மயக்கங்கள் உண்டாயின; உது நெற்றி அம் கண்ணினான் கண்டு—அதனை அழகிய நெற்றிக்கண்ணினையுடைய சிவபெருமான் கண்டருளி, இன்று போல் அருளின் நீக்கினான்—இன்று போல் அன்றும் திருவருளினாலே மயக்கத்தைப் போக்கியருளினார்.

ஈண்டு முற்றுணர்வு, இருதொழிற்கும் வேண்டிய உணர்வு. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலி னருளுடை யமல நாயகன்
பாதம தருச்சனை பரிவிற் செய்குதி
பேதுறு மிப்பவப் பெற்றி நீக்கியே
போதமொ டின்னருள் புரிவ னென்றலும்.

ஆதலின்—ஆதலினாலே, அருளுடை அமல நாயகன் பாதமது அருச்சனை பரிவில் செய்குதி—கருணாகரரும் நின்மலரு மாகிய சிவபெருமானுடைய திருவடிகளை அன்போடு அருச்சனை செய்யக்கடவை ; பேதுறும் இப்பவம் பெற்றி நீக்கி—துன்புறு கின்ற இந்தப் பாவகாரியமனைத்தையும் போக்கி, போதமொடு இன்னருள் புரிவன்—தம்மையறியும் ஞானத்தோடு கூடிய இனிய திருவருளை அப்பெருமான் புரிந்தருளுவர் ; என்றலும்—என்று பிதாவாகிய பிரமதேவர் கூறுதலும். (8)

மைதிகழ் முகத்தினன் மற்ற தற்கிசைந்
துய்திற முணர்த்தினை யுங்கள் கண்ணுமுன்
னெய்திய மையலு மெம்பி ரானருள்
செய்தது மியம்புதி தெளிதற் கென்னவே.

திகழ் மை முகத்தினன்—விளங்குகின்ற ஆட்டுமுகத்தனாகிய தக்கன், அதற்கு இசைந்து—சிவார்ச்சனை செய்தலாகிய அதற்கு உடன்பாட்டு, உய்திறம் உணர்த்தினை—பிதாவே அடியேன் உய்யுந் திறத்தை உணர்த்தியருளினீர் ; தெளிதற்கு—மேலும் தெளிவு உண்டாகும் பொருட்டு, முன் உங்கள் கண்ணும்—முன்பு பிரம விஷ்ணுக்களாகிய உங்களிடத்தும், எய்திய மையலும்—மயக்கம் உண்டாயதனையும், எம்பிரான் அருள் செய்ததும்—அம்மயக்கம் நீங்கும்படி எம்பெருமான் உங்களுக்கு அருள் செய்ததனையும், இயம்புதி—உரைத்தருள்வீராக ; என்ன—என்று பிரார்த்திக்க. (9)

பொன்னிருஞ் சததளப் போதின் மீமிசை
மன்னிய திசைமுகன் மதலை மாமுக
முன்னுற நோக்கியே முந்துங் கூறின
மின்னமு மக்கதை யியம்பு வோமென. 185788

பொன் இரும் சத தளப் போதின் மீ மிசை மன்னிய திசைமுகன்—பொன் மயமான பெரிய நூறு இதழ்கள் பொருந்திய தாமரை மலரின் மீது வீற்றிருந்த பிரமதேவர், மதலை மாமுகம் முன்னுற நோக்கி—புதல்வனாகிய தக்கனது ஆட்டு முகத்தை எதிருற முகஞ்செய்து, அக்கதை முந்தும் கூறினம் இன்னமும் இயம்புவோம் என—நமக்கு மயக்கம் வந்து நீங்கிய அக் கதையை முன்னருஞ் சொன்னோம் மயக்கத்தால் மறந்தாயாதலின் பின்னருஞ் சொல்வோம் என்று. (10)

நாலுள திசைமுக நாதன் றொல்லைநாண்
மாலொடு பற்பகன் மலைவு செய்துநா
மேலதோர் பொருளென விமலன் வந்தருள்
கோலம துன்னியே தொழுது கூறுவான்.

நாலுள திசைமுக நாதன்—நான்கு திசைக்கும் நான்கு முகங்களை யுடைய பிரமதேவர், தொல்லை நாள்—பழையதொரு காலத்திலே, மாலொடு பல் பகல் மலைவு செய்து—திருமாலோடு தாமும் பல நெடுங்காலம் போர்செய்து, நாம் மேலது ஓர் பொருள் என—ஒவ்வொருவரும் நாமே மேலானதாய ஒப்பற்ற ஏகமாய பரம் பொருள் என்று வாதிக்க, விமலன் வந்து—அச்சமயத்திலே தமக்கு மதியில் மயக்கமற்றவராகிய சிவபெருமான் தோன்றியருளி, அருள் கோலம் அது உன்னி—தம் மயக்கைப் போக்கித் தமக்கருள்செய்த சிவபெருமானது திருப்பெருங் கோலத்தைத் தியானித்து, தொழுது—வணங்கி, கூறுவான்—சொல்லுவார். (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேறு**

பத்திஞெடு நூறெதிர் படுத்தயுக நான்மை
யொத்தமுடி வெல்லையென தோர்பகல தாகு
மத்தகு பகற்பொழுது மந்தியொடு செல்ல
நத்தமுறு நான்றுயிலி னண்ணுவனவ் வேலை.

பத்திஞெடு எதிர்படுத்த நூறு நான்மை யுகம்—பத்திஞற் பெருக்கப்பட்ட நூறுகிய ஆயிரம் சதுர்யுகம், முடிவு ஒத்த எல்லை—இறுதியைப் பொருந்திய கால அறுதி, எனது ஓர் பகல் ஆகும்—எனக்கு ஒரு பகற் காலம் ஆகும்; அ தகு பகற்பொழுதும் அந்தியொடு செல்ல—அத்தகைய பகற்காலமும் அந்திக்காலத்துடன் கழிய, நத்தம் உறும்—இராக்காலம் வரும்; அ வேலை—அப்பொழுது, நான் துயிலின் நண்ணுவன்—நான் நித்திரை செய்வேன். (12)

வாளுமொடுங் கும்பரிதி மாமதி யொடுங்கு
நாளுமொடுங் குந்தமது நாளுமொடுங் குற்றே
கோளுமொடுங் குங்குலிச பாணிமுதல் வானோர்
கேளுமொடுங் கும்புவனி கேடுபடு மன்றே.

தமது நாளும் ஒடுங்குற்று—தத்தம் வாழ்நாளும் ஒடுங்கி, பரிதி மா மதி ஒடுங்கும்—சூரியனுஞ் சிறந்த சந்திரனும் ஒடுங்கும்; நாளும் ஒடுங்கும்—நட்சத்திரமும் ஒடுங்கும்; கோளும் ஒடுங்கும்—கிரகங்களும் ஒடுங்கும்; வாளும் ஒடுங்கும்—அவ்வாற்றுல் ஒளி என்பதும் இல்லையாம்; குலிச பாணி முதல் வானோர்கேளும் ஒடுங்கும்—வச்சிரபாணியான இந்திரன் முதலிய தேவச் சுற்றமும் ஒடுங்கும்; புவனி கேடு படும்—உலகம் அழியுமாம்.

வாள் இங்கே அக்கினி எனினுமாம். (13)

மண்ணுலகி லாருயிர் வறந்திறுதி யாகும்
விண்ணுறு பதங்களில் வியன்முனிவர் யாருந்
துண்ணெனா வெருக்கொடு துளங்கினர்கள் சூழா
வெண்ணுசன லோகமிசை யெய்துவர்க ளந்நாள்.

மண்ணுலகில் ஆர் உயிர் வறந்து இறுதியாகும்—மண்ணுலகிலுள்ள அரிய உயிர்கள் வறந்து அழியும்; விண் உறு பதங்களில் வியன் முனிவர் யாரும்—ஆகாய உலகங்களிலிருக்கின்ற பெருமை பொருந்திய முனிவர்கள் யாவரும், துண்ணென வெருக்கொடு துளங்கினர்கள் சூழா—துண்ணென்று வெருக்கொண்டு நடுங்கி ஆலோசித்து, எண்ணு சனலோக மிசை—மதிக்கப்படுகின்ற சனலோகத்தின் கண்ணே, அ நாள் எய்துவர்கள்—அந்த இராக்காலத்தில் அடைவார்கள். (14)

வாரிதிக ணாற்றிறமும் வல்லையி லெழுந்தே
யாரியை தவஞ்செய்பதி யாதியன வல்லாப்
பாரினை யருந்தியொரு பாகமதன் மேலு
மோரெழு பிலத்துலக முண்டுலவு மன்றே.

நால் திறமும்—நான்கு திக்கினும், வாரிதிகள் வல்லையில் எழுந்து—சமுத்திரங்கள் விரைந்தெழுந்து, ஆரியை தவம் செய் பதி ஆதியன அல்லாப் பாரினை ஒரு பாகம் அருந்தி—ஆரியையாகிய காமாட்சியம்மையார் தவஞ்செய்த பதியாகிய காஞ்சிபுரம் முதலிய புண்ணியத் தானங்களல்லாத பூமியின் ஒரு பாகத்தை விழுங்கி, அதன் மேலும்—அவ்வளவில் அடங்காமல் அதன்மேலும், ஓர் எழு பிலத்து உலகம் உண்டு உலவும்—ஏழு பாதாள உலகங்களையும் மூடிப்பரவும். (15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்டிகிரி மால்வரை யுடுத்தநில முற்றுங்
குண்டுறு பிலத்திளெடு கூடும்வகை வீட்டி
யண்டருல குண்டுநிமிர்ந் தப்புறனு மாகி
மண்டுபுன லேயுலகை மாற்றியிடு மன்றே

ஒண் திகிரி மால் வரை உடுத்த நிலம் முற்றும்—ஒள்ளிய பெரிய சக்கரவாள கிரி சூழ்ந்த நிலவுலகம் முழுவதும் குண்டு உறு பிலத்திளெடு கூடும்வகை வீட்டி—ஆழமான பிலங்களோடு ஒன்றுமாறு ஆழ்த்தி, அண்டர் உலகு உண்டு—தேவருலகத்தை உண்டு, நிமிர்ந்து அப்புறனும் ஆகி—மேற் சென்று அப்பாலுமாய், மண்டு புனலே—நிறைந்த சலப்பிரளயமே, உலகை மாற்றியிடும்—உலகத்தைத் தன்மயமாக மாற்றும். (16)

ஆனதொரு வேலையிலொ ராலிலையின் மீதே
மேனிலவு தண்மதி மிலைந்தவன் மலர்த்தா
டானக முறுத்தியொர் தனிக்குழவி யேபோற்
கானுறு துழாய்மவுலி கண்டுயிலு மாதோ

ஆனது ஒரு வேலையில்—ஒருமுறை அவ்வாருயதொரு சலப்பிரளயத்தில், ஓர் ஆலிலையின் மீது—அப்பிரளயத்தில் மிதந்து கொண்டிருந்ததோர் ஆலிலையின் மீது, மேல் நிலவு தண்மதி மிலைந்தவன் மலர்த்தாள் தான் அகம் உறுத்தி—ஆகாயத்தில் விளங்குகின்ற தண்ணிய சந்திரனைச் சூடிய சிவபெருமானுடைய மலரடிகளையே மனத்தின்கண் தியானித்துக் கொண்டு, ஓர் தனிக் குழவிபோல்—தன்னந்தனியானதொரு குழந்தையைப்போல், கான் உறு துழாய் மவுலி கண் துயிலும்-மணங் கமழுகின்ற துழாயணிந்த முடியினையுடைய திருமால் கண் துயிலுவாராயினர்.

கண்டுயிலு கின்றபடி கண்டுசன லோகத்
தண்டுமுனி வோர்புகழ வாங்னம் விழித்தே
பண்டைநில னேடவது பாதலம தாகக்
கொண்டன்மணி மேனியனொர் கோலவுரு வானன்.

கண் துயிலுகின்றபடி—திருமால் அறிதுயில் செய்கின்ற தன்மையை, சனலோகத்து அண்டு முனிவோர் கண்டு புகழ—சனலோகத்தைச் சேர்ந்து இருந்த முனிவர்கள் கண்டு புகழ்ந்து தோத்திரஞ்செய்ய, ஆங்னம் விழித்து—திருமால் அப்பொழுது துயிலுணர்ந்து, பண்டை நிலன் நேட—பழையதாகிய பூமியைத் தேட, அது பாதலமது ஆக—அப்பூமி பாதலத்தின் கண்ணதாக, கொண்டல் மணி மேனியன்—அழகிய மேகவர்ணரான திருமால், ஓர் கோல உரு ஆனன்—அப்பொழுது ஒரு பன்றி உருவங் கொண்டார். (18)

கோலமெனு மோருருவு கொண்டுபில மேகி
ஞாலமெவ ணுற்றதென நாடியது தன்னை
வாலிய வெயிற்றினிடை வல்லைகொடு மீண்டு
மூலமென வேநிறுவி மொய்ம்பினொடு போனன்.

கோலம் எனும் ஓர் உருவு கொண்டு—பன்றியென்று சொல்லப்படும் ஒப்பற்ற உருவத்தை எடுத்துக்கொண்டு, ஞாலம் எவண் உற்றது என நாடி—பூமி எவ்விடத்தது என்று தேடி, பிலம் ஏகி—பாதலத்தின்கட் சென்று, அது தன்னை—அப்பூமியை, வாலிய எயிற்றினிடை வல்லைகொடு மீண்டு—வெள்ளியதொரு தந்தத்தால் விரைந்தெடுத்துத் தாங்கிக்கொண்டு மீண்டு, மூலம் எனவே மொய்ம்பினொடு நிறுவிப் போனன்—பண்டு போலவே வலியுடன் அதனை வைத்துப் போயினர். (19)

அற்பொழுது நாலுகமொ ராயிரமு மேக
வெற்பொழுது தோன்றியதி யான்றுயி லுணர்ந்தே
கற்பனை யியற்றிய கருத்தினினை போழ்தி
னிற்புழி யடைந்தன நெடும்புணரி யெல்லாம்.

அல்பொழுது நாலுகம் ஓராயிரமும் ஏக—இராப்பொழுதாகிய ஆயிரஞ் சதுர்யுகமுங் கழிய, எல்பொழுது தோன்றியது—பகற்பொழுது ஆரம்பமானது; யான் துயில் உணர்ந்து—உடனே யான் துயிலெழுந்து, கற்பனை இயற்றிய—கற்பனையாகிய சிருட்டியைச் செய்யும்பொருட்டு, கருத்தில் நினை போழ்தில்—மனத்தில் நினைத்தபோது, நெடும் புணரி எல்லாம் நிற்புழி அடைந்தன—பெருகி நீண்டெழுந்த சமுத்திரம் யாவும் பண்டு நிற்குமிடத்திற் சென்று நின்றன.

திருமால் பூமியை நிறுவிப் போக, இருளும் விடிய, பிரமா சிருட்டியை ஆரம்பித்தாரென்க. (20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்திகெழு பாற்கட லராவணையின் மீதே
திருத்திகழு மார்புடைய செம்மல்புவி தன்னை
யிருத்தின மெயிற்றினி லெடுத்தென நினைத்தே
கருத்தினி லகந்தைகொடு கண்டுயில லுற்றான்

திரு திகழும் மார்பு உடைய செம்மல்—பூமியை நிறுவிப்போன திரு மறுமார்பினரான திருமால், அருத்தி கெழு பாற்கடல் அரா அணையின் மீது—விருப்பம் மிக்க பாற்சமுத்திரத்திலே சர்ப்ப சயனத்தின்மீது, புவி தன்னை எயிற்றினில் எடுத்து இருத்தினம் என நினைத்து—பூமியை எயிற்றாலெடுத்து நிறுத்தினோம் என்று நினைத்துக்கொண்டு, கருத்தினில் அகந்தை கொடு—அதனாலே மனத்தின்கண்ணே அகங்காரத்தைச் சுமந்துகொண்டு, கண்துயிலல் உற்றான்—பகலிரவற்ற யோக நித்திரையைச் செய்தார். (21)

ஆனபொழு தத்தினி லளப்பிலிமை யோரைத்
தானவரை மானுடவர் தம்மொடு விலங்கை
யேனைய வுயிர்த்தொகையை யாவையு மளித்தே
வானகமும் வையகமு மல்கும்வகை வைத்தே.

ஆன பொழுதத்தினில்—அப்பொழுது, அளப்பில் இமையோரை தானவரை மானுடவர் தம்மொடு விலங்கை—அளவற்ற தேவர்களையும் அசுரர்களையும் மனிதர்களையும் விலங்குகளையும், ஏனைய உயிர்த் தொகையை—மற்றைய உயிர்க் கூட்டங்களையும், யாவையும் அளித்து—யாவற்றையுஞ் சிருட்டிசெய்து, வானகமும் வையகமும் மல்கும் வகை வைத்து—விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அவைகள் விருத்தியுறும் வண்ணஞ் செய்து. (22)

மன்னியலு மிந்திரனை வானரசி னுய்த்தே
யன்னவ னொழிந்ததிசை யாளர்களை யெல்லாந்
தந்நிலை நிறுத்தியது தன்னைநெடி துன்னி
யென்னையல தோர்கடவு ளின்றென வெழுந்தேன்.

மன இயலும் இந்திரனை வான் அரசில் உய்த்து—இறைமை பொருந்துகின்ற இந்திரனைச் சுவர்க்க அரசியலில் இருத்தி, அன்னவன் ஒழிந்த திசையாளர்களை எல்லாம்—அவ்விந்திரனொழிந்த திக்குப்பாலக ரனைவரையும், தம்நிலை நிறுத்தி—தத்தம் நிலையில் நிறுவி, அதுதன்னை—இவ்வாறு செய்ததாகிய அச் செயற்கருஞ் செயலை, நெடிது உன்னி—யானன்றி வேறுயார் இது செய்யமுடியும் என்று நெடுநேரஞ் சிந்தித்து, என்னை அலது ஓர் கடவுள் இன்று என எழுந்தேன்—என்னையன்றி ஒரு முழுமுதற்கடவுள் வேறு இல்லை என்று அகங்கரித்தெழுதேன். (23)

துஞ்சலுறு காலைதனிற் றுஞ்சுமெழும் வேலை
யெஞ்சலி லுயிர்த்தொகுதி யாவுமெழும் யானே
தஞ்சமெனை யன்றியொரு தாதையிலை யார்க்கும்
விஞ்சுபொருள் யானென வியந்தெனை நடந்தே.

துஞ்சல் உறு காலைதனில் துஞ்சும்—யான் துயிலும்பொழுது உலகம் ஒடுங்கும்; எழும் வேலை—யான் துயிலெழும்போது. எஞ்சல் இல் உயிர்த்தொகுதி யாவும் எழும் – குறைவற்ற உயிர்த்தொகுதி அனைத்துமாகிய உலகந் தோன்றும்; தஞ்சம் யானே—அந்தமும் ஆதியுமாய் உலகத்துக்குப் பற்றுக்கோடாவேன் யானே; எனை அன்றி ஒரு தாதை இலை—என்னையன்றி உலகத்துக்கு ஒரு கருத்தா இல்லை; யார்க்கும் விஞ்சு பொருள்யான்—எவர்க்கும் மேலாகிய பரம்பொருள் யானே; என எனை வியந்து நடந்து—என்று என்னை யானே வியந்து நடந்து. (24)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லலுறு மேலுலகு மாதிரமு மேனைத்
தொல்லுலகு மேருவொடு சுற்றுகட லேழு
மொல்லென விரைத்தெழு முயிர்த்தொகையு மல்லா
வெல்லையில் பொருட்டிறனும் யானெடிது நோக்கி.

மல்லல் உறு மேல் உலகும்–பெருமை மிக்க மேலுலகங்களையும், மாதிரமும்–திக்குக்களையும், ஏனைய தொல் உலகும்–மற்றைய பழைய உலகங்களையும். மேருவொடு சுற்று கடல் ஏழும்–மோருமலையையும் சூழகின்ற ஏழு கடல்களையும், ஒல்லென இரைத்து எழும் உயிர்த்தொகையும்–ஒல்லென்று ஒலித்தெழுகின்ற உயிர்க் கூட்டங்களையும், அல்லா எல்லையில் பொருள் திறனும்–இவையல்லாத பொருள் வகைகளையும், யான் நெடிது நோக்கி–யான் நீண்ட நேரம் உற்று நோக்கி. (25)

இப்பொரு ளனைத்துமுனம் யான்பயந்த வென்று
லொப்பிலை யெனக்கென வுளத்திடை மதித்தே
னப்பொழுதி லாரமுத வாழியிடை யாழிக்
கைப்புய லகந்தையொடு கண்டுயிலல் கண்டேன்.

இ பொருள் அனைத்தும்–இப் பிரபஞ்சப் பொருள் அனைத்தும், முனம்யான் பயந்த என்றால்–முதற்கண் யானே சிரிட்டித்தனவானால், எனக்கு ஒப்பு இலை என உளத்திடை மதித்தேன்–எனக்கு ஒப்பாவார் பிறர் இலர் என்று மனத்தின்கண் என்னை யானே மதித்து அகங்கரித்தேன்; அப்பொழுதில்–அதே சமயத்தில், ஆர் அமுத ஆழி இடை–அரிய அமுதத்தையுடைய பாற் சமுத்திரத்தில், ஆழிக் கைப்புயல்–சக்கரத்தைத் தரித்த கையினையுடைய மேகம் போன்ற திருமால், அகந்தையொடு–என்னைப் போலவே தாமும் அகங்கரித்துக்கொண்டு, கண் துயிலல் கண்டேன்–அறிதுயில் புரிவதனைக் கண்ணுற்றேன். (26)

அன்றவனை மாலென வறிந்தன னறிந்துஞ்
சென்றன னகந்தையொடு செய்யதிரு வைகு
மன்றன்மணி மார்பமிசை வண்கைகொடு தாக்கி
யின்றுயி லுணர்ந்திடுதி யென்றலு மெழுந்தான்

அன்று அவனை மால் என அறிந்தனன் அறிந்ததும்–அப்பொழுது அங்கே துயில்செய்பவரைத் திருமால் என்று அறிந்திருந்தேனாயினும், அகந்தையொடு சென்றனன்–அறியாதேன்போன்று அகங்காரத்தோடு அவர் அருகிற் சென்று, செய்ய திரு வைகும் மன்றல் மணி மார்பம் மிசை வண் கைகொடு தாக்கி–செம்மையாகிய இலக்குமி வசிக்கின்ற மணங் கமழாநின்ற கௌத்துவ மணி யணிந்த மார்பத்தின்மீது வண்மை யமைந்த கையினாலடித்து, இன் துயில் உணர்ந்திடுதி என்றலும் எழுந்தான்–இனிய துயிலுணர்ந்தெழுதி என்றவுடன் அவர் எழுந்தார். (27)

எற்றெழு முராரிதனை யாரையுரை யென்றே
சாற்றுதலும் யாமுனது தாதையறி யாய்கொ
லென்றலைகொ ளைந்தவென நன்றென நகைத்துத்
தேற்றிடினு நீதுயி றெளிந்திலைகொ லென்றேன்

எற்று–அடித்த அடியை எற்று, எழு முராரி தனை–துயிலெழாநின்ற முராரியாகிய திருமாலை, யாரை உரை என்று சாற்றுதலும்–நீ யாவன்சொல் என்று யான் வினவுதலும், நால் தலை கொள் மைந்த–நான்கு தலைகளையுடைய மைந்தனே, யாம் உனது தாதை–யாம் உன்பிதா; அறியாய்கொல்–நீ இதனை அறியாயோ; என்–என்று திருமால் கூற, நன்று என நகைத்து–நான் நன்று என்று சிரித்து, தேற்றினும்–நான் துயிலுணர்த்தியவழியும், நீ துயில் தெளிந்திலைகொல் என்றேன்–இன்னும் நீ துயிலுணர்ந்தாயல்லைப்போலும் என்றேன்.

துயிலுணர்ந்தனையாயின் இவ்வாறு பிதற்றாய் என்றவாறும். எற்று என்பதற்கு எதிர்த்து என்றுரைப்பினும் அமையும். (28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையென வந்தவர்க டாமுதவு கின்ற
மைந்தர்க டமக்குரைசெய் வாசகம தென்ன
முந்துற வெமக்கிது மொழிந்ததியல் பன்று
லெந்தையென வேநினைதி யாம்பிரம மேகாண்.

தந்தை என வந்தவர்கள்-பிதா என்றிருப்பவர்கள், தாம் உதவுகின்ற மைந்தர்கள் தமக்கு-தாம் பெற்ற புத்திரர் களுக்கு, உரைசெய்வாசகமது என்ன-சொல்லுகின்ற வாசகத்தை ஒப்ப, முந்துஉற-எமக்கெதிரில், எமக்கு-உன் தந்தையாகிய எமக்கு, இது மொழிந்தது இயல்பு அன்று-திருமாலே நீ இந்த வாய்பாட்டை ஒப்பித்தது முறையாகாது; எந்தை என நினைதி-எம்மை நீ உன் பிதா என்று கருது; யாம் பிரமம் காண்-நாமே பரப்பிரமம் இதனை அறிகுதி. (29)

யாம் மரியாதைப் பன்மை.

உந்தியி லிருந்துவரு முண்மையுண ராமே
மைந்தனென நீயெமை மனத்திநினை குற்று
யிந்தன முதித்திடு மெரிக்கடவு ளுக்குத்
தந்தையது வோவிது சழக்குரைய தன்றே.

உந்தியிலிருந்து வரும் உண்மை உணராமே-உனது உந்திக்கமலத்திலிருந்து யாம் தோன்றிய தத்துவத்தை ஆராயாமல், எமை மைந்தன் என நீ மனத்தில் நினைகுற்றாய்-எம்மை உன் மைந்தனென்று நீ மனத்தில் நினைத்துக் கொண்டாய்; உதித்திடும் எரிக் கடவுளுக்கு இந்தனம் தந்தையோ-தன்பால் உதிக்கின்ற அக்கினிதேவனுக்கு விறகு தந்தையாகுமோ; இது சழக்குரை-இவ்வாற்றால் எம்மை மைந்தன் என்று நீ செப்பிய இது பொய்யுரையாம். (30)

அது, பகுதிப் பொருள் விகுதி.

நின்னுடைய தாதையென நீயுனை வியந்தா
யன்னதை விடுக்குதி யருந்தவ வலத்தான்
முன்னமொரு தூணிடை முளைத்தனை யவற்றா
லுன்னிலது வேமிக வுயர்ந்தபொரு ளாமோ.

நின்னுடைய தாதை என-உன்னுடைய பிதா நான் என்று எம்மை நோக்கிக் கூறி, நீ உனை வியந்தாய்-நீ உன்னை வியந்துரைத்தாய்; அன்னதை விடுக்குதி-அவ்வாறுரைப்பதை இனி விட்டுவிடு; அரும் தவ வலத்தால் முன்னம் ஒரு தூணிடை முளைத்தனை-அரிய தவவலியினாலே முன்னொரு காலத்தில் எழு தூணின்கண் நீநரசிங்கமாயந் தோன்றினாய்; அ அற்றால்-அந்தத் தன்மையினால், அது -அந்தத் தூண், உன்னில் மிக உயர்ந்த பொருள் ஆமோ-உன்னிலும் பார்க்க மிகவுயர்ந்ததொரு பொருளாகுமா. (31)

துய்யமக னும்பிருகு சொற்றசப தத்தா
லையிரு பிறப்பினை யடிக்கடி யெடுத்தாய்
மெய்யவை யனைத்தையும் விதித்தனம் விதித்தெங்
கையது சிவந்துளது கண்டிடுதி யென்றேன்.

துய்ய மகனும் பிருகு-தூய்மைபொருத்திய எம்முடைய புதல்வனான பிருகு முனிவன், சொற்ற சபதத்தால்-உனக்கிட்ட சாபத்தால், ஐயிருபிறப்பினை அடிக்கடி எடுத்தாய்-பத்துப் பிறப்புக்களை அடிக்கடி அடைந்தாய்; மெய் அவை அனைத்தையும் விதித்தனம்-நீ பிறக்குந்தோறும் உரிய உடம்புகள் அனைத்தையும் யாமே படைத்தோம்; விதித்து எம்கை சிவந்துளது-உனக்கு உடம்புகளைப் படைத்துப் படைத்து எமது கை கன்றிச் சிவந்துவிட்டது; கண்டிடுதி (என்றேன்-இதோ எமது கையை உற்று நோக்கு என்றேன். (32)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

அன்றவற் கெதிர்புகுந் தனையசொற் புகறலுங்
குன்றெடுத் திடுகரக் கொண்டல்போன் மேனியா
னன்றெனச் சிரமசைஇ நகைசெயா வெகுளியாற்
பொன்றளிர்க் கரதலம் புடைபுடைத் துரைசெய்வான்.

அன்று அவற்கு எதிர் புகுந்து அனைய சொல் புகறலும்-அன்று அத்திருமாலுக்கு எதிரே சென்று அவ்வாருகிய சொற்களைச் சொல்லுதலும், குன்று எடுத்திடு கரக் கொண்டல் போல் மேனியான்-ஒரு காலத்திற் கோவர்த்தனகிரியைக் குடையாக எடுக்கும் மேகவர்ணரான திருமால், நன்று என சிரம் அசைஇ--நன்று என்று சிரக்கம்பஞ் செய்து, நகை செயா-சிரித்து, வெகுளியால்-கோபத்தினுலே, பொன் தளிர்க் கரதலம் புடைபுடைத்து உரை செய்வான்-அழகிய தளிர் போன்ற திருக் கரங்களை ஒன்ருேடொன்று பலமுறை தட்டிக் கூறுவார். (33)

நச்சராப் பூண்டிடு நம்பனுன் சென்னியி
னுச்சியந் தலையினை யுகிரினுற் களைதலு
மச்சமாய் வீழ்ந்தனை யதுபடைத் தின்னமும்
வைச்சிலாய் நன்றுநீ மற்றெமைத் தருவதே.

நச்சு அரா பூண்டிடும் நம்பன்-நஞ்சினையுடைய சர்ப்பத்தைத் தரித்த சிவபெருமான், உன் சென்னியில் உச்சி அம் தலையினை உகிரினுல் களைதலும்-உன் தலைகளில் உச்சிகண்ணுள்ள அழகிய தலையை நகத்தினுலே கிள்ளி எடுத்த லும், அச்சமாய் வீழ்ந்தனை-அச்சமுற்று விழுந்தாய் ; அது படைத்து இன்னமும் வைச்சிலாய்-அத் தலையை உண்டாக்கி இன்ன மும் வைத்துக் கொண்டாயல்லை ; நீ-இவ்வியல்பினையுடைய நீ, எமைத் தருவது நன்று-எம்மைப் படைப்பதென்பது நன் ருயிருக்கிறது. (34)

நேயமாய் முன்னரே நின்னையீன் றுதவிய
தாயும்யா மன்றியுந் தந்தையும் யாமுனக்
காயதோர் கடவுள்யா மடிகள்யா மைந்தநம்
மாயையா லின்றிவண் மதிமயக் குறுதிகாண்.

நேயம் ஆய் முன்னர் நின்னை ஈன்று உதவிய தாயும் யாம்-விருப்ப முற்று முன் உன்னைப் பெற்றளித்த தாயும் யாமே ; அன்றியும் தந்தையும் யாம்-அல்லாமலும் உன் தந்தையும் யாமே ; உனக்கு ஆயது ஓர் கடவுள் யாம்-உனக்கு நீ வணங்குதற்குரியதொரு தெய்வமும் யாமே ; அடிகள் யாம்-மருவும் யாமே ; மைந்த-மகனே, நம் மாயையால் இன்று இவண் மதி மயக்குறுதி-நம்முடைய மாயையினுலே இன்று இவ்விடத்திற் புத்தி மயங்குதலைப் பொருந்துகின்ருய். (35)

பொன்னலா தாங்கொலோ பூணெலா மிறைபுரி
மன்னலா தாங்கொலோ மநில மாநிலந்
தன்னலா தாங்கொலோ தகுவதோர் வளமதி
லென்னலா தாங்கொலோ வெச்சரா சரமுமே.

பொன் அலாது பூண் எலாம் ஆம் கொல்-பொன்னையின்றி ஆபரண வகையெல்லாம் உண்டாகுமோ ; இறை புரி மன் அலாது மா நிலம் ஆம் கொல்-அரசு புரியும் அரசனையின்றிப் பெரிய நிலவுலகம் நடைபெறுமா ; மாநிலம் தன் அலாது தகுவதோர் வளம் ஆம் கொல்-பெரிய நிலத்தையின்றித் தகுதி பொருந்திய ஒப்பற்ற வளம் உளதாமோ ; அதில் என் அலாது எ சராசரமும் ஆம் கொல்-அதுபோல என்னையின்றி எந்தச் சாரசரமுந் தோன்றுமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுவிப் போனுநா னெண்ணுகின் றேனுநான்
கண்ணுதற் பொருளுநான் காண்டகும் புலனுநா
னண்ணுதற் கரியனு னாரணக் கடவுளுன்
விண்ணகத் தலைவனுன் வேதமும் பொருளுநான்.

எண்ணுவிப்போனும் நான்-உயிர்களை எண்ணுவிப்போனுகிய காட்டுவானும் யான்; எண்ணுகின்றேனும் நான்-உயிரினுள் ஒன்றுயிருந்து எண்ணுகின்றவனுகிய காண்பவனும் யான்; கண்ணுதல் பொருளும் நான்-காணத்தகும் ஐம்புலமாகிய காட்சியும் யான்; நண்ணுதற்கு அரியன் நான்-அணுகுதற்கரியவனும் யான்; நாரணக் கடவுள் நான்-நராயணனுகிய கடவுளும் யான்; விண்ணகத் தலைவன் நான்-இந்திரனும் யான்; வேதமும் பொருளும் நான்-வேதமும் யான் வேதப் பொருளும் யான். (37)

கண்ணுதல்-கருதுதல், காண்பவன் முதலிய திறமும் என்னுங் கடவுள் வாழ்த்துச் செய்யுளை நோக்குக.

ஆதிநா னுருவுநா னருவுநா னிருளுநான்
சோதிநா னத்தனுன் றூயனுன் மாயனுன்
யாதுநான் பூதநான் யாருநான் சங்கரன்
பாதிநா னவனுநான் பரமெனும் பொருளுநான்.

ஆதி நான்-எவற்றிற்கும் முதலும் நான்; உருவும் நான் அருவும் நான்-உருவமும் நான் அருவமும் நான்; இருளும் நான் சோதி நான்-இருளும் நான் ஒளியும் நான்; அத்தன் நான்-பிதாவும் நான்; தூயன்நான் மாயன் நான்-தூயவனும் நான் மாயவனும் நான்; யாதும் நான் யாரும் நான்-யாவதும் நான் யாவரும் நான்; பூதம் நான்-பூதங்களும் நான்; சங்கரன் பாதி நான் அவனும் நான்-சிவனது பாதியாகிய சத்தியும் நான் சிவனும் நான்; பரன் எனும் பொருளும் நான்-பரம்பொருளும் நான். (38)

என்றுபற் பலவுரைத் திடுதலும் யானெதிர்
சென்றுருத் திருவருஞ் செருவினைப் புரிதுமேல்
வென்றியுற் றவரரோ மேலையோ ரெழுகென
வன்றிறற் போர்செய்வான் வந்தனன் மாலுமே.

என்று பற்பல உரைத்திடுதலும்-என்று பலபலவாறு திருமால் கூறுநிற்ப, யான் எதிர் சென்று-யான் திருமாலுக்கு எதிரே சென்று, இருவரும் உருத்துச் செருவினைப் புரிதும்-நாம் இருவோமுங் கோபித்துப் போரினைச் செய்வோம்; ஏல்-நீ போரை ஏற்றுக்கொள்; வென்றியுற்றவர் மேலையோர்-போரில் வெற்றி பெற்றோர் மேலோர் ஆவர்; எழுக என-போருக்கு எழுக என்று யான் அறை கூவ, மாலும் வன் திறல் போர் செய்வான் வந்தனன்-திருமாலும் வலிய திறலமைந்த போர்செய்யும் பொருட்டு உடன்பட்டு வந்தார்.

அரோ, அசை. (39)

ஏற்றெழுந் தோர்சிலை யேந்தியே வாங்கிமால்
கூற்றிரும் படைமுதற் கொடியவெம் படையெலா
மாற்றருந் தன்மையால் வலலையுய்த் திடுதல்கண்
டாற்றினன் குசைகளா லனையவெம்படை தொடா.

மால் ஏற்று எழுந்து-திருமால் போரேற்றெழுந்து, ஓர் சிலை ஏந்தி வாங்கி-ஒரு வில்லினைத் தாங்கி வளைத்து, கூற்று இரும் படை முதல் கொடிய வெம் படை எலாம்-பெரிய யமப்படை முதலிய மிகக் கொடிய படைகள் அனைத்தையும், மாற்றரும் தன்மையால் எல்லை உய்த்திடுதல் கண்டு-தடுத்தற்கரியதொரு பிரகாரம் விரைந்து செலுத்துவது கண்டு, அனைய வெம் படை குசைகளால் தொடா ஆற்றினன்- அவ்வப் படைகளை யானுந் தருப்பைகளாற் பாவனை செய்து செலுத்தும் போர் புரிந்தேன். (40)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

ஆங்கவை யழிவுற வரியுந் தன்படை
வாங்கினன் விடுத்தலும் வருதல் கண்டியான்
பாங்கரி னின்றவென் படையை யங்கையிற்
றுங்கிநின் றுய்த்தனன் றடுத்து மீண்டதே.

அரியும்-திருமாலும், ஆங்கு அவை அழிவு உற-அவ்விடத்திலே தாம்விட்ட அப்படைக்கலங்கள் அழிய, தன் படை வாங்கினன் விடுத்தலும்- தமது நாராயணப்படையை எடுத்து விடுக்க, வருதல் கண்டு-அது என்மேல் வருதலைக் கண்டு, யான் பாங்கரில் நின்ற என படையை-யான் என்பக்கலிலிருந்த பிரமப் படையை, அகம் கையில் தாங்கி நின்று உய்த் தனன்-கையகத்தே எடுத்துச் செய்யவேண்டியது செய்து நின்று செலுத்தினேன்; தடுத்து மீண்டது-அது நாராயணப் படையைத் தடுத்து என்பால் மீண்டது. (41)

அப்படை மீண்ட பி னாதி யாகிய
வொப்பருஞ் சிவனளித் துளது புங்கவ
ரெப்பெரும் படைக்குமோ ரிறைவ னாயது
மைப்புயன் மேனிமால் வழுத்தி வாங்கினான்.

அ படை மீண்டபின்-யான் விடுத்த பிரமப்படை நாராயணப் படையைத் தடுத்து என்பால் மீண்டபின், ஆதி ஆகிய ஒப்பு அரும் சிவன் அளித்துளது-ஆதியாகிய ஒப்பில்லாத சிவபெருமான் கொடுத்தருளியது, புங்கவர் எப்பெரும் படைக்கும்-தேவர்களாகிய நம்மவரின் பெரிய படைகளனைத்துக்கும், ஓர் இறைவன் ஆயது-ஒப்பற்ற நாயகம் ஆனது ஆகிய சிவப்படையை மை புயல் மேனி மால் வழுத்தி வாங்கினான்-கரிய முகில் போலும் மேனியை யுடையாராகிய திருமால் பூசித்து எடுத்தார்.

எம் பெரும்படை, எதனை நோக்கி வலித்தல் விகாரமெய்திய தெனினுமாம். (42)

மஞ்சன முதலிய மறுவில் பூசனை
நெஞ்சுறு புலன்களி னிரப்பி யோச்சலு
மெஞ்சலி லமரர்க ளிரிய மேற்செலு
நஞ்சினுங் கொடிதென நடந்த வேலையே.

மஞ்சனம் முதலிய மறுவில் பூசனை-திருமஞ்சனம் முதலிய குற்றமற்ற பூசனையை, நெஞ்சுறு புலன்களின் நிரப்பி-மனத்தின் வழிப்படுகின்ற புலன்களாற் செய்து முடித்து, ஓச்சலும் விடுத்தலும், எஞ்சல் இல் அமரர்கள் இரிய- அழிதலில்லாத தேவர்கள் அஞ்சி ஓடும்படி, மேல் செலும் நஞ்சினும் கொடிது என-அவர்மேற் செல்லாநின்ற ஆலகாலத்தினுங் கொடியது என்று சொல்லும்படி, நடந்த வேலை-திருமால் விடுத்த சிவப்படை வந்த சமயத்தில். (43)

முன்னமே யெனக்குமம் முக்க ணாயக
னன்னதோர் படையளித் தருளி னானதை
யுன்னியே வழிபடீஇ யொல்லை யுய்த்தனன்
வன்னிமேல் வன்னிசெல் வண்ண மென்னமே.

அ முக்கண் நாயகன் எனக்கும் முன்னம் அன்னது ஓர் படை அளித்தருளினான்-அந்த மூன்று கண்களையுடைய சிவபெருமான் திருமாலுக்குப் போலவே எனக்கும் முன்னர் அத்தன்மைத்தாயதொரு சிவப்படையைத் தந்தருளியிருந் தார்; அதை உன்னி வழிபடீஇ—அச் சிவப்படையைத் தியானித்துப் பூசனை செய்து, வன்னிமேல் வன்னி செல் வண்ணம் என்ன-அக்கினி மீது அவ்வாறுயதோரக்கினி செல்லும் வண்ணம் போலச் செல்லும் படி, ஒல்லை உய்த்தனன்-விரைந்து யானுஞ் செலுத்தினேன். (44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருதிறத் திருவரு முகுற்றி யேவிய
வரனருள் பெரும்படை தம்மி லாடல்செய்
தெரிகனற் கற்றைகள் யாண்டுஞ் சிந்தியே
திரிதலுற் றுலகெலாஞ் செற்று லாயவே.

இருவரும் உகுற்றி எவிய—இருவரும் பூசனையாதியன செய்து செலுத்திய, அரன் அருள் ஒரு திறத்துப் பெரும்படை சிவபெருமானருளிய ஒரே யியல்பினையுடைய பெரிய சிவப்படைகள், தம்மில் ஆடல் செய்து—தம்முட் போராடல் செய்து, யாண்டும் எரி கனல் கற்றைகள் சிந்தி—எவ்விடத்திலும் எரிகின்ற தீக்கற்றைகளைச் சிந்தி, உலகு எலாம் செற்று—உலகம் முழுவதையும் அழித்து, திரிதலுற்று உலாய—உலாவித் திரிந்தன. (45)

அப்படை திரிதலு மவைகள் வீசிய
துப்புறழ் கொழுங்கன ரெல்லை வானினு
மிப்புவி மருங்கினு மீண்ட வானவர்
வெப்புற விரிந்தனர் விதிர்ப்புற் றேங்குவார்.

அ படை திரிதலும்—அப் படைகள் அவ்வாறு உலாவித் திரிதலும், அவைகள் வீசிய துப்புறழ் கொழும் கனல்—அப்படைகள் சொரிந்த வலிமை மிக்க கொழுமையான அக்கினி, தொல்லை வானினும்—பழைமையாகிய வானுலகத்தும் இ புவி மருங்கினும்—இந்த மண்ணுலகத்திலும், ஈண்ட—நெருங்கிச் செறிய, வெப்பு உற—வெப்பம் மிகுதலால், வானவர் விதிர்ப்புற்று எங்குவார் இரிந்தனர்—தேவர்கள் நடுக்குற்று ஏங்கி ஓடுவாராயினர். (46)

வீண்டன ரொருசிலர் வெதும்பி விம்மியே
மாண்டன ரொருசிலர் வந்த நஞ்சமுண்
டாண்டவர் கழலிணை யடைதும் யாமெனுக்
காண்டகு கயிலையின் கண்ணுற் றூர்சிலர்.

ஒருசிலர் வீண்டனர்—ஒரு சிலர் தாம் தாம் நிற்குமிடத்தைவிட்டு ஓடினார்கள்; ஒரு சிலர் வெதும்பி விம்மி மாண்டனர்—ஒருசிலர் வெதும்பி அழுது இறநதார்கள்; சிலர் வந்த நஞ்சம் உண்டு ஆண்டவர் கழல் இணை யாம் அடைதும் எனு—சிலர் எழுந்த நஞ்சையுண்டு நம்மை ஆண்டருளிய சிவபெருமானுடைய கழலணிந்த திருவடியிணையை யாம் சரண் அடைவோம் என்று, காண் தகு கயிலையின்கண் உற்றூர்—அழகு பொருந்தியதிருக்கைலாச மலைக்கட் சென்றார்கள். (47)

விண்டனர் நீண்டது; விகாரம்.

காரெலாங் கரிந்தன ககனந் தன்னொடு
பாரெலா மெரிந்தன பெளவப் பாற்படு
நீரெலாம் வறந்தன நிரந்த பல்லுயிர்ப்
பேரெலாந் தொலைந்தன பின்னும் போர்செய்தேம்.

கார் எலாம் கரிந்தன—முகில்கள் யாவுங் கரிந்தன; ககனம் தன்னொடு பார் எலாம் எரிந்தன—ஆகாயமும் பூமி முழுவதும் எரிந்தன; பெளவப் பாற்படும் நீரெலாம் வறந்தன—சமுத்திரத்தின்கட் பொருந்திய நீர் முழுவதும் வறந்தன; நிரந்த பல் லுயிர்ப்பேர் எலாம் தொலைந்தன—செறிந்த பலவாகிய உயிர் என்று பெயர் சொல்லப்படுவன யாவும் அழிந்தன; பின்னும் போர் செய்தேம்—இங்ஙனமாயபோதும் போரை நிறுத்திலேமல்லோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவா றமர்புரிந் திட்ட காலேயிற்
றந்தையா ரருளினுற் றமியன் மாமுகம்
வந்துநா ரதனெனு மறுவின் மாமுனி
சிந்தைசெய் தெமக்கிவை செப்பன் மேயினுன்.

இந்தவாறு அமர் புரிந்திட்ட காலேயில்—இவ்வண்ணம் போர்புரிந்த சமயத்தில், தந்தையார் அருளினுல்—பரமபிதாவாகிய சிவபெருமானது திருவருளால், நாரதன் எனும் மறு இல் மாமுனி—நாரதர் என்கின்ற மாசற்ற மகத்துவம் பொருந்திய முனிவர், தமியன் மாமுகம் வந்து—தமியேனுடைய பெருமைபொருந்திய முகத்தில் அவதரித்து, சிந்தை செய்து—தியான பரராய், எமக்கு இவை செப்பல் மேயினுன் எம்மிருவருக்கும் இவற்றைச் செப்புவாராயினுர்.

தமியேனின் சிறந்த முகத்துக்கு எதிரேவந்து என்றுரைப்பாருமுளர்.

நீர்முத லுமென நினேந்து கூறியே
போர்முத லேசில புரிகின் றீர்கொலா
மோர்முத லன்றியே யில்லே யுங்களி
லார்முத லிருவரு மன்ன பண்பினீர்.

நீர்—நீவிர், நாம் முதல் என நினேந்து கூறி—தாம் பிரமம் என்று நினேத்தும் உரைத்தும், போர் முதல் சில புரிகின்றீர் கொல்—போர் முதலிய சிலவற்றைச் செய்துகொண்டிருக்கின்றீர்கள் போலும்; ஓர் முதல் அன்றி இல்லேயே—முதற்பொருள் ஒன்றேயன்றி இரண்டு இல்லேயே; இருவரும் அன்ன பண்பினீர்—நீவிரோ இருவீரும் நாம் பிரமம் என்பதில் ஒத்த பண்பினேயுடையீராயிருக்கின்றீர்; உங்களில் ஆர் முதல்—நும்பண்பு இங்ஙனமாயின் உங்களிருவரில் யார் பிரமப்பொருள் சொல்லுங்கள். (50)

பொருசமர் கருதியே புகுந்த போழ்தினு
முரியதோர் படையல துலகந் தீப்பதோர்
வெருவரும் பெரும்படை விடுத்தி ரப்படை
யருளிய கடவுளே யயர்த்திர் போலுமால்.

பொரு சமர் சருதி—பிரம நிச்சயத்தின்பொருட்டுப் பொருகின்ற போரை மேற்கொண்டு, புகுந்த போழ்தினும்—நீங்கள் நடந்துகொண்ட சமயத்திலும், உரியது ஓர் படையலது—உங்களுக்குரியதொரு படையல்லாததாகிய, உலகம் தீப்பது ஓர் வெருவரும் படை விடுத்திர்—உலகத்தை அழிப்பதோரச்சந்தரும் பெரும்படையைப் பிரயோகஞ் செய்தீர்களே அ படை அருளிய கடவுளே அயர்த்திர் போலும்—அப்பெரும்படையாகிய படைகள் நாயகத்தை உங்களுக்குத் தந்தருளிய சர்வலோகைக நாயகராகிய கடவுளே மறந்து விட்டீர்கள் போலும். (51)

கடவுளே மறந்திரேற் கருதி நீர்பெறு
மடுபடை நாமமு மயர்த்தி ரோவது
நெடிதுநும் மனத்தினி னினேந்து தேற்றுமின்
விடுமினி யமரென விளம்பி மேனுமே.

கடவுளே மறந்திரேல்—உங்களுக்குப் பெரும்படை உதவிய கடவுளே மறந்திரேயாயினும், கருதி—அக்கடவுளேத் தியானித்து, நீர் பெறும் அடுபடை நாமமும் ஓ அயர்த்திர்—நீவிர் அக்கடவுளிடம் பெறுநின்ற உலகத்தை அடுகின்ற அந்தச் சிவப்படையின் நாமத்திணையுமா மறந்துவிட்டீர்; அது—அச்சிவப்படையின் நாமமாகிய சிவநாமத்தை, நும் மனத்தினில் நெடிதுநினேந்து—நும் மனத்தின்கண் ஒய்வின்றிச் சிந்தித்து, தேற்றுமின்—புத்தி தெளிமின்; இனி அமர் விடும்—இனிப் போரை நிறுத்துங்கள்; என விளம்பி மேலும்—என்று போதித்துப் பின்னரும். (52)

வாதியா வின்னுநீர் மலேதி ரேயெனி
னுதியா யருவுரு வான தோர்பொருள்
சோதியாய் நடுவுறத் தோன்றுங் காண்டிரென்
ருேதியா லெமக்கிவை யுணர்த்திப் போயினுன்.

வாதியா—பிரமப் பொருள்பற்றி வாதித்து, இன்னும் நீர் மலேகிரே எனின்—இன்னமும் நீவிர் பொருவீராயின், ஆதியாய் அரு உரு ஆனது ஓர் பொருள்—ஆதியாயும் அருவாயும் உருவாயும் அருவுருவாயும் ஆகிய தொரு பரம்பொருள், நடுவுற சோதியாய் தோன்றும் காண்டிர் என்று—உங்கள் மத்தியில் ஒரு சோதியாய்த் தோன்றுநிற்கும் அதன் அடிமுடி களேக் காண வல்லீரேற் காண்மின் என்று, ஓதியால் இவை எமக்கு உணர்திப் போயினுன்—தமது ஞான உணர்ச்சியினுல் எமக்கு இவற்றை உணர்த்திச் சென்றுர். (53)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயின னுரைத்தசொற் புந்தி கொண்டிலந்
தீயென வுருத்திகல் செருக்கு நீங்கல
மாயிர மாண்டுகா றமரி யற்றின
மாயிரும் புவனமு முயிரு மாயவே.

போயினன் உரைத்த சொல் புந்தி கொண்டிலம்—எம்மை விட்டுச் சென்ற நாரதர் கூறிய மொழிகளை மனத்திற் கொண்டோமல்லோம்; தீ என உருத்து இகல் செருக்கு நீங்கலம்—தீயைப்போலச் சீறி இகலுகின்ற அகந்தையை ஒழிந்திலோம்; மா இரும் புவனமும் உயிரும் மாய ஆயிரம் ஆண்டு காறு அமர் இயற்றினம்—மிகப் பெரிய புவனமும் உயிர்களும் அழியும்வண்ணம் ஆயிரம் வருடமளவும் போர் புரிந்தோம். (54)

இங்கிவை யாவையு மிறுதி யூழியி
னங்கியி னடம்புரி யண்ண னோக்கியே
தங்களி லிருவருஞ் சமர்செய் கின்றனர்
புங்கவர் தாமெனும் புகழை வெஃகினார்.

இங்கு இவை யாவையும்—இங்கே இவை அனைத்தையும், இறுதி ஊழியின் அங்கியில் நடம்புரி அண்ணல் நோக்கி—மகா சங்காரகாலத்தில் ஊழித்தீயின் மத்தியில் நின்று நடம்புரிகின்ற சிவபெருமான் நோக்கியருளி, தாம் புங்கவர் எனும் புகழை வெஃகினார்—இவர்கள் தாமே தலைமைக் கடவுள் என்னும் புகழை விரும்பி, இருவருந் தங்களில் சமர் செய்கின்றனர்—இருவரும் தங்களுட் போர் செய்கின்றனர். (55)

அறிவறை போயின ரகந்தை யுற்றன
ருறுவதொன் றுணர்கில ருண்மை யோர்கிலர்
சிறுவரி லிருவருஞ் சீற்றப் போர்செயா
விறுதிசெய் கின்றன ருலகம் யாவையும்.

அறிவு அறை போயினர்—இவர்கள் அறிவு குடிபோயினர்; அகந்தை உற்றனர்—அகங்காரங் கொண்டார்கள்; உறுவது ஒன்று உணர்கிலர்—மேல் வரக்கடவதொன்றையுஞ் சிந்திக்கின்றிலர்; உண்மை ஓர்கிலர்—மெய்ப்பொருளை ஓர்கின்றிலர்; இருவரும் சிறுவரில் சீற்றப் போர் செயா—இருவருஞ் சிறு குழந்தைகள்போலச் சினத்தோடு கூடிய போரைச் செய்து, உலகம் யாவையும் இறுதி செய்கின்றனர்—உலகம் முழுவதையும் அழிக்கின்றனர். (56)

ஈங்கிவர் செயலினை யின்னுங் காண்டுமேற்
றீங்குறு முலகுயிர் சிதைந்து வீடுமா
லோங்கிய நந்நிலை யுணர்த்தி னயிடைத்
தாங்கரும் வெஞ்சமர் தணிந்து நிற்பரால்.

ஈங்கு இவர் செயலினை இன்னும் காண்டுமேல்—இங்கே இவர்களுடைய செயலை இன்னமும் கண்டுகொண்டிருப்போமாயின், தீங்கு உறும்—தீமை விளையும்; உலகு உயிர் சிதைந்து வீடும்—உலகமும் உயிர்களுஞ்சிதைந்தழியும்; ஓங்கிய நம் நிலை உணர்த்தின்—நம்முடைய உயர்பெரு நிலையை உணர்த்தினால், ஆயிடை தாங்களும் வெம் சமர் தணிந்து நிற்பர்—அப்பொழுது தாங்குதற்கரிய கோடும்போர் தணிவர். (57)

தம்மையே பொருளெனச் சாற்று கின்றதும்
வெம்மைசேர் வெகுளியும் வெறுத்து வீட்டியே
செம்மைசேர் மனத்தராய்த் திகழ்வர் தாமென
வெம்மையா ளுடையவ னெண்ணி னனரோ.

தம்மையே பொருள் என சாற்றுகின்றதும்—தம்மையே பரம்பொருள் என்று கூறுவதனையும், வெம்மை சேர் வெகுளியும்—வெப்பம் பொருந்திய கோபத்தையும், வெறுத்து வீட்டி—வெறுத்தொழித்து, தாம் செம்மை சேர் மனத்தராய் திகழ்வர் என—தாம் செம்மனத்தராய் விளங்குவர் என்று, எம்மை ஆளுடையவன் எண்ணினன்—எம்மை ஆளுந்தலையுடைய சிவபெருமான் திருவுளங்கொண்டருளினார். (58)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

ஆன்றதோ ரளவை தன்னி லடைந்தது மாகந் தன்னில்
வான்றிகழ் பாலுட் கங்குன் மதிபக றழுதி நென்னன்
ஞான்றது தனில்யாங் கண்டு நடுக்குற நடுவ ணாகத்
தோன்றினன் கனற்குன் றேபோற் சொல்லரும் பரத்தின் சோதி.

ஆன்று ஓர் அளவை தன்னில்—அகன்று நீண்டு கழிந்ததொரு காலத்திலே, மாகம் தன்னில் அடைந்தது—மாசி மாசத்தில் வந்ததாகிய, மதிபகல் தழுவு ஞான்று நென்னல் அது தன்னில்—சந்திரனுஞ் சூரியனுங் கூடுகின்ற அமாவாசித் தினத்துக்கு முதற்றினமான சதுர்த்தசியில், வான் திகழ் பால் நாள் கங்குல்—உயர்ந்து விளங்குகின்ற பாதிராத்திரியில், யாம் கண்டு நடுக்கு உற—நாங்கள் கண்டு நடுங்க, நடுவண் ஆக—எங்களுக்கு மத்தியில், சொல்லரும் பரத்தின் சோதி—சொல்லுதற்கரிய பரம்பொருளாகிய அரும் பெருஞ் சோதி, கனல் குன்றுபோல் தோன்றினன்—ஓர் அக்கினிமலையாய்த் தோன்றியருளினர். (59)

தோற்றிய செய்ய சோதி தொல்லம ருழந்தி யாங்கண்
மாற்றரும் படைக ளாக வழங்கிய விரண்டும் வெளவி
யாற்றருந் தன்மைத் தாக வணுகுரு தகன்ற போகிச்
சீற்றமுஞ் சமரு நீங்கிச் சேணுற நோக்கி நின்றேன்ம்

தோற்றிய செய்ய சோதி—நம் மத்தியிலே தோன்றிய செஞ்சோதியானது, தொல் அமர் உழந்து—பழமையான போரைப் புரிந்து, யாங்கள் மாற்றரும் படைகளாக வழங்கிய இரண்டும் வெளவி—நாங்கள் ஒருவர் மேலொருவர் நீக்குதற்கரிய படையாக விடுத்த சிவப்படைக்கலம் இரண்டையுந் தன்பாற் கவர்ந்து, ஆற்றரும் தன்மையது ஆக—தாங்குதற்கரிய வெம்மைத்தன்மையையுடைத்தாக; அணுகுருது அகன்று போகியாம்—அணுகலாற்றுருது விலகிச் சென்று, சீற்றமும் சமரும் நீங்கி—சினமும் அமருந் தணிநது, சேண் உறநோக்கி நின்றேம்—நமது பார்வை சேணிற்பொருந்த நோக்கியவாறு நின்றேம். (60)

நிற்றலும் யாங்கள் கேட்ப நெடுவிசும் பிடையோர் வார்த்தை
தெற்றென வெழுந்த தம்மா சிறுவிர்கா ணுமது வன்மை
பற்றலர் புரமூன் றட்ட பரமனே காண்பான் சோதி
மற்றித னடியு மீறும் வரன்முறை தேரு மென்றே.

நிற்றலும்—நின்றபோது, யாங்கள் கேட்ப—நாங்கள் கேட்கும்படி, நெடு விசும்பிடை ஓர் வார்த்தை—நீண்ட ஆகாயத்தில் ஓர் அசரீரிவாக்கு, சிறுவிர்காள் நுமது வன்னம் பற்றலர் புரம் மூன்று அட்டபரமனே காண்பான்—சிறுவர்களே உங்கள் வன்மையைப் பகைவரின் முப்புரங்களை அழித்த பரமசிவனே காணுவார்; சோதி இதன் அடியும் ஈறும் வரன்முறை தேரும் என்று தெற்றென எழுந்தது—இச் சோதியின் அடியையும் முடியையும் வரன்முறையே தெளிந்தறிகுதிர் என்று தெளிவாக எழுந்தது.

தெற்றென விரைவுப்பொருட்டுமாம். (61)

கேட்டன மதனை நெஞ்சிற் கிளர்ந்தெழு சீற்றம் யாவும்
வீட்டின மெனினும் பின்னும் விட்டில மகந்தை தன்னைக்
காட்டிய வெமது முன்னோன் காண்பனும் வலியை யென்ன
வீட்டுடன் விசும்பிற் சொற்றார் யார்கொலென் றெண்ணிப் பின்னும்.

கேட்டனம் அதனை—அவ்வாக்கைக் கேட்டு, நெஞ்சில் கிளர்ந்து எழு சீற்றம் யாவும் வீட்டினம் எனினும்—மனத்தின்கட் கிளர்ந்தெழுகின்ற சீற்றம் முழுவதையும் ஒழித்தோமாயினும், பின்னும் அகந்தை தன்னை விட்டிலம்—பின்னரும் அகந்தையை விடோமாய், எமது முன்னோன் நும் வலியைக் காண்பன்—எமது முதல்வர் நும் வன்மையைக் காண்பர்; காட்டிய என்ன—நீவிர் காட்டுக என்று, ஈட்டுடன் விசும்பில் சொற்றார் யார்கொல் என்று எண்ணி பின்னும்—பெருமையோடும் ஆகாயத்தின்கண் சொன்னவர் யாவரோ என்று சிந்தித்துப் பின்னும். (62)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனுற வெதிர்ந்தி யாஞ்செ யிகலினுக் கிடையூ றுக
நீணில மதனைக் கீண்டு நிமிர்ந்துவான் புகுந்து நீடு
மாணுறு சோதி தானு மறைமுனி யுரைத்த வாறு
காணிய வந்த தெம்மிற் கடந்தவான் பொருள்கொ லென்றேம்.

ஏண் உற எதிர்ந்து யாம் செய் இகலினுக்கு இடையூறுக—வலிமிக எதிர்ந்து யாம் புரிகின்ற போருக்கு இடையூறுக, நீள்நிலம் அதனை கீண்டு, நீண்ட பூமியைப் பிளந்து, நிமிர்ந்து—மேல் நிமிர்ந்து, வான் புகுந்து நீடும்—வானத்திற் புகுந்து நிலைக்கின்ற, மாண் உறு சோதி தானும்—மாட்சிமை மிக்க இந்தச் சோதி வடிவத் தானும், மறை முனி உரைத்த வாறு—வேதமுனிவராகிய நாரதர் கூறியவண்ணம், காணிய வந்தது—நம் வன்மையைக் காணத் தோன்றியதேயாம்; எம்மில் கடந்தவான் பொருள்கொல் என்றேம்—இவ்வாற்றால் எம்மிலும் மேலான உயர்ந்த பரம்பொருள் போலும் என்றையுற்றேம். (63)

ஈதுதீ தறு காலின் வந்த செந்தழ லன்று லீது
யாதுமொன் றறித றேற்று மிருவரு மிதனை யின்னே
யாதியு முடியு நாடி யன்னது காண்டு மென்று
மாதவன் றானும் யானும் வஞ்சின மிசைத்து மன்றே.

ஈது தீது அறு காலின் வந்த செந்தழல் அன்று—இவ்வொளிப்பிழம்பு குற்ற மற்ற வாயுவினின்றும் தோன்றிய சிவந்த அக்கினியே யன்று; யாதும் ஒன்று அறிதல் தேற்றும்—இதனைக் குறித்து யாதொன்றும் அறியோம்; இருவரும் இதனை இன்னே ஆதியும் முடியும் நாடி—யாம் இருவேமும் இச்சோதியை இப்பொழுதே அடியையும் முடியையுந் தேடி, அன்னது காண்டும் என்று—அதனதன் எல்லையைக் காண்போம் என்று, மாதவன் தானும் யானும்—திருமாலும், யானும், வஞ்சினம் இசைத்தும்—சபதம் செய்தோம். (64)

நீடுவா னுருவிச் சென்று நிலனுற விடந்து புக்கு
மோடிநா மொல்லை தன்னி லுற்றிதற் கடியு மீறு
நாடினு லவற்றி லொன்று நலம்பெற முன்னங் கண்டோர்
பீடுயர் தலைவ ரீதே துணிவெனப் பேசி நின்றேம்.

நீடு வான் உருவிச் சென்றும்—நீண்ட ஆகாயத்தை ஊடுருவிச் சென்றும், நிலன் உற இடந்து புக்கும்—நிலத்தை மிகவும் பிளந்து புகுந்தும், நாம் ஒல்லை தன்னில் ஓடி உற்று—நாம் விரைவிற் பறந்தும் அகழ்ந்தும் அணைந்து, இதற்கு அடியும் ஈறும் நாடினல்—இச்சோதிக்கு அடியையும் முடியையுந் தேடினல், அவற்றில் ஒன்று நலம்பெற முன்னம் கண்டோர் பீடு உயர் தலைவர்—அந்த அடிமுடிகளில் ஒன்றை நன்மை பொருந்த முதற்கட் கண்டோர் பெருமைமிக்க தலைவர் ஆவர்; ஈதே துணிவு என பேசி நின்றேம்—இதுவே முடிந்த துணிபாம் என்று உறுதிசெய்தோம். (65)

முடியினைக் காண்ப னென்றே மொழிந்தனன் றமிய னேனை
யடியினைக் காண்ப னென்றே யரியுமங் கிசையா நின்று
னடையயின் மழலை யோவா நாகிளஞ் சிறுவர் வானிற்
சுடர்மலி கதிரைக் கையாற் றீண்டுவான் றுணியு மாபோல்.

நடை பயில் மழலை ஓவா நாகு இளம் சிறுவர்—நடை பயிலுகின்ற மழலை நீங்காத மிகவும் இளைய சிறுவர்கள், வானில் சுடர் மலி கதிரை கையால் தீண்டுவான் துணியுமாபோல்—ஆகாயத்தின்கண்ணே ஒளிச்சுடர் மிக்க சூரியனைக் கையாற் பற்றும்படி துணியுமாறுபோல, தமியேன் முடியினை காண்பன் என்று மொழிந்தனன்—சிறியேன் சோதியின் முடியைக் காண்பேன் என்றேன; அரியும் ஏனை அடியினை காண்பன் என்று அங்கு இசையா நின்றுன்—திருமாலும் ஏனையதாகிய அடியைக் காண்பென் என்று அங்குக் கூறி நின்றார். (66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரியுறழ் தறுகட் செங்க ணிமிலுடை யெருத்தம் யாரு
முருகெழு துழனிக் கூர்வா யொள்ளெயி றிலங்கு தந்தங்
கருவரை யனைய மேனிக் கடுநடைக் குறுந்தாள் வெள்ளைக்
குரமொடு கண்ண னன்றோர் கோலமாங் கோலங் கொண்டான்.

அன்று–அப்பொழுது, கண்ணன்–திருமால், எரி உறழ் தறுகண் செங்கண்–அக்கினியையொத்த தறுகண்மையினையுடைய சிவந்த கண்ணையும், இமில் உடை எருத்தம்–இமில் பொருந்திய எருத்தத்தையும், யாரும் உருகெழு துழனிக் கூர் வாய்–எவரும் அஞ்சத்தக்க ஒலியினையுடைய கூரிய வாயினையும். ஒள் எயிறு–ஒளி பொருந்திய பற்களையும், இலங்கு தந்தம்–விளங்குகின்ற கொம்புகளையும், கரு வரை அனைய மேனி–கரிய மலையாகிய மைநாகத்தையொத்த மேனியையும், கடு நடை குறும் தாள்–கடுகிய நடையினையுடைய குறுகிய கால்களையும், வெள்ளை குரமொடு–வெண்ணிறக் குளம்பையுங் கொண்ட, ஓர் கோலமாம் கோலம் கொண்டான்–ஒரு பன்றியாகிய வடிவத்தை எடுத்தார். (67)

ஒருபது நூற தாகும் யோசனை யுகப்பி னோடு
பருமையு மாகு மந்தப் பகட்டுரு வாகி முன்னந்
தரணியை யிடந்து கீழ்போய்த் தடவியே துருவிச் சென்று
நிரைபடு புவனம் யாவு நீந்தியே போயி னானல்.

ஒருபது நூறது ஆகும் யோசனை உகப்பினோடு பருமையும் ஆகும் அந்த பகடு உருவாகி–ஆயிரம் யோசனை உயர்ச்சியும் பருமையும் ஆகா நின்ற அந்த ஆண்பன்றியின் வடிவத்தைக் கொண்டு, முன்னம் தரணியை இடந்து கீழ்போய்–முதலிற் பூமியைப் பிளந்து கீழ்ச்சென்று, தடவி துருவிச் சென்று–தடவித் தேடி அப்பாற் சென்று. நிரைபடு புவனம் யாவும் நீந்திப் போயினான்–வரிசையாயுள்ள புவனங்கள் அனைத்தையுங் கடந்து சென்றார். (68)

பாதல நாடி யன்னான் படர்தலும் யானு மாங்கோ
ரோதிம வடிவ மாகி யொல்லையி லெழுந்து மீப்போய்
மேதகு விசும்பின் மேலாம் வியன்புவ னங்க ணாடிப்
போதலுஞ் சோதி முன்னம் போலமேல் போயிற் றம்மா.

பாதலம் நாடி அன்னான் படர்தலும்–பாதாளத்தில் அடியைத் தேடிக்கொண்டு பன்றியாகிய அத் திருமால் செல்ல, யானும் ஆங்கு ஓர் ஓதிம வடிவம் ஆகி–நானும் அவ்வாறாயதொரு அன்னத்தின் வடிவத்தை எடுத்துக்கொண்டு, ஒல்லையில் எழுந்து மீ போய்–விரைந்தெழுந்து மேலே சென்று, மேதகு விசும்பின் மேலாம் வியன் புவனங்கள் நாடிப்போதலும்–மேன்மை பொருந்திய ஆகாயத்துக்கு மேலாக உள்ள புவனங்களிலே தேடிப் போகப் போக, சோதி முன்னம் போல–சோதியானது முதலிற் காணப்பட்டவாறுபோல, மேல் போயிற்று–மேலே மேலே சென்றது. (69)

முன்னமோ ரேன மாகி முரணொடு புவனி கீண்டு
வன்னியா யெழுந்த சோதி வந்ததோர் மூலங் காண்பா
னுன்னியே போன மாலோ னூக்கியே செல்லச் செல்லப்
பன்னெடுங் காலஞ் சென்ற பாதமுங் காணான் மாதோ.

முன்னம் ஓர் ஏனம் ஆகி–முதற்கண் ஒரு பன்றியாய், முரணொடு புவனி கீண்டு–வன்மையுடன், பூமியைப் பிளந்து, வன்னியாய் எழுந்த சோதி வந்தது ஓர் மூலம் காண்பான்– அக்கினியாய் எழுந்த சோதி தோன்றியதொரு மூலத்தைக் காணும்பொருட்டு, உன்னியே போன மாலோன்–நினைத்துக்கொண்டே சென்ற திருமால், ஊக்கி செல்ல செல்ல–தம்மை தாமே ஊக்கப்படுத்திக்கொண்டு போகப்போக, பல் நெடும் காலம் சென்ற–பல நெடுங் காலங்கள் கழிந்தன; பாதமும் காணான் பாதமூலமே யன்றிப் பாதத்தி னெப்பாகத்தையேனுஞ் சிறிதுங் காணாராயினார். (70

நொந்தன வெயிறு மேனி நுடங்கின நோன்மை யாவுஞ்
சிந்தின புன லுண் வேட்கை சேர்ந்தன வுயிர்ப்பி னோடும்
வந்தன துயரம் போன வஞ்சின மகந்தை வீந்த
முந்தையி னுணர்வு மால்பான் முழுதொருங் குற்ற தன்றே.

எயிறு நொந்தன–பற்கள் நொந்தன; மேனி நுடங்கின–உடம்பு உறுப்புக்கள் மெலிந்தன; நோன்மை யாவும் சிந்தின–வன்மைகள் எல்லாஞ் சிதறின; புனல் உண் வேட்கை சேர்ந்தன–நீர் அருந்தும் வேட்கையினால் ஆயாசங்கள் உண்டாயின; உயிர்ப்பினோடும் துயரம் வந்தன–நெட்டுயிர்ப்புந் துயரமும் எழுந்தன; வஞ்சினம் போன–சபதங்கள் மறக்கப்பட்டன; அகந்தை வீந்த–அகங்காரங்கள் மடிந்தன; முந்தையில் உணர்வு மால் பால் முழுது ஒருங்கு உற்றது–பழமையான நல்லுணர்வு திருமாலிடம் முழுவதும் ஒருங்கு உதித்தது. (71)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லையி லுணர்ச்சி தோன்றத் துண்ணெனத் தெளிந்த கண்ணா
னல்லுறழ் புயலின் றோற்றத் தண்ணலங் களிற்றின் யாக்கை,
மெல்லவே தரிக்க லாற்றான் வீட்டவுங் கில்லான் மீண்டு
செல்லவு மூற்ற மில்லான் சிவனடி சிந்தை செய்தான்.

தொல்லையில் உணர்ச்சி தோன்ற—பழைய அறிவு உண்டாக, துண்ணெனத் தெளிந்த கண்ணன்—விரைவாகத் தெளிவடைந்த திருமால், அல் உறழ் புயலின் தோற்றத்து—இருளையொத்த மேகம்போலுந் தோற்றத்தினையுடைய, அண்ணல் அம் களிற்றின் யாக்கை—பெரிய ஆண்பன்றியின் வடிவத்தை, மெல்லவே தரிக்கல் ஆற்றான்—மெல்லவாயினுஞ் சுமக்கவும் மாட்டாமல், வீட்டவுங்கில்லான—நீக்கிவிடவும் மாட்டாமல், மீண்டு செல்லவும் ஊற்றம் இல்லான—திரும்பிச் செல்வதற்குஞ் சத்தியின்றி, சிவன் அடி சிந்தை செய்தான்—சிவபெருமானின் திருவடிகளைச் சிந்தித்தார். (72)

## வேறு

என்று முணர்வரிய வெம்பெருமா னன்றிருத்தா
ளன்றி யரணில்லை யவற்றையருச் சித்திடவும்
பொன்றியதென் வன்மை பொறுத்தி குறையடியே
னென்றுமுண ரேனென் றுளநொந்து போற்றினனே.

என்றும் உணர்வரிய எம்பெருமான்—எக்காலத்தும் உணர்வரிய எம் பெருமானே, திருத்தாள் அன்றி—தேவரீருடைய திருவடிகளையன்றி, அரண் இல்லை—அடியேனுக்குப் புகலிடம் வேறில்லை; அவற்றை அருச்சித்திடவும் என் வன்மை பொன்றியது—அத் திருவடிகளை அருச்சித்தற்கும் வன்மையற்றவனாயினேன்; அடியேன் குறை பொறுத்தி—அடியேனது குற்றத்தைப் பொறுத்தருள்க; ஒன்றும் உணரேன்—தேவரீரின் பெருமையொன்றனையும் அறியேனாயினேன்; என்று உளம் நொந்து போற்றினன்—என்று மனம் நொந்து துதித்தார். (73)

ஆன பொழுதி லமலன் றிருவருளாற்
றேனுலவு தண்டார்த் திருமான் மிடலுடைத்தா
யேன வடிவோ டெழுந்துபுவிப் பாலெய்தி
வானுறுசோ திக்கணித்தா வந்து வணங்கிநின்றான்.

ஆன பொழுதில்—அவ்வாறாய சமயத்தில், அமலன் திருவருளால்—சிவபெருமானது திருவருளினால், தேன் உலவு தண் தார் திருமால்—தேன் பொருந்திய தண்ணிய மாலையையணிந்த திருமால், மிடல் உடைத்தாய்—வன்மை வரப்பெற்று, என வடிவோடு எழுந்து—பன்றி வடிவத்தோடு மேலெழுந்து, புவிப்பால் எய்தி—பூமியை அடைந்து, வான் உறு சோதிக்கு அணித்தா வந்து—வானத்தை அளாவிய சோதிக்கு அணித்தாக வந்து, வணங்கி நின்றான்—அச்சோதியை வணங்கி நின்றார். (74)

## வேறு

நின்றா னொருபா னெடுமா லதுநிற்க யான்முன்
பின்றா வகையாற் பெருஞ்சூ ளிவைபேசி வானிற்
சென்றா யிரமாண்டு திரிந்து திரிந்து நாடிக்
குன்றாத சோதிக் கொழுந்தின் றலைகூட லேன்யான்.

நெடுமால் ஒருபால் நின்றான்—திருநெடுமால் அச்சோதியின் ஒருபக்கத்தே வணங்கிக்கொண்டு நின்றார்; அது நிற்க—அவர் நிலை அவ்வாறாக; யான் முன்பின்றா வகையால்—யான் முன்னர்த் திருமாலுக்குக் குறையாத வகையில், பெரும் சூள் இவை பேசி—பெரிய சபத வார்த்தைகளைப் பேசி, வானில் சென்று—ஆகாயத்திற் பறந்து, ஆயிரம் ஆண்டு திரிந்து திரிந்து நாடி—ஆயிரம் வருடம் அலைந்து தேடி, குன்றாத சோதிக் கொழுந்தின் தலை—யானும் பறக்கத் தானும்வளர்ந்த குன்றாத சோதியாகிய கொழுந்தின் முடியை, கூடலேன் யான்—யான் அணுகேன் ஆயினேன். (75)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளும் படியு நினையேன் வினையேனு மீளிற்
சூளும் பழுதா மதுவன்றித் துணிந்து முன்னை
மூளுஞ் சுடரின் முதல்கண்டரி மூர்த்தி யாவா
னாளென்ப ரென்னை யழிவெய்துமிவ் வாற்றன் மன்னோ.

வினையேனும் மீளும் படியும் நினையேன்–தீவினையுடையேனாகிய யானும் திரும்பிய போகவும் எண்ணேன்; சூளும் பழுதாம்–திரும்பினால் முன்செய்த சபதமும் பழுதாகும்; அது அன்றி–அவ்வாறன்றி, முன்னம் மூளும் சுடரின் முதல் அரி துணிந்து கண்டு மூர்த்தி ஆவான்–முன்னரே தோன்று நிற்குஞ் சோதியின் அடியைத் திருமால் துணிந்து கண்டு முதல்வர் ஆவர்; என்னை ஆள் என்பர்–அங்ஙனமானால் என்னைத் திருமாலின் அடிமை என்பார்கள்; இ ஆற்றல் அழிவு எய்தும்–இதனால் என்னுடைய இந்த வலிமை அழிந்துபோம். (76)

எந்நாள்வரை செல்லினுஞ் செல்லுக வின்னும் விண்போய்ப்
பொன்னார்முடி கண்டபி னல்லது போக லேனென்
றுன்னா வதுகாணிய போதலு முள்ளம் வெம்பி
மன்னா வுயிரு முலைந்தாற்றலு மாண்ட தன்றே.

எ நாள் வரை செல்லினும் செல்லுக–எக்காலம்வரை கழியினுங் கழிக; இன்னும் விண் போய்–இன்னமும் மேலே பறந்து போய், பொன்னார் முடி கண்டபின் அல்லது போகலேன்–அழகு நிறைந்த முடியைக் கண்டபின்பு அன்றி மீளேன்; என்று உன்னா–என்று நினைந்து, அது காணிய போதலும்–அம் முடியைச் காண்டற்கு மேலே பறந்து போதலும், உள்ளம் வெம்பி–உள்ளம் வெதும்பி, மன்னா உயிரும் உலைந்து–ஒருடம்பினும் நிலைபெறாத உயிரும் உலைதலைப் பொருந்தி, ஆற்றலும் மாண்டது–வன்மையும் அழிந்தது. (77)

கண்ணுஞ் சுழன்ற சிறைநொந்தன காலு மோய்ந்த
வெண்ணுந் திரிந்த ததுபோதி லெழுந்த சோதி
யுண்ணின்ற சித்த ரெனவேபல ரொல்லை மேவி
விண்ணின் றலைபோ யிதுவொன்று விளம்ப லுற்றார்.

கண்ணும் சுழன்ற–கண்களுஞ் சுழன்றன; சிறை நொந்தன–சிறகுகள் நொந்தன; காலும் ஓய்ந்த–கால்களும் ஓய்ந்தன; எண்ணும் திரிந்தது–எண்ணிய எண்ணமும் மாறுபட்டது; அது போதில்–அப்பொழுது, எழுந்த சோதியுள் நின்ற பலர்–அங்கே எழுந்த சோதியுள் நின்ற பலர், சித்தர் என ஒல்லை மேவி–சித்தர்களாய் விரைந்து வெளிப்பட்டு, விண்ணின் தலை போய்–வானின் உச்சிக்கட் சென்று, இது ஒன்று விளம்பல் உற்றார்–இஃதொன்று கூறுவார் ஆயினர். (78)

வானார்பரஞ் சோதியி னீற்றினை வாரி தன்னுண்
மீனார் தரவே திரிகின்றதொர் வெள்ளை யன்னந்
தானு முணருஞ் சிறைபோகித் தளர்ந்து வன்மை
போனாலு நாட வருகின்றது போலு மம்மா.

வான் ஆர் பரஞ்சோதியின் ஈற்றினை–வானத்தின்கண் நிறைந்தெழுகின்ற பரஞ்சோதியின் முடியை, வாரி தன்னுள் மீன் ஆர்தர திரிகின்றது ஓர் வெள்ளை அன்னம் தானும் உணரும்–நீரினுள்ளே மீனை உண்ணும்படி திரிகின்றதொரு வெள்ளை அன்னமாம் உணரவல்லது; சிறை போகி–தன் சிறகுகளும் போய், தளர்ந்து–உடலுந் தளர்ந்து, வன்மை போனாலும்–வன்மையுங் கழிந்தாலும், நாட வருகின்றது போலும்–அம் முடியைத் தேட வாரா நிற்கின்றது போலும். (79)

அன்னந் தனக்கி தறிவின்மைய தாகு மல்லாற்
பின்னொன் றுளதோ துணிவுற்றதொர் பெற்றி நோக்கி
னின்னுஞ் சிறிது பொழுதேகி னிறக்கு மிந்த
மன்னுஞ் சுடரைச் சிவனென்று மனங்கொ ளாதோ.

ஈது–இந்த முயற்சி, அன்னம் தனக்கு அறிவின்மை ஆகும்–இவ்வன்னத்துக்கு அதன் அறியாமையின் விளைவாம்; அல்லால் பின் ஒன்று உளதோ–அங்ஙனமன்றிப் பிறிதொன்றுமோ; துணிவு உற்றது ஓர் பெற்றி நோக்கின்–இவ்வன்னந் துணிந்ததொரு தன்மையைச் சிந்திக்கின், இன்னும் சிறிது பொழுது ஏகின் இறக்கும்–இன்னமுஞ் சிறிது பொழுது மேலே பறக்குமாயின் இஃது இறந்தொழியும், இஃதே முடிபாம்; இந்த மன்னும் சுடரை சிவன் என்று மனம் கொளாதோ–இந்த நிலைபெறுஞ் சோதியை சிவபரம்பொருள் என்று இந்த அன்னம் மனத்தின்கட் கொள்ளாதோ அந்தோ இதன் அறியாமை இருந்தபடி என்னே!
(80)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலென் பவனு நிலங்கீண்டனன் வல்லே யேகி
மூலந் தெரிவா னுணராமன் முரானு நீங்கிச்
சீலங் குறுகச் சிவனேசர ணென்று பைய
ஞாலந் தனில்வந் தனல்வெற்பினை நண்ணி நின்றான்.

மால் என்பவனும்—திருமாலும், மூலம் தெரிவான் நிலம் கீண்டனன்—அடியைக் காணும்பொருட்டு நிலத்தைப் பிளந்து, வல்லே ஏகி—விரைந்து சென்று, உணராமல்—மூலத்தைக் காணமல், முரானும் நீங்கி—வலியு மிழந்து, சீலம் குறுக—பக்குவம் உளதாக, சிவனே சரண என்று—சிவபெருமானே புகலிடம் என்று உணர்ந்து, பைய ஞாலம் தனில் வந்து—மெல்லப் பூமிக்கு வந்து, அனல் வெற்பினை நண்ணி நின்றான்—அக்கினி மலையை அடைந்து நின்றான். (81)

முந்துற் றிதனை யருள் செய்திடு மூர்த்தி தானே
சிந்தைக்குண் மாசு தனைத்தீர்த்தருள் செய்யி னுய்யு
மிந்தப் பறவை யெனயானு மிதனை நாடிப்
புந்திக்குண் மைய லொழிந்தேயவர்ப் போற்றி செய்தேன்.

முந்து இதனை உற்று அருள் செய்திடும் மூர்த்தி தானே—முன்னம் இச் சோதியைப் பொருந்தி அருள்செய்த கடவுளே, சிந்தைக்குள் மாசுதனைத் தீர்த்து அருள் செய்யின்—மனத்துக்கண் மாசினைப் போக்கியருளுவாராயின், இந்தப் பறவை உய்யும் என—இந்தப் பறவை உயிர் பிழைக்கும் என்று கூற, யானும் இதனை நாடி—நானும் அச் சித்தபுருடர்கள் கூறிய இதனைச் சிந்தித்து, புந்திக்குள் மையல் ஒழிந்து—மனத்துக்கண் மாசு நீங்கி, அவர்ப் போற்றி செய்தேன்—அச் சித்தபுருடர்களைத் துதித்தேன். (82)

ஈச னருளா லிவைகூறின ரேக லோடு
மாசின் வழியா மகந்தைத்திற னாதி யாய
பாசங்களை வீட்டி யரன்புகழ் பன்னி யேத்தி
நேசங்கொடு பூசனை செய்ய நினைந்து மீண்டேன்.

ஈசன் அருளால் இவை கூறினர் ஏகலோடும்—சிவபெருமானது திருவருளினாலே இவற்றை அச் சித்தபுருடர்கள் கூறிச் செல்லுதலும், ஆசின் வழி ஆம்—குற்றத்துக்கு வழி செய்கின்ற, அகந்தைத் திறன் ஆதியாய பாசங்களை வீட்டி—அகங்காரத்தின் பகுதியவாகிய பாசக் கூட்டங்களையொழித்து, அரன் புகழ் பன்னி ஏத்தி சிவபெருமானது புகழைப்பாடித் துதித்து, நேசம் கொடு பூசனை செய்ய நினைந்து மீண்டேன்—அன்போடு சிவார்ச்சனை செய்ய நினைத்து திரும்பினேன். (83)

## வேறு

வந்துகண்ணன் றனையணுகி வான்பொருள்யா மென்றிகலி
முந்துறுவெஞ் சமரியற்றி முனிமொழியு முணர்ந்திலமாற்
றந்தைவர வறியாமற் றாண்முடியுந் தேடலுற்றே
மந்தமுறும் வேலைதனி லவனருளா லவற்புகழ்ந்தேம்.

வந்து—திரும்பிவந்து, கண்ணன் தனை அணுகி—திருமாலை அடைந்து, வான பொருள் யாம் என்று இகலி—பரம் பொருள் யாம் என்று முரண் பட்டு, முந்து உறு வெம் சமர் இயற்றி—முற்பட்ட கொடிய போரைச் செய்து, முனிமொழியும் உணர்ந்திலம்—நாரத முனிவரது உறுதிமொழியையுந் தெளிந்திலோம்; தந்தை வரவு அறியாமல்—சோதியாய்ப் பரம பிதா வந்தருளிய வரவினையும் அறியாமல், தாள் முடியும் தேடலுற்றேம்—அடியையும் முடியையுந் தேடத் தொடங்கினோமாய், அந்தம் உறும் வேலை தனில்—இறங்குஞ் சமயத்தில், அவன் அருளால் அவற் புகழ்ந்தோம்—அப் பெருமானது திருவருளினாலே அப்பெருமானைப் புகழ்ந்தோம்.

வந்து அணுகி, என யானுரைப்ப என வருஞ் செய்யுளில் முடிவு காண்க. (84)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீண்டுநில னிருவிசும்பிற் கிளர்ந்துமடி முடியுணரே
மீண்டுமவன் றன்னருளான் மிடல்பெற்று வந்தனமா
லீண்டுசிவன் றனைவழிபட் டிருவருமன் னவன்றோற்றங்
காண்டுமென யானுரைப்பக் கண்ணனுமங் கதற்கிசைந்தான்.

நிலன் கீண்டும்–நிலத்தை அகழ்ந்தும், இரு விசும்பில் கிளர்ந்தும்–பெரிய ஆகாயத்திற் பறந்தும், அடி முடி உணரேம், அடியையும் முடியையும் உணரேமாய், அவன் தன் அருளால் மீண்டும்–அப் பெருமானின் திருவருளால் மீண்டோம்; மிடல் பெற்று வந்தனம்–மீளுதற்கேற்ற வலியையும் அப்பெருமானிடமே பெற்று வந்து சேர்ந்தோம்; ஈண்டு–இனி இவ்விடத்தின், இருவரும்–நாம் இருவேமும், சிவன் தனை வழிபட்டு–சிவபெருமானைப் பூசித்து, அன்னவன் தோற்றம் காண்டும்–அப் பெருமானது திருக்கோலத்தைத் தரிசிப்போம்; என யான் உரைப்ப–என்று யான் கூற, கண்ணனும் அங்கு அதற்கு இசைந்தான்–திருமாலும் அப்பொழுது அவ்வாறு பூசித்தற்கு உடன்பட்டார்.

மீண்டும் மிடல் பெற்று வந்தனம் என்பதற்கு, திரும்பவும் அப்பெருமானிடமே வலிமை பெற்று இவ்விடம் வந்தோம் என உரைப்பினுமாம். (85)

இருவருமச் சிவனுருவை யியன்முறையாற் றாபித்து
விரைமலர்மஞ் சனஞ்சாந்தம் விளக்கழலா தியவமைத்துப்
பொருவருபூ சனைபுரிந்து போற்றிசெய்து வணங்குதலு
மெரிகெழுசோ திக்கணித்தா வெந்தையவண் வந்தனனே.

இருவரும்–நாம் இருவேமும், அ சிவன் உருவை–அந்தச் சிவபெருமானது அருவுருவத் திருமேனியை, இயன் முறையால் தாபித்து–வேதாகம விதிப்படி தாபித்து, விரை மலர்–வாசனை பொருந்திய புஷ்பம், மஞ்சனம்–திருமஞ்சனம், சாந்தம்–சந்தனம், விளக்கு–தீபம், அழல்–தூபம், ஆதிய அமைத்து–முதலிய பூசோபகரணங்களை அமைத்துக் கொண்டு, பொரு அருபூசனை புரிந்து–ஒப்பில்லாத பூசையைச் செய்து, போற்றி செய்து வணங்குதலும்–துதித்து வணங்குதலும், எரி கெழுசோதிக்கு அணித்தா–அக்கினியாக விளங்குகின்ற சோதிக்கு அணித்தாக, அவண் எந்தை வந்தனன்–அவ்விடத்தில் எம் பரமபிதாவாகிய சிவபெருமான் பிரசன்னமானார்.

மைக்களமு மான்மழுவும் வரதமுட னபயமுறு
மெய்க்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணுஞ்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள் புரிந்தான்.

மைக்களமும்–திருநீலகண்டத்தையும், மான் மழுவும்–மானையும் மழுவையும், வரதமுடன் அபயம் உறும் மெய்க் கரமும்–வரதமும் அபயமுமாய்ப் பொருந்துகின்ற மெய்ம்மையாகிய திருக்கரங்களையும், நாற்புயமும்–நான்கு திருப்புயங்களையும், விளங்கு பணி கொடும் பூணும்–விளங்கு கின்ற சர்ப்பங்களாலாகிய வளைவு பொருந்திய ஆபரணங்களையும், மதிச் செக்கர் உறு சடையும்–பாலசந்திரனை அணிந்த செவ்வானம் போன்ற சடையினையும், சேயிழை ஓர் பாகமுமாய்–உமா தேவியார் வீற்றிருக்கின்ற ஒரு பாகத்தையுமுடையவராய், முக்கண் இறை–சோம சூர்யாக்கினிகளாகிய மூன்று திருக்கண் களுடைய சர்வலோகைக நாயகரானவர், யாம் காண–பிரம விஷ்ணுக்களாகிய யாம் கண்ணிறையக் கண்டு தரிசிக்க, முன் நின்று–நமது முன்னிலைக்கட் பிரசன்னமாய் எழுந்தருளி, அருள் புரிந்தான்–திருவருள் பாலித்தருளினார். (87)

அவ்விடையா மிருவர்களு மமலன்ற னடிவணங்கிச்
செவ்விதின்னி றவனருளிற் றிளைத்திதனைச் செப்பினமான்
மெய்வகையா மன்பின்றி விளங்காநின் னியன்மறையு
மிவ்வகையென் றுணராதே யாங்காணற் கெளிவருமோ.

அ இடை யாம் இருவர்களும்–அச்சமயத்தில் நாம் இருவேமும், அமலன் தன் அடி வணங்கி–சிவபெருமானின் திருவடிகளை வணங்கி, செவ்விதின் நின்று–செப்பமுற நிற்கும் முறையில் நின்று, அவன் அருளில் திளைத்து–அப் பெருமானது திருவருளின் முழுகி, மெய்வகையாம் அன்பு இன்றி விளங்கா நின் இயல்–உண்மை அன்பின்றி வெளிப்படாத தேவரீரின் இயல்பை, மறையும் இ வகை என்று உணராதே–வேதமும் இத்தகையதென்று அறியமாட்டாதே; யாம் காணற்கு–அங்ஙனமேயாகப் புல்லறிவோமாகிய யாங் கண்டு தரிசித்தற்கு, எளிவருமோ–அஃது எளிவருவதொன்றுருகுமோ; இதனைச் செப்பினம்–என்றிங்ஙனங் கூறி வணங்கி நின்றேம். (88)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

புந்தி மயங்கிப் பொருங்காலை யெம்முன்னிற்
செந்தழலின் மேனிகொடு சென்றருளித் தொல்லறிவு
தந்து நினையுணர்த்தித் தாக்கமரு நீக்கினையா
லெந்திரம்யா முண்ணின் றியற்றுகின்றாய் நீயன்றே.

புந்தி மயங்கி—மனம் மருண்டு, பொரும் காலை—போர்செய்த காலத்தில், எம் முன்னில்—எமது முன்னிலையில், செந்தழலின் மேனி கொடு சென்றருளி—செம்மையாகிய அக்கினியின் வடிவமாய்த் தோன்றியருளி, தொல் அறிவு தந்து—பழைய நல்ல அறிவைத் தந்து, நினையும் உணர்த்தி—தேவரீரையும் அறியும்படி செய்து, தாக்கு அமரும் நீக்கினை—ஒருவரை யொருவர் தாக்குகின்ற யுத்தத்தையுந் தவிர்த்தருளினீர்; யாம் எந்திரம்—நாங்கள் வெறும் யந்திரங்கள்; நீயன்றே உள் நின்று இயற்றுகின்றாய்—தேவரீரன்றோ உள்ளே நின்று யாம் இயங்குமாறு இயக்கியருளுகின்றீர். (89)

தந்தும் என்பதில் உம், நினை என்பதனோடு கூட்டப்பட்டது.

உன்னை யுணரு முணர்வுபுரிந் தாலுன்னைப்
பின்னை யுணர்வேம் பெருமசிறி யேஞ்செய்த
புன்னெறியை யெல்லாம் பொறுத்தியாற் றஞ்சிறுவ
ரென்ன செயினு மினிதன்றே யீன்றவர்க்கே.

உன்னை உணரும் உணர்வு புரிந்தால்—தேவரீரை அறியும் அறிவைத் தேவரீர் அருளினால், பின்னை—அதன்பின்பு, உன்னை உணர்வேம்—தேவரீரைத் தேவரீரருளிய அருளால் அறிவோம்; பெரும—பெருமானே, சிறியேம் செய்த புன்னெறியை எல்லாம் பொறுத்தி—சிறியேங்கள் செய்த புன்மையாகிய நெறிகள் அனைத்தையும் பொறுத்தருள்வீராக; தம் சிறுவர் என்ன செயினும்—தங் குழந்தைகள் எது செய்தாலும், ஈன்றவர்க்கு இனிது அன்றே—பெற்றோர்க்கு அது இனிதாமன்றோ. (90)

இன்னாத் தகைசே ரிரும்பினைவல் லோனிலங்கும்
பொன்னாக் கியபரிசு போலே யெமையருளி
மன்னாக் கினையயர்த்தோ மற்றுனையும் யாங்களுயிர்
தொன்னாட் பிணித்த தொடரகற்ற வல்லோமோ.

இன்னா தகை சேர் இரும்பினை—இன்னாத இயல்பினையுடைய இரும்பை, வல்லோன் இலங்கும் பொன் ஆக்கிய பரிசு போலே—இரசவாதம் வல்லோன் பிரகாசிக்கின்ற பொன்னாக்கிய தன்மை போல, எமை அருளி—ஒன்றுக்கும் பற்றாத எமக்கும் அருள் செய்து, மன் ஆக்கினை—எமது தொழிற்றலைமையையும் நல்கியருளினீர்; உனையும் அயர்த்தோம்—இத்துணை நன்றி செய்த தேவரீரையுமன்றோ மறந்தோம்; யாங்கள்—இவ்வியல்பினையுடைய தமியேங்கள், உயிர்—ஆன்மாவை, தொல் நாள் பிணித்த தொடர் அகற்ற வல்லோமோ—அநாதியே பந்தித்த பாசத்தை நீக்க வல்லோமோ.

வேறு

என்றி யம்பியா மேத்தலு மெதிருற நோக்கிக்
குன்ற வில்லுடை யொருவனீர் செய்தன குறியா
வொன்று மெண்ணலீர் நும்பெரும் பூசனை யுவந்தா
மன்று மக்கருள் பதந்தனை யின்னும்யா மளித்தேம்.

என்று இயம்பி யாம் எத்தலும்—என்று கூறி நாங்கள் துதித்தலும், குன்ற வில்லுடை ஒருவன் எதிருற நோக்கி—மேருமலையாகிய வில்லினை யுடைய ஏகராகிய சிவபெருமான் எங்களை முன்னிலைசெய்து நோக்கியருளி, நீர் செய்தன குறியா ஒன்றும் எண்ணலீர்—நீவிர் செய்தவைகளைக் குறித்து ஒன்றும் நினையாதீர்; நும் பெரும் பூசனை உவந்தாம்—நீங்கள் செய்த பெரிய பூசனையை ஏற்று மகிழ்ந்தோம்; அன்று உமக்கு அருள் பதம் தனை இன்னும் யாம் அளித்தேம்—ஆதியில் உமக்குத் தந்த பதங்களை மீண்டும் யாம் உங்களுக்குத் தந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டு நல்வரங் கேண்மினீ ரென்றலும் விசும்பிற்
றுண்ட வம்புரி பகவநின் சரணமே யரணுப்
பூண்டி டுந்தலை யன்பரு ளென்றலும் புரிந்து
காண்ட குந்தழற் சோதியு ளிமைப்பினிற் கலந்தான்.

நீர் வேண்டும் நல்வரம் கேண்மின் என்றலும்-நீவீர் விரும்பும் நல்ல வரங்களைக் கேளுங்கள் என்று சிவபெருமான திருவாய்மலர்ந்தருளுதலும், விசும்பில் தாண்டவம் புரி பகவ-சிதாகாசத்தில் அனவரத தாண்டவம் புரிகின்ற பகவானே, நின் சரணமே அரணு பூண்டிடும் தலை அன்பு அருள் என்றலும்-தேவரீருடைய திருவடிகளையே புகலிடமாகக் கொண் டொழுகுத் தலையன்பை அருள் புரிக என்று பிரார்த்தித்தலும், புரிந்து-அவ்வாறேயாகுக என்றருள் புரிந்து, காண தகும் தழல் சோதியுள் இமைப்பினில் கலந்தான்-பேரழகு வாய்ந்த தழற்பிழம்பாகிய சோதியுள் ஒரு கணப்பொழுதில் மறைந்த ருளினர். (93)

கலந்த காலையில் யாங்கண்முன் றொழுதெழுங் காலைச்
சலங்கொள் பான்மையின் முன்னுறத் தேடுவான் றழலாய்
மலர்ந்த பேரொளி மீ மிசை சுருங்கியே வந்தோர்
விலங்க லாகிய துலகெலாம் பரவியே வியப்ப.

கலந்த காலையில்-சிவபெருமான் சோதியிற் கலந்து மறைந்த சமயத்தில், யாங்கள் முன் தொழுது எழும் காலை-நாங்கள் அச்சோதியினெதிரே வணங்கி எழுகின்றபோது, சலம் கொள் பான்மையில்-ஒருவரோடொருவர் கோபங்கொள்ளும் முறையில், முன் உற தேடு-முன்னர்த் தேடிய, வான் தழலாய் மலர்ந்த பேரொளி-உயர்ந்த அக்கினியாய் விரிந்த பெரிய சோதி வடிவம், மீ மிசை சுருங்கி வந்து-மேலே நின்று சுருங்கி வந்து, உலகெலாம் பரவி வியப்ப ஓர் விலங்கல் ஆகியது-உலகம் முழுவதுந் துதித்து வியப்படைய ஒரு மலையாகியது. (94)

அன்ன தாஞ்சிவ லிங்கரு பந்தனை யணுகி
முன்ன மாகியே மும்முறை வலஞ்செய்து முறையாற்
சென்னி யாற்றொழு தேத்தியெம் பதங்களிற் சென்றேம்
பின்ன ரெந்தையை மறந்திலம் போற்றுதும் பெரிதும்.

அன்னது ஆம் சிவலிங்க ரூபத்தினை-அம் மலைவடிவினதாகுஞ் சிவலிங்கரூபத்தை, அணுகி முன்னம் ஆகி-அடைந்து எதிரிற் சென்று, மும்முறை வலஞ் செய்து-மூன்றுமுறை வலம்வந்து, முறையால் சென்னியால் தொழுது எத்தி-விதிப்படி …யால் வணங்கித் துதித்து, எம் பதங்களில் சென்றேம்-எமது பதவிகளுக்குச் சென்றேம்; பின்னர் எந்தையை மறந்தி லம்-அதன் பின்பு எம் பரம பிதாவை அன்றுதொட்டு மறவாதிருக்கின்றேம்; பெரிதும் போற்றுதும்-பெரிதுந் துதித்துக் கொண்டேயிருக்கின்றோம். (95)

அரியும் யானுமுன் றேடுமவ் வனற்கிரி யனல
கிரியெ னும்படி நின்றதா லவ்வொளி கிளர்ந்த
விரவ தேசிவ ராத்திரி யாயின திறைவற்
பரவி யுய்ந்தன ரன்னதோர் வைகலிற் பலரும்.

அரியும் யானும் முன் தேடும் அ அனல் கிரி-திருமாலும் யானும் முன்னர் அடியும் முடியுந் தேடாநின்ற அந்த அக்கினிமலையானது, அனல கிரி எனும்படி நின்றது-அருணசலம் என்று புகழ்ந்து கூறும்படி விளங்கியது; அ ஒளி கிளர்ந்த இரவு அது சிவராத்திரி ஆயினது-அந்தச் சோதிவடிவம் எழுந்தருளிய இரவே சிவராத்திரி என்கின்ற சிவ புண்ணிய கால மாயிற்று; அன்னது ஓர் வைகலில் பலரும் இறைவற்பரவி உய்ந்தனர்-அத்தகைய ஒப்பற்ற மகாசிவராத்திரியில் உலகத் தார் பலரும் சிவலிங்கப்பெருமானை விதிப்படி பூசித்து வீடு பெற்றனர். (96)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத லாலவ னருள்பெறி னவனிய லறியு
மோதி யாகுவ ரல்லரேற் பலகலை யுணர்ந்தென்
வேத நாடியென் னிறையுமன் னவனிலை விளங்கார்
பேதை நீரரு மாங்கவ ரல்லது பிறரார்.

ஆதலால்-ஆதலினாலே, அவன் அருள் பெறின்-அப் பெருமானது அருளைப்பெற்றால், அவன் இயல் அறியும் ஓதி ஆகுவர்-அப் பெருமானது இயல்பை அறியும் ஞானத்தைப் பெறுவர்; அல்லரேல்-அவனருளைப்பெறாராயின், பலகலை உணர்ந்து என்-பல கலைகளைப் பயின்றும் பயன் என்னை; வேதம் நாடி என்-வேதத்தை ஆராய்ந்தும் பயன் என்னை; இறையும் அன்னவன் நிலை விளங்கார்-சிறிதும் அப் பெருமானது இயல்பை அறியமாட்டார்; பேதை நீரரும் ஆங்கு அவர் அல்லது பிறர் ஆர்-அறிவிலிகளும் அவ்வியல்பினையுடைய அவரன்றிப் பிறர் எவர். (97)

மோக வல்வினை யாற்றியே பவத்திடை மூழ்கும்
பாக ரல்லவர்க் கெய்திடா தவனருள் பவமும்
போக மாற்றிடு தருமமு நிகர்வரு புனிதர்க்
காகு மற்றவ னருணிலை பாகரா மவரே.

மோக வல்வினை ஆற்றி-மயக்கத்தினையுடைய வலிய வினைகளைச் செய்து, பவத்திடை மூழ்கும்-பிறவிச் சமுத்திரத்தில் மூழ்குகின்ற, பாகர் அல்லவர்க்கு-பக்குவர் அல்லாதவர்களுக்கு, அவன் அருள் எய்திடாது-அப்பெருமானது திருவருள் கிட்டாது; பவமும்-பாவமாகிய வினையையும், போகம் ஆற்றிடு தருமமும்-போகத்தை விளைக்கின்ற புண்ணியமாகிய நல்வினையையும், நிகர் வரு புனிதர்க்கு-சமபுத்தி செய்கின்ற மலபரிபாகர்களுக்கே, அவன் அருள் நிலை ஆகும்-அப் பெருமானது நிலையாய திருவருள் கிடைக்கும்; அவரே பாகராம்-அப் புனிதர்களே பரிபக்குவர்களாகிய சத்திநிபாதர்களாம்.

மோக வல்வினை-இருள் சேர் இருவினை. (98)

நீயுந் தொல்வினை நீங்கலி னெம்பிரா னிலைமை
யாயுந் தொல்லுணர் வின்றுவந் தெய்திய தவனே
தாயுந் தந்தையுங் குரவனுங் கடவுளுந் தவமு
மேயுஞ் செல்வமு மனையவற் சார்தியா லென்றான்.

நீயும் தொல் வினை நீங்கலின்-தக்கனே நீயும் பழைமையாகிய இருள்சேர் இருவினையும் நீங்குதலினாலே, எம்பிரான் நிலைமை ஆயும் தொல் உணர்வு இன்று வந்து எய்தியது-எம் பெருமானது இயல்பினை ஆராய்ந்தறிதற்குரிய தொன்மையாகிய ஞான உணர்வு உனக்கு இப்பொழுது உதயஞ் செய்திருக்கின்றது; அவனே தாயும் தந்தையும் குரவனும் கடவுளும் தவமும் ஏயும் செல்வமும்-அப் பெருமானே நமக்கெல்லாம் அன்னையும் பிதாவும் குருவும் கடவுளும் தவமும் பொருந்துகின்ற செல்வமும் ஆவர்; அனையவற் சார்தி என்றான்-ஆகையினாலே அத்தகைய பரம்பொருளையே சரண் என்று மகனே நீ அடையக்கடவை என்று பிரமதேவர் தக்கனுக்கு உபதேசித்தார். (99)

அடிமுடி தேடு படலம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## சிவராத்திரி புராணம்

### சிவராத்திரி மான்மியச்சருக்கம்,

(பாடல்கள் 31—43)

(வரதராச கவிராசர் இயற்றியது)

அந்தியினிற் றண்புனறோய்ந் தருக்கியநற் கிரியைசெப மாற்றிப் பின்னர்
வந்திளமா மதிமுடித்த வள்ளறனைப் பீடிகையில் வைத்துத் தாபித்
திந்திரியமோ ரைந்தவித்திட் டாகமநூன் மறைகளெடுத் தியம்பாநிற்கு
முந்தியமந் திரங்களினாற் பூசைவிதி வழுவாமன் முடித்தல் வேண்டும்.

முன்னமுதற் சாமத்தி லாவினைந்தா லாட்டிடுக முறைமையாகப்
பின்னிரண்டாஞ்சாமத் தைந்தமிர்தா லாட்டிடுக பிரசந்தன்னா
னன்னயஞ்சேர் மூன்றாய சாமத்தி லாட்டிடுக நாலாஞ்சாமங்
கன்னலின்சாற் றினிலாட்டக் காரணவா கமமெடுத்துக்கழறிற்றன்றே.

ஆசகல்கோ சலந்தயிர்பால் கோமயநெய் கௌவியமைந் தாகுஞ் செந்தேன்
காசகல்சர்க் கரைததிபா நெய்யிவையைந் தமிர்தமெனக் கரைவ ரித்தை
மாசகல்கௌ வியம்போலத் தனித்தனியே தாபித்து மதியஞ் சூடு
மீசன்மணி முடிமீதி லாட்டிடலாக மாநூல்க ளெடுத்துக் கூறும்.

சந்தனமுற் சாமத்தி லகிலிரண்டாஞ் சாமமதிற் சாமமூன்றிற்
கந்தமிகுங் கருப்பூரங் கடைச்சாமங் குங்குமஞ்செங் கமலப்போதில்
வந்தருணான் முகன்முகுந்தன் மகபதிவா னவரெவரும் வணங்கி யேத்து
மந்தமிலா முழுமுதல்வன் றிருமேனி குளிரமி குமன்பிற் சாத்தி.

முற்சாமம் வில்வமதிற் பிற்சாம முளரிமலர் மூன்றாஞ்சாம
நற்சாதிமலர்நாலாஞ் சாமமதினந்தியா வர்த்தப் பூக்கொண்
டற்சாருங் களத்திறைக்குச் சாத்துகவென்றாகமத்து ளதிகமான
சொற்சார முள்ளசித்த தந்திரநூ றொகுத்திதனைச் சொன்ன தாமால்.

முண்டகமுற் சாமமதிற் றுளசியிரண் டாஞ்சாம மூன்றாஞ் சாமங்
கண்டகஞ்சேர் கூவிளமுத் தளக்கிளைநான் கெனப்பகுத்த கடையிற்சாமம்
விண்டலர்ந்து மதுத்துளிக்கு முற்பலத்தின் மலர்சாத்தவேண்டு மென்றே
யண்டரெலாம் புகழ்ந்தேத்துஞ் சிந்தியமா மாகமநூ லறைந்த தன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்வநொச்சி மாவிலங்கை முட்கிளுவை வெள்ளில்பஞ்சவில்வ மாகச்
சொல்லரிவர் நின்றவைப் பூமுக் கிளையாகக் கொண்டயன்பா ரொடர்ந்துங் காரூ
நல்வரதன் றிருமுடியி நான்குசா மமுஞ்சாத்த நன்றுமென்று
சல்லியறிற் தவருணரக் காரணாகம முரைத்த கருத்தாமன்றே.

ஏதமின்முற் சாமமுறக் பருப்பொடன்ன மாகுமற்றை யிரண்டாஞ் சாமந்
தீதகல்பா யசமாகுஞ் சாமமொரு மூன்றதனிற்றிலஞ்சே ரன்ன
மோதவரு சாமமொரு நான்கதனிற் சுத்தான்ன முரைத்தார் பூத
நாதனிவேத் தியந்தனக்குச் சுத்தான்ன மாஞ்சாம நான்கிற் கும்மே.

சறுவனே யுக்கிரனே சங்கரனே சிவனேசாம்பவனே சான்றுப்
பெறுகதியை நல்கியிடு மீசான னேமகவுக் கிரனே பேசு
மறுவறுபூ தாதிபதி யேயென்று மந்திரமோ ரெட்டு மோதி
யுறுதியுடன் றூபாதிநிவேதனங்க ளனைத்தினையு மொழுங்கிற் செய்தே.

நாமத்தி னிருக்கெனுஞ்சொன் முட்டுமறை முந்தவந்துநண்ணுஞ் சாமந்
தோமத்தி கைற்றிரண்டாஞ் சுருதியிரண் டாஞ்சாமஞ் சொற்ற மூன்றுஞ்
சாமத்திற் சாமமறை யீற்றினுறு மறைநாலாஞ் சாமந் தன்னி
லீமத்தி னின்றுடு மாதிதிரு முன்னோதியிருகை கூப்பி.

உருகுமுள த்துடனிருந்தே யூனொருவி யிருவிழியு முறக்கமின்றி
யிருளுறுகங் குலின்யாம நான்கினுமிப் படியருச்சித் திறுதிதோறும்
பொருவிலருக் கியங்கொடுத்து நாயடியேன் புரியுமிந்தப் பூசைதன்னைத்
திருவுளத்தி னயந்தருள்வா யெனத்துதித்துத் தண்டனிட்டுத் திருமுன் வீழ்ந்தே.

இன்னணநற் சிவபூசை யியற்றியற்றைப் புலரிகனி லெழுந்து போகி,
நன்னதியிற் புனலாடிக் காலையிற்செய் கடன்கழித்துநவின்ற வாறே
யன்னதினத் தினுத் தினும்பகற்போ தரனையருச் சித்ததற்பி னாதி தீக்கை
சொன்னகுர வனைப்போற்றி யந்தணருக் காடையன்னஞ் சொன்ன மீந்தே.

அங்கவர்த மனுமதியாற் பாரணஞ்செய் திடல்வேண்டு மற்றை வைகற்
றங்குபகற் கடனனைத்துங் காலசந்தி யுடன்முடித்துத் தாழுங் கீழ்பாற்
செங்கதிர்வந் துதித்தாறு கன்னலுக்குட்பாரணந்தான் செய்தா ரகிற்
றுங்கமுறு கவளமொன்றுக் கணந்தபல முளதென நூல் சொல்லு மாதோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. விரித்துல கனைத்து மாக்கி வீக்குநாட் சராச ரங்கள்
பரித்துள புவன மூன்றும் பாலநேத் திரத்தீ யூட்டி
யெரித்தநீ றாக்கிப் பூசி யெண்பணிந் திலங்கு சூல
திரித்துநின் றருடு நின்பொற் சேவடி போற்றி போற்றி.

2. விடைக்கொடி யுயர்த்தாய் போற்றி விரிமலர்ச் செழும்பொற் கொன்றைத்
தொடைப்புயா சலனே போற்றி துலங்குபொற் றேட்டிற் றுவும்
படைக்ககருங் கடைக்கட் செவ்வாய்ப் பைந்தொடி பங்கா போற்றி
சடைப்பரம் பரனே போற்றி சங்கார போற்றி போற்றி.

3. ஓதியா யணுவா யெண்ணி லுயிர்க்குயிராகி யென்றும்
பேதியாப் பரம பிறப்புட னிறப்பி லாமற்
சோதியா யெழுதாக் கேள்விச் சுருதியின் முடிவா யெங்கட்
காதியா யநாதி யாகு மடிகணின் னடிகள் போற்றி.

4. இலகொளிக் கதிரோன் றுகி யிரும்புனற் கும்பந் தோறும்
பலவுரு வாகித் தோன்றும் பான்மைபோ லங்கங் காய்நின்
றுலகுயிர்க் கனுப வங்க ளூட்டுவித் தொழிந்த காலத்
தலகிலாக் கருணை நல்கு மடிகணின் னடிகள் போற்றி.

5. அருவமா யுருவமாகி யகண்டமா யசல மாகி
யொருபரம் பொருளாய் வண்ண மொப்புட னுயர்வுமின்றி
நிருமல னாகி யெங்கு நிறைந்துநீங் காது நிற்கும்
கருதரு ஞான னந்தக் கருணையங் கடலே போற்றி.

6. காலனுர் வீழத் தாக்குங் கனைகழற் காலா போற்றி
மூலமாம் பொருளுக் கெல்லா முழுமுதற் பொருளே போற்றி
பாலநேத் திரனே போற்றி படர்திரைப் பாலின் வேலை
யாலமுன் டிருண்ட கண்டத் தண்ணலே போற்றி போற்றி.

7. பொடியெழப் புரமோர் மூன்றும் புன்னகை கோட்டிச் சுட்டாய்
கொடியின்மீ னெழுதும் வேளைக் குளவிழியழலிற் கொன்றாய்
படிமுதற் ககனமீறாய்ப் பறந்தியாம் பரிந்து தேடி
யடிமுடி காண்டற் கெட்டா வத்தனே போற்றி போற்றி.

8. நீர்வடி வான செய்ய நெருப்புல வுலவை வானம்
பார்வடி வாகத் தோன்றப் படைத்திட முன்ன மன்னும்
கார்வடி வான கூந்தற் கவுரியு நீயு மொன்றாப்
பேர்வடி வின்றி நின்ற பிஞ்ஞாக போற்றி யென்றே.

திருச்சிற்றம்பலம்.

சிவராத்திரி புராணம்,
சிவராத்திரியுற்பவச் சருக்கம்,
(பாடல்கள் 62—69)
(வரதராச கவிராசர் இயற்றியது).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

## சிவராத்திரி அன்று ஓதத்தக்க திருமுறைப் பாடல்கள்

திருஞானசம்பந்தர்

திருக்கேதீச்சரப் பதிகம் பண்-நட்டராகம்.

பூவுளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந்
தெழுந்தோடி
மேவிநாடிநின் னடியிணைகாண்கிலா வித்தக
மென்னாகும்
மாவும்பூகமும் கதலியுநெருங்குமா தோட்ட
நன்னகர்மன்னித்
தேவிதன்னொடுந் திருந்துகேதீச்சரத் திருந்த
வெம்பெருமானே.

*

சுந்தரர்

தொழுவார் இருவர் துயரம் நீங்கவே
அழலாய் ஓங்கி அருள்கள் செய்தவன்
விழுவார் மறுகில் விதியால் மிக்கவெம்
எழிலார் சேர்ற்றுத் துறை சென்றடைவோமே.

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயனோடு அன்று அரியும்
அடியும் முடி காண்பரிய
பயனே எம்பரனே
பரமாய பரஞ்சுடரே
கயமாருஞ் சடையாய்
கடவூர்த் திருவீரட்டத்துள்
அயனே என் அமுதே
எனக்கார் துணை நீயலதே.

*

மாணிக்கவாசகர் திருவாசகம்

**திருப்பள்ளியெழுச்சி—10 ஆம் பாடல்**

புவனியில் போய்ப் பிறவாமையின் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு என்று நோக்கித்
திருப்பெருந்துறை உறைவாய் திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே.

*

**மாணிக்கவாசகர் திருவெம்பாவை**

**5 ஆம் பாடல்**

மால் அறியா நான் முகனுங் காணா மலையினை, நாம்
போல் அறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ, கடைதிறவாய் !
ஞாலமே விண்ணே, பிறவே, அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச், சிவனே ! சிவனே ! என்று
ஓலம் இடினும் உணராய், உணராய், காண் !
ஏலக் குழலி பரிசு ஏல் ஓர் எம்பாவாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேக்கிழார்

## பெரிய புராணம்

தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இளுவாகுங் கருவிலங்கும் பறவையுமாய்
எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்துந்
துதித்துய்ந்த படிவிரித்தார்.

*

அடியாராம் இமையவர் கூட்ட முய்ய
அலைகடல்வாய் நஞ்சு அமுதே செங்கண்
நெடியானும் நான்முகனும் காணக்கோல
நீலவிட அரவணிந்த நிமலாவெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே பொங்கர் வாசக்
கடியாரும் மலர்ச்சோலை மருங்குசூழும்
கவின் மருகற் பெருமானே காவாய் என்றும்.

*

## திருமூலர்

## திருமந்திரம்

உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பாலயம்
வள்ளல் பிரானுர்க்குவாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணிவிளக்கே

*

அன்புஞ் சிவமும் இரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவதாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந்திருந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம்

## ஈழத்துச் சிவன் கோயில்கள் வரலாறு*

*அவதானிக்குக:— கோயில் வரலாறுகள் விரிவாக எழுதப்படவுள்ளன. படங்கள், திருத்தங்கள் பாடல்கள், வரலாற்றுக்குறிப்புகள் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்—பணிப்பாளர், இந்து சமயத் திணைக்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பு மாவட்டம்

1. கப்பித்தாவத்தைச் சிவன் கோயில்.
2. பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில்.
3. முகத்துவாரம் அருணசலேஸ்வரர் கோயில்.
3. அ ஜயவர்தனபுர கோட்சைச் சிவன் கோயில் (பூவைவிடுதூது)
3. ஆ முல்லேறியாவைச் சிவன் கோவில்

### கண்டி மாவட்டம்

4. சிவன் கோயில்—கண்டி (நாததேவாலே). கண்டிப் பெரகராவில் பங்கு கொள்கின்ற நாததேவாலே என்பது சிவன் கோயிலே ஆகும். கண்டிப் பெரகராவில் பங்கு கொள்கின்ற ஏனைய தேவாலயங்கள் :
   1. னாத தேவாலே.
   2. விநாயகர் தேவாலயம்
   3. பததினி தேவாலயம்
   4. கதிரகம தேவாலயம்
   5. விஷ்ணு தேவாலயம்

5. கட்டுக்கலைப் பிள்ளையார் கோயில்.
   இக்கோயிலிலுள்ள சிவலிங்கம் அறுதியானது.

### நுவரெலியா மாவட்டம்

6. இலங்காதீஸ்வரர் கோயில்—நாரலை.
   இராமாயண நிகழ்ச்சிகளோடு தொடர்புடைய இப்பிரதேசத்தில் நர்மதா நதியில் தோன்றிய இலிங்கம், சுவாமி சிவபாலஜோதிகளால் தாபிக்கப்பெற்றது.

### காலி மாவட்டம்

7. காலி ஸ்ரீ மீனம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரர் கோயில்.
   (நவலியூர்சோமசுந்தரப்புலவர் பாடிய ஊஞ்சல் உண்டு)

### மாத்தறை மாவட்டம்

8. ஸ்ரீ சந்திரசேகரேஸ்வரர் கோயில். (டொன்ரு)
   இது தேவன்துறை விஷ்ணு ஆலயத்தோடு இணைந்து, மிகவும் சிறப்பு மிக்க ஆலயமாக ஒரு காலத்தில் திகழ்ந்தது. அழகானநந்தி ஒன்றும், பிற சான்றுகளும் காணக்கூடியதாகவுள்ளன.

### யாழ்ப்பாண மாவட்டம்

9. ஸ்ரீ கணபதீஸ்வரம் சிவன் கோயில்—சுருவில் வீதி, ஊர்காவற்றுறை.
10. புளியந்தீவு நாகேஸ்வரர் கோயில்—புளியந்தீவு, அனலைதீவு.
11. விசாலாட்சி சமேத காசி விசுவநாதர் சிவன் கோயில்—சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கோயில்—வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை.

13. ஸ்ரீ மங்களாம்பிகா சமேத மகாலிங்கேஸ்வர சுவாமி கோயில்—தெக்கணப்பாய்.

14. வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி கோயில்—ஓடையம்பதி, குடியிருப்பு, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

15. ஸ்ரீ இராணுகேஸ்வரர் கோயில்—கீரிமலை, காங்கேசன்துறை.

16. நல்லைநாத சுவாமி கோயில்—பருத்தித்துறை வீதி, நல்லூர்.

17. சிவன் கோயில்—நீர்நொச்சியத் தாழ்வு, அரியாலை, யாழ்ப்பாணம்.

18. சிவன் கோயில்—பருத்தித்துறை (பசுபதீஸ்வரர் ஆலயம்). (நவாலர் பெருமானின் ஊஞ்சல் உண்டு)

19. சிவன் கோயில்— வல்வெட்டித்துறை.

20. மருதடி தான்தோன்றீஸ்வரர் கோயில்—வல்லிப்புரக் குறிச்சி, புலோலி.

21. மூச்சம்புலவு சிவன் கோயில்—வல்லிபுரக் குறிச்சி, புலோலி.

22. புக்கடி அம்பலவாணேஸ்வரர் கோயில்—ஏழாலை.

23. விசாலாட்சி சமேத விசுவநாத சுவாமி கோயில்—கந்தரோடை வீதி, சுன்னாகம்.

24. விசாலாட்சி சமேத விஸ்வநாதீஸ்வரர் கோயில்—சோதி வேம்படி, அட்டகிரி வீதி' நவாலி வடக்கு, மானிப்பாய்.

25. தில்லேஸ்வரம் சிவன் கோயில்—6 ம் வட்டாரம், மண்டைதீவு.

26. பானுவிடைச் சிவன் கோயில்—பானுவிடை, ஊரை தீவு.

27. காசி விஸ்வநாதேஸ்வரர் கோயில்—பெருங்குளம், வேலணை மேற்கு, வேலணை.

28. இருபாலை ஸ்ரீ வாலாம்பிகைதேவி சமேத வைத்தீஸ்வரசுவாமி கோயில்—கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

29. ஸ்ரீ நடேசப்பெருமாள் கோயில்—நீராவியடி, வண்ணார்பண்ணை.

30. தான்தோன்றியீசுவரர் கோயில்—பாலாவி, பொன்னுவெளி.

31. புங்குடுதீவு மேற்கு பெருங்காடு மீனுட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி கோயில்.

32. நகுலேஸ்வரர் கோயில்—கீரிமலை.

33. வண்ணைவைத்தீஸ்வரர் கோயில்—வண்ணார்பண்ணை.

34. காரைநகர் சிவன் கோயில்—(ஈழத்துச் சிதம்பரம்).

35. யாழ் பல்கலைக்கழக சிவன் கோயில்—யாழ்ப்பாணம்.

36. நல்லூர் சிவன் கோயில்.

37. உருத்திரபுரி சிவன் கோயில்—இளிநொச்சி.

38. வாரிவனநாத சிவன் கோயில்—சாவகச்சேரி.

39. புலோலிச் சுயம்பு லிங்கம் உபயகதிர்காமம் கோயில்

39. அ. அளவெட்டிச் சிவன்கோயில்.

### மன்னார் மாவட்டம்

40. திருக்கேதீஸ்வரர் கோயில்—மன்னார்

### வவுனியா மாவட்டம்

41. புதவிளாங்குளம் சிவன் கோயில்—மாங்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மாவட்டம்

42. ஒட்டிசுட்டான் தான்தோன்றியீசுவரர் கோயில்.
43. மகாலிங்கேஸ்வரர் கோயில்—கொக்குத் தொடுவாய்.
44. பனங்காமம் சிவன் கோயில்—மாங்குளம்.
45. வன்னிவிளாங்குளம் சிவன் கோயில்.
46. வவுனிக்குளம் சிவன் கோயில்—பாண்டியங்குளம்.

## மட்டக்களப்பு மாவட்டம்

47. வம்பிக்கேணி சிவன் கோயில்—ஆரையம்பதி, 2, காத்தான்குடி.
48. தக்கயாகேஸ்வரர் கோயில்—வெயிலி வீதி, கோட்டமுனை, மட்டக்களப்பு.
49. சிவன் கோயில்—செட்டிபாளையம், குருக்கள்மடம்.
50. கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீசுவரர் கோயில்—கொக்கட்டிச்சோலை.

## திருகோணமலை மாவட்டம்

51. திருக்கோணேஸ்வரம்—திருகோணமலை.
52. தம்பலகாமம் கோணேஸ்வரர் கோயில்—தம்பலகாமம்.
53. வெள்ளை வில்வபத்திர கோணேஸ்வரர் கோயில்—மின்சார நிலைய வீதி, திருகோணமலை
54. செம்பீஸ்வரர் கோயில்—செம்பிமலை, குச்சவெளி.
55. சிவன் கோயில்—கங்கை, இண்ணியா
56. ஆதி சிவன் கோயில்—கங்குவேலி, தெகிவத்தை (அகத்தியர் தாபனம்).
57. கன்னியாய் நடேசர் கோயில்—சிவயோக சமாச ஆச்சிரமத்தின் பரிபாலனத்திலுள்ளது.
58. திருமங்கலாய் சிவன் கோயில்.

## அம்பாறை மாவட்டம்

59. ஸ்ரீ பாசுபதேஸ்வரர் கோயில்—பனங்காடு, அக்கரைப்பற்று.

## புத்தளம் மாவட்டம்

60. முன்னீஸ்வரர் கோயில் (முன்னைநாதர்)—சிலாபம்.
61. இராமலிங்கேஸ்வரர் கோயில்—மகா மனவேலியாவை, சிலாபம்.

## பொலனறுவை மாவட்டம்

62. முதலாம் சிவதேவாலயம்—பொலனறுவை, (சிவகாமி அம்பாள்).
63. இரண்டாம் சிவதேவாலயம்—பொலனறுவை, (வானவன் மகாதேவி—ஈஸ்வரமுடையார்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. ஐந்தாம் சிவதேவாலயம்—பொலனறுவை, (காரைக்காலம்மையார்—விக்கிரகம் கண்டு எடுக்கப்பட்ட ஆலயம்.
(இவ்வாலயங்கள் பற்றிய விவரங்கள், படங்கள் முதலியவற்றை திரு. எஸ். ஆறுமுகம் அவர்களின் "நான் வழிபட்ட ஆலயங்கள்" என்ற ஆங்கில நூலில் காண்க.)

## மொனறாகலை மாவட்டம்

65. ஸ்ரீ முத்துலிங்க சுவாமி கோயில்—கதிர்காமம்
(சமாதி முத்துலிங்கமானது. இன்று சிவன் கோவில் என வழங்குவது.)

## இரத்தினபுரி மாவட்டம்

66. திரிபுர சுந்தரி சமேத இரத்தின சபேசர் கோயில்.
67. சிவனொளிபாத மலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## கொழும்பு மாவட்டம்

### கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் கோவில்

1896 ஆம் ஆண்டு மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ கருணாகடாக்ஷ அம்பாள் சமேத கைலாச நாதர் வேஸ்தானம் தாபிக்கப் பெற்றது என நம்பிப்படுகிறது. நீண்டகாலம் புத்திரப்பேறு நாதர் தேவஸ்தானம் தாபிக்கப் பெற்றது என நம்பப்படுகிறது. நீண்டகாலம் புத்திரப்பேறு இன்றி மனம் வருந்திய செட்டியார் ஒருவர் கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகப் பெருமானை வணங்கி பிரார்த்தனை செய்து தனக்கு ஆண்குழந்தை பிறந்தால் திருக்கைலாயத்தில் எழுந்தருளியிருந்து உலகெலாம் உய்ய அருள்பாலிக்கும் சிவபெருமானுக்கு ஓர் ஆலயம் கட்டுவிப்பேன் என்று நேர்த்திக்கடன் செய்தார். விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமான் அருளால் செட்டியாருக்கு ஆண்குழந்தை பிறந்தது. கைலாசநாதர் என அக்குழந்தை பெயர் சூட்டப்பெற்றதுடன் கைலாசநாதர் ஆலயமும் உருவாயிற்று.

1933 ஆம் ஆண்டளவிலும் கூட பஞ்சமூர்த்திகளுக்குமான ஐந்து தேர்களும் (மூன்று செயற்கைத்தேர்) அம்பாள்நந்தி உட்பட மூன்று நந்தியும் கொடிமரம், யாகசாலை, அஷ்டபலிபீடம் முதலிய சிறப்புக்களுடன் தலைசிறந்த சிவாலயமாகத் திகழ்ந்தது இவ்வாலயம்.

இன்று செட்டிமாருடைய பராமரிப்பில் இருந்து வரும் இத்தேவாலயம் சிவலிங்கப் பெருமானை யே மூலமூர்த்தியாக உடையது. கிழக்கு வாயிலாக அமைந்த தேவாலயத்திலே அம்பாள் சந்நிதானம் தெற்கு வாயிலாக அமைந்துள்ளது. ஆலயத்தின் பரிவார மூர்த்திகளாக விளங்கும் விநாயகர், சுப்பிரமணியர், நடராஜர், மகாவிஷ்ணு, சண்டேசுவரர், நவக்கிரகம், சனீஸ்வரர், வைரவர், சூரியர், சந்திரர் ஆகியோருக்குத் தனித்தனி சந்நிதிகள் அமைந்துள்ளன. எழுந்தருளி மூர்த்திகளாக சந்திரசேகரர், இராஜராஜேஸ்வரி, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், நடேசர் முதலாய ஐம்பொன்னாலான விக்கிரகங்கள் உள.

மூலஸ்தானத்தின் பின் புறமாக ஆலயத்தின் மேற்குப் பக்கத்தில் விஷ்ணு மூர்த்தி கோவிலை அடுத்து காசிவிஷ்வநாதரும், காசிவிசாலாட்சியும் காசித் தலத்தை நினைவூட்டிய வண்ணம் கோயில் கொண்டுள்ளனர்.

வடக்குப் பக்கமாக பிரம்ம தேவனும் துர்க்கையும், சண்டேசுவரர் ஆலயத்திற்கு அருகே சிலாரூபத்தில் காட்சி கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள்.

ஞஹஂணி2 ணிஹஂ ஆண்டு எப்பிரல் மாதம் தொடக்கம் இருபத்தொன்பது ஆண்டுகள் தொண்டாற் மணிக்குருக்கள் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுகின்ற மு. சுப்பி மணியக் குருக்கள் அவர்களும், அவர்களுக்கு உதவியாக கே. வாதிராஜன் போற்றி, வி. சத்திய நாராயணசர்மா அவர்களும் கடமையாற்றுகின்றனர். சத்தியநாராயணசர்மா அவர்கள் 1965 ஆம் ஆண்டு தொடக் கம் 1969 ஆம் ஆண்டுவரை திருக்கேதீஸ்வரத்து சிவானந்த குருகுலத்தில் பயிற்சி பெற்று திரு. கே. கைலாசநாதக்குருக்கள் அவர்களால் பரீட்சிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத் தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பித்தாவத்தைச் சிவாலயத்தின் சிறப்புச்களில் ஒன்று மடாலயமும், வித்தியாலயமும் தேவாலயத்தோடு. சூழ்ந்து திகழ்கின்றன. கதிர்காம யாத்திரிகர்கள் தொண்டர்சபையின் அருமுயற்சியினால் அமைக்கப்பட்ட கதிர்காம மடத்தில் கதிர்காம விசேட தினங்களில் கப் பித்தாவத்தை சிவன் அருள்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலவனாகத் திகழ்வதைக் காணலாம். கொழும்புவழி செல்லும் கதிர்காம யாத்திரிகர்கள் வசதியாகத் தங்கி சிவபூசை கண்டு செல் வதற்கு வேண்டிய ஒழுங்குகள் யாவும் சிறப்புற நடைபெறுவது குறிப்பிடத் தக்கது. இதே சபையினால் தொடக்கப்பட்ட தொண்டர் வித்தியாலயமும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி பெற்று வெள்ளிக்கிழமை தோறும் தவறாது கூட்டு வழிபாடு இயற்றும் குழந்தைகளைத் தந்து கொண்டிருப்பது இறைவன் திருவருளே. குழந்தைகளின் கூட்டு வழி பாட்டின் பலனாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இத்தொண்டர் வித்தியாலயத்திற்குத் தொடர்ந்து ஆதரவு நலகுவதும் சிவன் செயலே.

இவ்வாலயத்தின் பிரதம குருக்களாக பிரம்மஸ்ரீ சுப்பிரமண்யக் குருக்கள் பூசை முதலியவற் றைக் கவனிப்பதுடன் மந்திர, ஜெப தபங்களில் நிறைந்த சித்தி வாய்ந்து திகழ்பவராய் நூல் கட்டுதல், நவக்கிரக ஆராதனை, சனீஸ்வர ஆராதனை, தோஷ நிவாரண பூஜை, காரிய சித்தி பூஜை முதலியவற்றை மிகச் சிறப்பாகச் செய்து ஜாதி, இன, மத பேதமின்றி அனைவரதும் ஏகோபித்த பாராட்டுக்குரியவராகவும் விளங்குகிறார். பிரதம குருக்கள் வெள்ளிக்கிழமை தோறும் இராஜராஜேஸ்வரி அம்பாளுக்குச் சந்தனக் காப்பிட்டு அலங்கரித்திருக்கும் அழகே அலாதி. செவ்வாய்க்கிழமை வைரவ பூஜையும், சனிக்கிழமைகளில் சனீஸ்வரன் பூஜையும் நேர்த்திக்கடன் நிறைவேற்றுவோரது நவக்கிரக பூஜையும் மணிக்குருக்களுக்கெனவே அமைந்த தனிச்சிறப்பு எனலாம்.

சிவராத்திரி, நவராத்திரி, சோமவாரம், திருக்கார்த்திகை, வருடப்பிறப்பு, கந்தகஷ்டி, திரு வெம்பாவை, ஏகாதசி, பிரதோஷம், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், வைகாசி விசாகம், ஆவணி சதுர்த்தி ஆகிய தினங்கள் பெருவிழாவாகவே கொண்டாடப் பெறுவன. வெள்ளிக்கிழமை தோறும் அம்பாளுக்குச் சந்தனக்காப்பும், விசேட அபிஷேக ஆராதனைகளும் நிகழ்வனவாம்.

சைவ, பௌத்த அடியார்களுடன் ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களும் மணிக்குருக்களிடம் வந்து திருநீறு வாங்கி அணிந்து, நூல்கட்டி, அர்ச்சனை செய்து, தமது இஷ்ட சித்திகளைப் பெற்று மகிழ்வது அனுபவ சித்தியின் பெருமையே எனக் குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

சகல இன மக்களதும் அபிமான குருவாக விளங்கி அடியார்களது இன்னல்களை நீக்கி இறையருள் பாலிக்குமாறு செய்து அன்பர்கள் இதயத்திலெல்லாம் நீங்காத நிறைவினை ஏற் படுத்தி மக்கள் மனதில் பக்தியை வளர்க்கும் பாணியில் தேவஸ்தானம் பிரதம குருக்களாகிய மணிக்குருக்களது பூஜாபலத்தினாலும், மந்திர சக்தி மகிமையினாலும் ஈழத்து அன்பர்களது பிரதான வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது.

இறைவன் பெயர் : கைலாசநாதர்

இறைவி பெயர் : கருணாகடாட்சி அம்மாள்

இன்று கப்பித்தாவத்தை இருக்கும் உன்னத நிலை அனைவரும் அறிந்த விஷயமே. மனோ ரம்மியமான சூழலில் புனிதமாகவும் கம்பீரமாகவும் கோவில் காட்சியளிக்கின்றது. தினசரி பல நூற்றுக்கணக்கில் வழிபடுவோர் வருகின்றனர். கொழும்பு எழு போன்ற அந்தஸ்துள்ள இடங் களில் உள்ளவர்களும் இன்று இக் கோவிலையே நாடுகின்றனர். கோவில் வாசல் வரை இன்று நல்ல சாலை அமைக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்க்கல்விக்கூடமொன்றும் 1954 ம் ஆண்டள விலிருந்து இங்கு இயங்கிவருகின்றது. வருடந்தோறும் கடந்த முப்பத்தாறு வருடங்களாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களைப் போஷிக்கும் கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையும் தற்பொழுது சில ஆண்டுகளாக இங்கேயே இயங்கி வருகின்றது. கோவில், பாடசாலை, கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை ஆகிய இந்த மூன்று நிறுவனங்களும் ஒன்றுடன் ஒன்று ஆத்மீகத் தொடர்புடன் இயங்கி வருகின்றன. இவையனைத்திலும் திரு. சின்னத்தம்பி ஐயா அவர்கள் நடுநாயகமாக நின்று உழைக்கின்றார்கள். கோவிலுக்குத் தொலைபேசி வசதியும் உண்டு. பல் இன மத மக்களும் இக்கோவிற் தரிசனத்திற்காக இன்று வருகின்றனர். தினசரி வெளியூர் யாத்திரிகர்கள் வந்து தங்கிப் போவதற்கும் இங்கு குறைவில்லை. கொழும்பில் யாத்திரிகள் வந்து தங்கிப் போகக்கூடிய இடங்களில் இன்று கப்பித்தாவத்தை முதல் ஸ்தானம் வகிக்கின்றது.

கப்பித்தாவத்தை விநாயகப்பெருமான் கீர்த்தி மிக்கவர் என்பது பலரது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். எல்லாம் விக்கினம் தீர்க்கும் விநாயகன் அருளே. கப்பித்தாவத்தையின் எதிர்காலம் மேலும் பிரகாசமாக இருக்க எல்லாம் வல்ல திருவருள் துணை செய்வதாக. சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் இக்கோவிலும் அதன் சுற்றுப்பிரகாரமும் வாவியாற் சூழப்பட்ட அழகிய தீவாகக் காட்சியளித்தது. இன்று அழகிய கோட்டை மதிலால் சூழப்பட்ட கவர்ச்சி மிக்க பெட்டகத் தீவாகக் கப்பித்தாவத்தை காட்சியளிக்கின்றது.

## பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில்

இலங்கையில் கற்தனிக் கோயிலாக அமைந்த சிவாலயம் பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயமாகும். கொழும்பு மாநகரத்தில், கொச்சிக்கடையில் உள்ள இவ்வாலயம் கட்டிட வேலைப் பாடு, இராசகோபுரம், கல்லிற் பொழிந்த சிற்பங்கள், சிற்பம் நிறைந்த தூண்கள் முதலியன பாடு, இராசகோபுரம், கல்லில் லைபொழிந்த சிற்பங்கள், சிற்பம் நிறைந்த தூண்கள் பல உள்ள கோயிலாக விளங்குகின்றது. கோயிலின் நடுவில் சிவலிங்கம் அமைந்துள்ள மூலத்தானம் கருங்கல்லாற் கட்டப்பட்டு இருக்கிறது. மேலேயும் கருங்கற் கட்டிடம், இந்தக் கோயிலிலே உட்பிரகாரத்துக்கு மேலே கருங்கல் தளம் போடப்பட்டுள்ளது.

இந்தக் கோயிலைக் கற்றளியாக ஆக்கிய பெருமை தமது நாட்டுப் பெருமக்களில் ஒருவரான சேர். பொன் இராமநாதன் அவர்களையே சாரும். தென்னித்தியாவில் பழைய மன்னர்களும் நாயக்க மன்னர்களும் கட்டிய கற்கோயில்களையும், பொல்னறுவையில் காணப்படும் சோழக் கற்கோயிலையும் கண்ணுற்றதன் விளைவாக கற்கோயிலெழுப்பும் பேரார்வம் சேர். பொன் இராமநாதன் அவர்களுக்கு எழுந்தது. அரசர்கள் பலதலைமுறைகளில் கட்டிய கோயில்களைப் போல்க் கட்ட நினைத்தது, இத்திருப்பணியில் அன்னாரது ஆர்வத்தையும், அவருக்கு ஏற்பட்ட உளக்குறிப்பையும் காட்டுவதாகும். 1907 ஆம் ஆண்டு தொடங்கிய கருங்கல் வேலை 1912 ஆம் ஆண்டில் முற்றுப்பெற்றது. சிற்பிகள் செய்யும் வேலை முழுவதையும் தானே நின்று மேற் பார்வை செய்த்ார் என்றும், சிற்பிகள் பணி சிவப்பணி என மனதிற் பதியும்படி உள்ளத்தை உருக்கும் தேவாரங்களை எடுத்து விளக்குவார் என்றும் கூறுவர்.

## பழைய கோயில்

கற்றளியாவதற்குமுன்பும் இவ்விடத்தில் கோயில் இருந்தது. இந்தக்கோயிலை முதன் முதலில் கட்டியவர் சேர். பொன்இராமநாதன் அவர்களுடைய தந்தையரான பொன்னம்ப முதலியாராவர். சிறந்த சைவரும், பெரும்செல்வந்தருமாகத்திகழ்ந்த பொன்னம்பல முதயார் 1857 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகத்தையும் நடத்தி வைத்தார். தமது இல்லத்தில் தான் நித்தியம் பூசித்து வந்த பாலயந்திரத்தை சிவகாமி அம்மன் சந்நிதியில் விக்கிரகதின்கீழ் பிரதிட்டை செய்திட்டார் என்பர். மூலத்தானத்தில் மகாலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டது. பொன்னம்பலவணுவேஸ்வரர் சிவகாமி அம்மன் இருவரும்வீற்றிருக்கும் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் பூசைகள், திருவிழா ஆகியன

இக்கோயில், வழிபாட்டுச் சிறப்பு, பூசைச்சிறப்பு இரண்டும் உடையது. ஆறுகாலம் பூசை நடக்கும் கோயில் இது.

**ஆலய அமைப்பு :**—ஆதிமூலத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கிறது. அம்பாள் சந்நிதானம் தெற்கு வாயிலாக அமைந்திருக்கிறது அடுத்து சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமான் சந்நிதானமும், சுற்றுப் பிரகாரத்தில் விநாயகர், மகாவிஷ்ணு, பஞ்ச லிங்கம், முத்துக்குமாரசுவாமி, ஷண்முகர், சண்டேசுரர், நவக்கிரகம், சனீஸ்வரர், சூரியர் சந்திரர் ஆகியோருக்குத் தனித்தனி சந்நிதானங்களும் அமைக்கப்பெற்றுள்ளன.

இந்தக் கோயிலில்உள்ள இன்னொரு சிறப்பு அர்த்த மண்டபத்தில்காணப்படும் நித்தியக்கினிக் குண்டம். சிதம்பரத்தைப் பற்றிப் பாடும்போது வேதவிதிப்படி எரிமுட்டித் தீமைகளை வராமல் தடுப்பவர் வசிக்கின்றதில்லை என்று ஞானசம்பந்தர் பாடுகிறார். " கற்றுங்கு எரியோம்பி கலியை வாராதே செற்றார் வாழ்தில்லை " என்று அத்தேவாரம் தொடங்கு கின்றது. எரியோம்புதல் என்பது நித்தியாக்கினியைக் குறிக்கும்.

இக்கோயிலின் திருவிழா பங்குனி மாதம் பத்து நாட்கள் நடைபெறும். பங்குனி உத்தரத்தன்று தீர்த்தத்துடன் திருவிழா முடிவு பெறுகிறது.பிரதோஷம், ஆவணிமூலம், திருவெம்பாவை, மகாசிவராத்திரி முதலிய திருநாட்கள் விமரிசையாகக்கொண்டாடப் படும். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று ஸ்ரீ சக்கர பூசையுடன் இராஜராஜேஸ்வரி உற்சவம். சமய குரவர் பூசையும் விசேடமாக நடைபெறுதல் வழக்கம்.தேர்த்திருவிழவில் அம்மனுடைய தேரைப் பெண்களே இழுப்பது இக்கோயிலுக்கு அமைந்ததொரு விசேடமாகும்.

## நேபாள மன்னர் வழிபாடு செய்தது

1957 ஆம் ஆண்டு இக்கோயிலின் நூற்றாண்டுப் பூர்த்தி கொண்டாடப்பட்டது. அப் பொழுது உலகின் ஒரேயொரு இந்து மன்னராகிய மகேந்திரா என்ற நேபாள மன்னர் கோயிலுக்குவந்து வழிபாடு செய்தார்.

26.02.1980 ஆம் ஆண்டு முன்பு வருகைதந்த நேபாள மன்னராகிய மகேந்திரா என்பவரின் மகனும், இன்றைய நேபாளமன்னருமாகியஸ்ரீ பிரேந்திர அவர்கள் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களுடன் வருகை தந்து வழிபாடு செய்தார்.

இங்ஙனம் எல்லாச் சிறப்புகளும் நிறைந்த இராஜராஜேஸ்வரி அம்பாள் சமேத பொன் னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தை ஒருமுறையாவது சென்று தரிசிக்கும் பேறு பெற்ற வர்கள் பாக்கியவான்களே.

தமிழ் நாட்டுக் கோவில்களையும் அங்குள்ள சிற்பச் செல்வங்களையும் பற்றி விரிவான முறையில் நூல் செய்தவர் அந்நாட்டைச் சேர்ந்த சைவப் பெரியார் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான். அப்பெரியார் ஈழம் வந்தபோது இவ்வாலயத்தைத் தரிசித்துச் சென்று, இவ்வாலயச் சிற்ப வடிவுகள் பற்றியும் போற்றி எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆலயக் கல்வெட்டுப் பாடல்

மெய்ம்மை நீற்றினன் மேன்மைசால் உருத்திரன்
அக்கப்பேர் மணியணியெனக் கொண்டவன்
மன்னர் மதித்து வாழ்த்து நன்மாட்சியன்
பொன்னம்பல மெனப் புனைதன் பெயர்கொள்
தென்னமு தாகும் சிவகாமி பங்கனைப்
புறத்தும் போற்றிப் புகழக் கோயில்
நூலுறச் சமைத்து நுண்மதி அந்தணர்
தங்கள் சார்பால் இருபான் தவிர்ந்த ஈரொன்பான்
நூற்றுச் சாலிய வாகன சகாப்தம்
பிங்கள சம்வத்சரமதி கார்த்திகை ஓணநாள்
காரவில் ஓரையில் கும்பாபிஷேகம் குளிர
அம்பார் மகிழ ஆற்றி யுய்தனனே.

### அருள்மிகு அருணாசலேசுவரர் கோயில் முகத்துவாரம்

கொழும்பு மாநகரில் முகத்துவாரத்திலுள்ள பர்வதவர்தனி அம்பாள் சமேத அருணாச லேசுவரர் பெருமாள் மிகவும் பிரசித்தி பெற்ற தெய்வமாக எல்லோராலும் கொண்டாடப்பட்டு வருகின்றார். இவ் ஆலயத்தில் தாபிக்கப்பட்டுள்ள சிவலிங்கம் காசியிலிருந்து கொண்டுவரப்பட்டது.

கப்பித்தாவத்தைச் சூழலில் சமாதியடைந்த சித்தராகிய ஆனைக்குட்டிச் சுவாமிகளின் சமாதியை முகத்துவாரத்திற்குக் கொண்டு சென்று சமாதி அமைத்த சேர். பி. அருணாசலம்அவர் அவர்களே சிவாலயத்தையும் நிறுவும் பூர்வ புண்ணியம் பெற்றுத் திகழ்ந்தவராவார். இவ் ஆலயத்தோடு சேர்ந்துள்ள பிள்ளையார் கோயில் அருகியானது.

அருணாசலம் குடும்பத்தினரின் கண்காணிப்பிலும், குமாரசாமிக் குருக்கள், கார்த்திகேசு குருக்கள் அவர்களது பரிபாலனத்திலும் இவ் ஆலயம் கொழும்பில் தலைசிறந்த ஆலயமாகத் திகழ்ந்து, சைவர்களையும் பிரசமய அன்பர்களையும் ஈர்த்து ஆட்கொள்ளும் சக்தி வாய்ந்த ஆலயமாக இருக்கின்றது.

### நுவரெலியா மாவட்டம்

### ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம்

இவ்வாலயம் 82, லேடி மெக்கலம்ஸ் டிரைவ் நுவரெலியாவில் உள்ளது.

புனித நர்மதா நதியில் கண்டெடுத்த சுயம்பு இலிங்கம் ஸ்ரீ சிவபாலயோகேஸ்வரர் சுவாமி அவர்களால் 1978 ஆம் ஆண்டு பிரதிட்டை செய்யப்பட்டது.

காலை, மத்தியானம், மாலை ஆகிய மூன்று வேளை நித்திய பூசை நடைபெறுகின்றது.

சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலை, வியாழக்கிழமைச் சிறப்புப் பூசை ஆகிய பல்வேறு சமய சமூக மக்களையும் கவர்ந்து வருவது காணக்கூடியதாய் இருக்கின்றது.

இராவணன், இராமாயணம் இவற்றோடு தொடர்புடைய சீதை எலிய போன்ற இடங்களுக்கு அண்மையில் அமையப் பெற்ற இவ்வாலயம் இலங்கையின் அனுதியான சிவவழிபாட்டுச் சிறப்பினை நினைவூட்டுவதாய்த் திகழ்கின்றது.

## காலி மாவட்டம்

### காலிச் சிவன் கோயில்

கவர்ச்சிகரமான மரகத இலிங்கத்தைத் கர்ப்பக்கிரகத்தில் கொண்ட காலிச் சிவன் கோவில் காலி நகரத்தின் மத்தியில் நகராட்சிக் கழகத்திற்கு அருகில் அமையப்பெற்றது. காலிச் சிவன் கோவில் நந்திகள், ஆலய வாயிற் கதவின் மேற்புறக் கல்லில் பொறிக்கப்பட்ட இரட்டை மீன் இலச்சினை ஆகியவற்றைக் கொண்டு இவ்வாலயம் பாண்டிய மன்னர் ஆட்சிக் காலத்துடன் தொடர்புள்ளது எனக் கொள்ளலாம்.

கதிர்காமத்தில் சிறப்பாக நடைபெறும் ஆடிமாத உற்சவ விழாக்களுக்கும், ஆடித் திருவோண நாளன்று நடைபெறும் கதிர்காமத் தீர்த்த உற்சவத்திற்கும், கார்த்திகை மாதத் திருக்கார்த்திகை, சித்திரை வருடப் பிறப்பு முதலிய நாட்களிலும் கதிர்காமத்தில் சிறப்பாக நடைபெறும் விழாக்களுக்கு யாத்திரை செல்லும் மக்கள் காலிச் சிவனை வழிபட்டுச் செல்வர்.

யாழ்ப்பாண வைபவமாலை கூறும் மாத்தறைச் சந்திரசேகரர் கோயில் சிறப்புற்றுத் திகழ்ந்த காலத்தில் காலிச் சிவாலயமும் அமையப்பெற்று விட்டதோவென்பது ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

கதிர்காமத்து யாத்திரையினைச் சிவசிந்தனையுடன் மேற்கொள்ளச் செய்யும் சிறப்பு இவ் ஆலயங்களின் தனிச் சிறப்பெனலாம்.

இவ்வாலயத்திற்கு நவாலியூர் திரு. க. சோமசுந்தரப் புலவர் பாடிய காலி ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஊஞ்சல் பாட்டு உண்டு.

எண்ணோங்கு நாதவிந்து காலா நாட்டி
　　இயலோங்கு மரியமறை விட்டம் பூட்டி
கண்ணோங்கு சிவாகம நூல் வடங்கள் மாட்டிக்
　　கலையோங்கு மோங்காரத் தவிசு கூட்டி
மண்ணோங்க வகுத்தமணி ஊஞ்சன் மீதே
　　மனமோங்கு மடியவர்கள் வடந்தொட்டாட்ட
விண்ணோங்கு காலிநகர் விரும்பி வாழும்
　　மீனாட்சி சுந்தரரே யாடீர் ஊஞ்சல்.

"திருவாலயவாய் என்னும் மதுரையில் ஆவிர்பவித்து பக்தர்களைக் கடைத்தேற்றுவதற்காக அறுபத்து நான்கு திருவிளையாடல்களை புரிந்தருளிய ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேச்வரப் பெருமானின் பெயருடன் இலங்கையின் தென்பாகத்தில் கொழும்பிலிருந்து கதிர்காமம் செல்லும் வழியிலுள்ள காலி நகரில் விளங்கும் ஈச்வரனின் ஆலயம்."

(ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், ஸ்ரீ மடம், காஞ்சிபுரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவம்" என்பது ஒரு தனிச் சமயத்துக்குரிய பொருள் அன்று. அதுதான் சமயாதீதப் பழம்பொருள். அதனிலும் பெரியது யாதும் இல்லை. "சைவசமயமே சமயம்" "சமயாதீதப் பழம்பொருள்" என்ற தாயுமானர் கருத்தை யாவரும் உணர்தல் எளிதன்று.

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்தும்
பரந்ததோர் படரொளிப்பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய நின்மலா"
என்ற திருவாசகத்தை நன்குணர்தல் வேண்டும்.

(காலி, ஸ்ரீ மீனம்பிகா சமேத சுந்தரேஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக மலர்)

இதற்கிணங்க எல்லாச் சமயத்தாராலும் உள்ளன்போடு வழிபடுகின்ற ஆலயமாகத் திகழுகின்றது.

இலங்கையிலே காலியிலே ஸ்ரீ மீனம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வர ஸ்வாமிக்கும் பரிவார தேவதா மூர்த்திக்கும் 8.2.71 சோமவாரக் காலையில் மகா கும்பாபிஷேகம் நடந்தேறியது.

ஸ்ரீ மீனாஷி சுந்தரேஸ்வர மகா கும்பாபிஷேக வாழ்த்து.

தென்னிலங்கை வாழியதோ சிர்பெருகு காலிநகர்த்
தொன்மைதிகழ் மீனாஷி சுந்தரேசர்—நன்னர்க்
குடமுழுக்கு நன்னாட் குளிர்க உல கெல்லாம்
திடமுறுக நாடு செழித்து.

(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் இயற்றியது.)

இவ்வாலயத்தில் பதினாறுண்டாய் பூசகராய் இலங்கைத் தென்னாடுடைய சிவனாய்த் திகழும் மீனாட்சி சுந்தரனார் மரகதலிங்கமாகத் திகழும் இவ் ஆலயத்தில மு. இராமநாதன் சிவாச்சாரியார் பூசை செய்யும் அழகு தனிச்சிறப்புடையது. வேதம் ஓதி, அர்ச்சனை பாட்டேயாகும் என்பதற்கிணங்க தாமே தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகியவற்றை முறையாக ஓதி பூசையை நிறைவேற்றும் பண்பு ஏனைய சிவாச்சாரிகளுக்கு உதாரணமாய்த் திகழ்கின்றது.

திசைமாறுல

கொழும்பு காலி மாத்தறை கதிர்காமம்.

## மாத்தறை மாவட்டம்

### சந்திரசேகரேஸ்வரர் கோவில்

இவ்வாலயம் மாத்தறை மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாகத் திகழ்ந்து அழிந்த சிறப்பு மிக்க ஊசிவாலயமாகும்.

"யாழ்ப்பாண வைபவ மாலை" இவ்வாலயம் பற்றிக் குறிப்பிடுவதைப் பின்வரும் பகுதியில் காண்க".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாற்பெருங்கோயில்

" குடிகளை வசப்படுத்திக்கொள்ளும் நோக்கத்திஞல் விஜயராசன் சமய வழிபாட்டைக் குறித்துச் சனங் களுக்கு இஷ்டங் கொடுத்திருந்துந் தன் சமயா சாரவொழுக்கத்தைத் தவருமற் காத்துக்—கொண்டான். அரசாட்சியை ஆரம்பிக்க முன்னமே நாலு திக்கிலும் நாலு சிவாலயங்களை எழுப்பிக் கொண்டான். கீழ்த் திசைக்குத் தம்பலகாமத்துக் கோணேசர் கோவிலை நிறுவி, மெற்றிசைக்கு மாதோட்டத்திற் பழுதுபட்டுக் கிடந்த திருக் கேதீஸ்வர சிவாலயத்தைப் புதுப்பித்து, தென் திசைக்கு மாத்துறையிற் சந்திரசேகரேஸ்வரன் கோவிலை எழுப்பி, வடதிசைக்குக் கீரிமலைச் சாரலில் திருத்தம்பலை. எனும் பதியிலே திருத்தம் பலேஸ்வரன், திருத்தம்பலேஸ்வரி கோவில்களையும் அவைகளின் சம்பத்திலே கதிரையாண்டவர் கோவிலையும் கட்டுவித்து, அவ்வாலயங்கட்குப் பூசனை நடாத்தும்படி நீலகண்டாசாரியரின் மூன்றுங்குமாரன் வாமதேவாசாரியன் என்னும் காசியிற் பிராமணனையும் அவன் பன்னியாகிய விசாலாட்சியம்மாளையும் அழைப்பித்து ".

பழம் பெருமை மிக்க தேவன்துறை விஷ்ணு ஆலயத்தோடு இணைந்திருந்த இச் சிவாலயம் மாத்தறை வழியாக கதிர்காமம் செல்லும் சைவர்களைச் சிவசிந்தனையில் ஆழ்த்தும் தன்மையது.

**குறிப்பு :** அன்மையில் இந்துசமயப் பணிப்பாளரும், பிரம்மஸ்ரீ விஸ்வ நாதக்குருக்கள் அவர்களும் சைவ சித்தாந்தக் காவலர், சிவஞானவாரிதி கு. குருசுவாமி அவர்களும், வ. சிவராச சிங்கம் அவர்களும், மு. மார்க்கண்டு, ஸ்தபதியார் அவர்களும், 1980.02.18 ம் திகதி திங்கட்கிழமை மாத்தறைக் கதிர்காம யாத்திரிகள் சபை முருகன் ஆலயப் புனருத்தாரண முயற்சியை மேற்கொண்டு மாத்தறைக்குச் சென்றுவரும் வழியில் அழகான நந்தியை, சந்திர சேகரேஸ்வரர் ஆலயம் ஓர் காலத்திலிருந்த அதே தலத்திற் காணும் பாக்கியம் பெற்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ கணபதீஸ்வரன் சிவன் கோயில், சுருவில் வீதி, ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஊர்காவற்றுறைஎன்னும்கிராமத்தில் சுருவில் வீதியில் இவ்வீஸ்வர ஆலயம் அமைந்துள்ளது. இப்பகுதியிலேஇவ்வாலயம் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

மூலஸ்தானத்தை கல்லால் செதுக்கப்பட்ட சிவன் அலங்கரிக்க பிள்ளையார், ஆலயத் திற்கு மெரு கூட்டுகின்றார். தினமும் ஐந்து காலப் பூசைகள் நடைபெறும். இவ்வாயத்தில் வருடாவருடம் ஆனிமாதம் 15 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அத்துடன் தைப் பூசம், தைப்பொங்கல், சிவனுக்குள்ள விஷேட தினங்களில் பூசைகளும், அபிஷேகங்களும், நடைபெறுகின்றன.

பல இடங்களிலுமிருந்து இவ்வாலயத்திற்கு பக்தர்கள் திரண்டு வந்து இவ்வீஸ்வரனின் அருள் பெற்று எகுவார்கள்.

## புளியன்தீவு நாகேஸ்வரன் கோயில் புளியன்தீவு, அனலைதீவு

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புளியந்தீவு என்னும் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

ஒல்லாந்தர் காலத்திற்கு முற்பட்டது என்று அறியப்படும் இவ்வாலயத்திலிருந்து நயினா தீவு நாகபூசணி அம்மனுக்கு நாகம் பூக் கொண்டு போனதாக வரலாறுகள் உள்ளதென்று அறியக்கிடக்கிறது.

மூலஸ்தானத்தில் லிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டு, நாகேஸ்வரன் என்னும் நாமத்தால் அழைக்கப்படுகிறது. பிள்ளையார், சந்திரசேகரர், சோமாஸ்கந்தமூர்த்தி, நடேசர், சிவகாமியம்பாள், சனீஸ்வரபகவான், வைரவர் முதலியன பரிவார மூர்த்திகளாக விளங்கு கின்றன. தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெறும் இவ்வாலயத்தில் வருடாவருடம் திரு வெம்பாக் காலத்தில் 10 நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. சிவராத்திரி, ராத்திரி, சோமவாரம், சித்திரைப்பொங்கல், ஆனி உத்தரம், ஆகிய காலங்களில் விசேட பூசைகள் நடைபெறும். அத்துடன் நடேசருக்குரிய அபிஷேகங்களும் நடைபெறும்.

## விசாலாட்சி சுமேத காசி விசுவநாதர் கோயில், சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை

வலிகாமம் மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வட்டுக்கோட்டை என்னும்ர் கிராமத்தில் இவ்விறைவன் வீற்றிருந்து அருள்புரிகிறார்.

வீரபத்திரர் ஆலயமாக இருந்த இவ்வாலயத்தை 1895 ம் ஆண்டளவில் ஒரு பெரியார் சிவன் ஆலயமாக புதுப்பித்தமைத்தார், என அறியக்கிடக்கிறது. காசியிலிருந்து கொண்டு வரப்பட்ட வர்ணலிங்கம் இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தை அழகுபடுத்துகின்றது.

தினமும் ஆறு காலப் பூசை நடைபெறும் இவ்வாலயம் இப்பகுதியிலே மட்டு மல்லாது யாழ் மாவட்டத்திலே மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாக மிளிர்கின்றது. வருடாவருடம் ஆனி உத்தரத்தில் கொடியேற்றம் நடைபெற்று 9 நாட்கள் விசேட திருவிழாக்கள் நடைபெற்று 10 ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. 11 ம் நாள் தீர்த்தோற்சவமும், அன்னதான வைபவமும் 12 ம் நாள் பூங்காவனத்திருவிழாவும் நடைபெறுகின்றது. அத்துடன் 12 மாதத்திலும் வருகின்ற விசேட தினங்களெல்லாம் விசேட பூசைகளும், அபிஷேகங்களும் நடைபெறுகின்றன. பல இடங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டுப் பலனடைகிறார்கள்.

### கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கோயில், வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை

வலிகாமம் மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வட்டுக்கோட்டை என்னும் கிராமத்தில் மேற்குப் பக்கத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

தினமும் காலை, மாலை, ஆகிய இரண்டு தினங்களிலும் பூசை நடைபெறுகின்றது. வருடாவருடம் ஆனி மாதத்தில் கொடியேறி 10 நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று ரதோற்சவமும் நடைபெறுகின்றது. வருடத்தில் நவராத்திரி, திருவெம்பா முதலிய விசேட காலங்களில் விசேட அபிஷேகங்களும். விசேட பூசைகளும் நடைபெற்றுவருகின்றன.

வருடத்தில் 6 அன்னதான வைபவங்கள் இவ்வாலயத்தில் நடைபெறுகின்றன. இப்பகுதி வாழ் சைவப் பெரு மக்களுக்கு இவ்வாலயம் இருப்பது ஓர் வரப்பிரசாதமாகவே இருக்கின்றது.

### ஸ்ரீ மங்களாம்பிகா சமேத மகாலிங்கேஸ்வர சுவாமி கோயில் — தெக்கணப்பாய்

வலிகாமம் மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீ மங்களாம்பிகா சமேத மகாலிங்கேஸ்வரஸ்சுவாமி ஆலயம் அப்பகுதியில் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

தினமும் மூன்று காலப் பூசை நடைபெற்று வரும் இவ்வாலயத்தில் விசேட காலங்களில், விஷேட அபிஷேகங்களும், விஷேட பூசைகளும் நடைபெற்று வருகின்றன. ஆனி, மார்கழி மாதங்களில் நடராஜர் அபிஷேகம் நடைபெறுகிறது. நவராத்திரி, திருவெம்பாவை, மற்றும் பூரணைதோறும் யத்திரபூசை நடைபெற்று வருகின்றது. பக்தர்கள் பலர் பூசைகளில் கலந்து கொண்டு இறைவன் அருள் பெற்றுத்திரும்புவார்கள்.

### வாலாம்பிகா சமேத வைத்திஸ்வர சுவாமி கோயில், ஓடையம்பதி, குடியிருப்பு, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்

வலிகாமம் மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள இவ்வாலயம் அப்பகுதியில் பிரசித்தி பெறு விளங்குகின்றது.

மூலஸ்தான மண்டபத்தை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் சுவாமி அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்.

தினமும் காலை, மாலை ஆகிய இரு நேரங்களிலும் பூசைகள் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறுகின்றது. விசேட காலங்களில் விசேஷ அபிஷேகங்களும், விசேஷ பூசைகளும் நடைபெறுகின்றன.

சித்திரை மாதத்தில் கும்பாபிஷேகதினம், திருவெம்பா முதலிய காலங்களில் திருவிழாக்கள் நடைபெறும் பல இடங்களிலிருந்தும் அடியார்கள் சென்று இவ்வைத்தீஸ்வரப் பெருமானை வணங்கி அருள் பெறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஸ்ரீ இராஜேஸ்வரர் கோயில், கீரிமலை, காங்கேசன்துறை

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள இவ்வாலயம் அப்பகுதியில் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

1887 ல் பரமகுரு சுவாமிகளால் தாபிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. இலிங் கோற்பவமூர்த்தியை மூலத்தானத்திற்கொண்ட இவ்வாலயத்தில் அகஸ்தியரின் உருவம் பரிவார மூர்த்தியாக விளங்குகின்றது.

தினமும் உதயபூசை மட்டும் நடைபெறும் இவ்வாலயத்தில் வருடாவருடம் மாசி மகத் தினத்தில் தீர்த்தோற்சவம் நடைபெற்று வருகின்றது. விசேட காலங்களில் விசேஷ பூசைகள் நடைபெறுவதால் பல இடங்களிலிருந்தும் அடியார்கள் இவ்வாலயத்திற்குச் சென்று இறைவனை வழிபட்டுப் பலனடைவார்கள்.

### நல்லைநாத சுவாமி கோயில், பருத்தித்துறை வீதி, நல்லூர்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள இவ்வாலயம் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயமாகும். இந்நல்லைநாத சுவாமி ஆலயம் சட்டநாத சிவன் ஆலயம் எனவும் அழைக்கப்படும்.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த பண்டைத் தமிழ் மன்னர்கள் நல்லூரைத் தலை நகராகக் கொண்டு ஸ்தாபித்த சிவன் ஆலயம் நல்லைநாத சுவாமி ஆலயம் என அழைக்கப்படலாயிற்று. இதில் வீற்றிருக்கும் இறைவி நல்லைநாயகி என்னும் பெயருடன் அருள் புரிகிறாள்.

தினமும் திருவனந்தல், காலை உச்சி காலம், சாயரட்சை, அத்தசாமம் ஆகிய ஐந்து வேளையும் பூசை நடைபெற்று வருகின்றது. கொடியேற்றம் வருடாவருடம் இருவேளை நடைபெறும். பங்குனி உத்தரத்திற்கு 10 நாட்களுக்குமுன் திருவிழா நடைபெற்று பங்குனி உத்தரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும். அம்பாள் வாசல் ஆடிப் பூரத்திற்கு தீர்த்தம் நடைபெறுவதற்கு முதல் 10 நாட்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

கும்பபூசை, மானம்பூ, மார்கழி திருவாதிரை, ஆனி உத்தரம், மாதத்தோறும் வரும் பிரதோஷங்கள் முதலிய காலங்களில் உள்வீதித் திருவிழா நடைபெறும். கந்தசஷ்டி, சூரன்போர், கஜமுக சங்காரம், கார்த்திகைத் திங்கள், மகாசிவராத்திரி, பெரிய புராணம், கந்தபுராணம், படனம் முதலியவை சிறப்பாகக் கொண்டாடப்படும்.

### சிவன் கோயில் நீர்நொச்சியந் தாழ்வு, அரியாலை யாழ்ப்பாணம்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வாலயம் சிறப்புற்று விளங்குகின்றது.

1880 ம் ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பரிபாலகராக இருந்த தாமோதரர் சின்னத்தம்பி அவர்கள் காசியிலிருந்து இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சிவலிங்கத்தை கொண்டு வந்தார் என அறியப்படுகிறது. 1881 ஆம் ஆண்டு சித்தி விநாயகர் கோயிலுக்கு வடக்கே கட்ட ஆரம்பித்து அம்முயற்சி பலனளிக்கவில்லை. பின்பு இச்சிவலிங்கம் சித்தி விநாயகர் ஆலயகொடித் தம்ப மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதன் பிறகு 1955 ம் ஆண்டு முன்பு தொடங்கிய இடத்தில் புதிதாகச் சிவன் ஆலயம் கட்டப்பட்டு இச்சிவலிங்கம் பிரதிஷ்டை பண்ணப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றதாக அறியக்கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிவலிங்கம் மனிதனுல் செதுக்கப்பட்டதன்று என்பதும், கங்கா நதியின் பிரவாகத்தினுல் உருவாகியது என்பதும் அதனை உற்று நோக்குபவர்களுக்குப் புலப்படும். அது கண்ணுடி போல் அழுத்தமாகவும், ஒளியினைப் பிரதி விம்பிப்பதாகவும், பிரகாசமுள்ளதாகவும், ஒரு புறத்தே மறையொன்றை உடையதாகவும் விளங்குகின்றது.

இம்மூலமூர்த்தியாகிய சிவலிங்கப் பெருமானுக்கு தியாகேச நாயகர் என்றும், அருகில் வீற்றிருக்கும் அம்மையை உமாதேவி அம்பாள என்றும் நாமம் கொண்டழைப்பர்.

இவ்வாலயத்தில் தினமும் ஆறுகாலப் பூசை நடைபெற்று வருகின்றது. வருடா வருடம் பங்குனி மாதத்தில் 11 நாள் அலங்கார உற்சவம் நடை பெறும். இவ்வாலயம் அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திலுள்ள பராமரிப்பின் கீழ் தற்பொழுது இயங்கி வருகிறது. பல இடங்களிலிருந்தும் அடியார்கள் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபட்டுப் பலனடைகிருர்கள்.

### சிவன் கோயில் பருத்தித்துறை (பசுபதீஸ்வரர் கோயில்)

வடமாராட்சியில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பருத்தித் துறை பஸ் நிலையத்திலிருந்து தெற்கே பிரதான வீதியில் 100 யார் தூரத்தில் அமைந்துள்ள இவ்வாலயம் அப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயமாகும்.

1782 ம் ஆண்டு இவ்வாலயத்தைக் கட்டத் தொடங்கி 1814 ம் ஆண்டு முடிவுற்றதாக வரலாறு மூலம் அறியமுடிகிறது. மூலஸ்தானத்தில் சிவன் உருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தினமும் ஐந்து காலப் பூசை நடைபெறும் இவ்வாலயத்தில் வருடாவருடம் இருமுறை திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஆனி மாதம் சிவபெருமானுக்கு பதினுறு திருவிழாக்களும், அம்மனுக்கு ஆடி மாதத்தில் பத்து திருவிழாக்களும், நடைபெறும். பல இடங்களிலிருந்தும் இவ்வாலயத்திற்கு நாள்தோறும் பக்தர்கள் சென்று இறைவனை வழிபட்டுப் பலனடைவார்கள்.

பசுபதீஸ்வரர் பேரில் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் பாடிய ஊஞ்சற் பாடல்களும் முத்துச்குமாரசுவாமிக் குருக்கள் பாடிய பசுபதீசுரர் அத்தாதி என்பனவும் இவ்வாலயத்தின் சிறப்பை இயம்பிக் கொண்டிருக்கின்றன.

ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பாடிய பசுபதீஸ்வரசுவாமி திருவூஞ்சல் பாடலில் ஒரு பாடல் பின்வருமாறு :

நலமோங்கு நாதவிந்து கால்க ளாக
நயனோங்கு சத்தியொளிர் விட்ட மாக
நிலமோங்கு மந்திரநூ லிழைய தாக
நிகமோங்கு மறைநான்குங் கயிற தாகப்
பலமோங்கு முபநிடதம் பலகை யாகப்
பரமோங்கும் பிரணவம்பொற் பீட மாகப்
புலமோங்கு கலைவாணர் புகழ்ந்து பாடும்
புலோலிநகர்ப் பசுபதியே யாடீ ரூஞ்சல்.

### சிவன் கோயில்—வல்வெட்டித்துறை

வடமாராட்சியல் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வல்வெட்டித் துறை என்னும் கிராமத்தில் காங்கேசன்துறை, பருத்தித்துறை வீதியில் இவ்வாலயம் அமைந்துள்ளத.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயம் ஆதி காலம் தொட்டு இருப்பதாக பலர் கருதுவதாக அறியப்படுகிறது இவ்வாலயத்திலுள்ள இறைவனை வைத்தீஸ்வரர் என்றும், இறைவியை வாலாம்பிகை என்றும் அழைப்பர்

ஆறுகாலப் பூசை நடைபெறும் இவ்வாலயத்தில் இரு திருவிழாக்கள் நடைபெறுகின்றன வருடாவருடம் பங்குனி மாதத்தில் சிவனுக்கு 18 நாட்கள் திருவிழாக்கள நடைபெறுகின்றன ஆடி மாதத்தில் அம்மனுக்கு 10 நாட்கள் திருவிழாக்கள் நடை பெறும்

இவ்வாலயம் இப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஓர் சிவனாலயமாக விளங்குகின்றது. இப்பகுதி வாழ் சைவப் பெருமக்கள் இவ்வாலயத்தில் வீற்றிருக்கின்ற இறைவனேயும் இறைவியையும், வழிபட்டுப் பலனடைகிறார்கள்.

## மருதடி தான்தோன்றீஸ்வரர் கோயில்—வல்லிப்புரக் குறிச்சி, புலோலி

வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வல்லிபுரக் குறிச்சி என்னும் இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

சிவன் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது தினமும் காலையும், மாலையும் பூசை நடைபெறும் இவ்வாலயத்தில் வருடாவருடம் இரு திருவிழாக்கள் விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றது.

சிவனுடைய திருவிழா சித்திரை மாதம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் கொடியேற்றி 10 நாட்கள் திருவிழா நடைபெற்று உத்தர நக்ஷத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும். அம்மனுக்குரிய திருவிழா வைகாசி மாதம் ஆயிலிய நக்ஷத்திரத்தில் கொடியேற்றி, 10 நாட்கள் திருவிழா நடைபெற்று பூரணை விரதத்திற்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். கந்த சஷ்டிப் பூசை, பிள்ளையார் கதைப் பூசை, திருவெம்பாப் பூசை, முதலியன சிறப்பாக நடைபெறும். பல இடங்களிலிருந்தும் பக்தர்கள் இவ்விறைவனை வழிபட்டுப் பலனடைவார்கள்.

## மூச்சம்புலவு சிவன் கோயில்—வல்லிபுரக் குறிச்சி, புலோலி

வடமராட்சி பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூச்சம் புலவு என்னுமிடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

மூலஸ்தானத்தை சிவன் அலங்கரிக்கின்றான் தினமும் காலையும், மாலையும் பூசை நடைபெறும் இவ்வாலயத்தில் திருவிழாக்கள் நடைபெறுவதில்லை என அறியக் கிடக்கிறது. வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழா உற்சவ காலத்தில் அடியார்களுக்கு இவ்வாலயத்தில் மூன்று நாட்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதாக அறியப்படுகிறது. அப்பகுதி மக்களுக்கு இச் சிவாலயம் அமைந்திருப்பது ஓர் வரப்பிரசாதமாகும்.

## புக்கடி அம்பலவாணேஸ்வரர் கோயில்—ஏழாலை

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ் அம்பலவாணேஸ்வரர் ஆலயம் அமையப் பெற்றுள்ளது. ஏழு ஆலயங்கள் உள்ளமையால் "ஏழாலயம்" எனப் பெயர் பெற்று ஏழாலை எனத் தற்போது வழங்கப்படுகிறது. இவ்விடத்திலுள்ள ஏழு ஆலயங்களுள் தனிப் பெருமை வாய்ந்த இச் சிவாலயமும் அமைந்திருப்பது இக் கிராமத்திற்கோர் சிறப்பாகும்.

இற்றைக்கு 180 வருடங்களுக்கு முன்னர் உண்டி கொடுத்து உயிர் புரக்கும் உழவர் பெருங்குடியில் சைவாசார சீலராய் வாழ்ந்த சைவப் பெரியார் சின்னத்தம்பி அவர்கள் மங்கலமென்பது மீனாட்சி என்பதற்கமைய மணம் செய்து வாழும் நாளில் மக்களைப் பெற்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மண்ணுலகில் நெடுநாள் வாழாமையால் பெருதோர்போல் பெரிதும் வருந்தினர் பிள்ளைகள் பிறப்பதும், இறப்பதுமாயிருந்தமையால் அவரது உள்ளம பெரிதும் பேதலித்தது. மனம் தளர்ந்த காரணத்தால் கடவுள் வழிபாட்டையும் மறந்தார். இவ்வுலக வாழ்விலே வெறுப்புற்றுப் பித்தர் பைசாசர்தம் கொள்கை உடையரானர். பின்னர் ஒருநாள் அவர் முன்னர் எத்தித் தொழுத கூத்தப்பெருமானின் திருவருள் கூட்டிவைப்ட ஒரு ஞானதேசிகரின் ஆசிகிடைத்தது. சைவப் பெரும் குரவர்கள் சைவ சமய விதிபடி திரு. சின்னத்தம்பி அவர் நிலையராக்கி, "கொல்லான் புலாலை மறுத்தவனே இதனை உபாசனை செய்து வழிபடுவதற்கு உரியவன்" எனக் கூறி ஒரு சிவலிங்கத்தையும், அவரிடம் கொடுத்து இதற்கு நீங்கள் ஆசாரசீலராய் நித்தமும் சிவபூசை செய்து வழிபாடு செய்வீராகவென ஆசி கூறினர்.

முற்காலத்தில் வாழ்ந்த சைவப் பெருமக்கள குருவாக்கை நம்புபவர்களான படியால் அவர் வாக்குத் தெய்வவாக்கு என்று மனதில் கொண்டு குருவினல் தமக்குக் கொடுத்தருளப்பட்ட சிவலிங்கத்தைத் தாம் வைத்து உபாசனை செய்வதற்கு எற்ற இடம் எதுவெனச் சிந்திக்கும்போது அவரது வாழ்மனைக்குப் பக்கத்தில், பாலித்துச் செழித்து வளர்ந்திருந்த வில்வமரத்தின் கீழ் வைத்து வழிபாடு செய்வதே தக்கதெனக் கருதினர். அம்மரத்தின் கீழே சிவலிங்கப் பெருமானைத் தாபனம் செய்து மிகவும் ஆசாரசீலராய்ப் பத்திமையோடு தினந்தோறும் வழிபாடு செய்து வந்தார்.

பின்பு இவரது மூத்த மகனுகிய வேலாயுதரும் அவரது மனைவியாகிய சேதுப்பிள்ளை அவர்களும் இவ் வில்வ மரநிழலில் வைத்துப் பூசித்துவரும் சிவலிங்கப் பெருமானுக்கு ஓர் ஆலயம் அமைத்து வழிபாடு செய்ய விரும்பினர். திருவருள் துண்ட எழுந்த நினைவின் படி இப்பொழுது ஆலயம் இருக்குமிடம் அவர்களுக்குரிய தாகையால் அந்த இடத்தில் ஆலயம் அமைத்துத் தாம் பூசித்த சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து வழிபாடு செய்தார்கள்.

தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெற்று வரும் இவ்வாலயத்தில் திருவிழாக்களும், சிறப்பாக நடை பெறுகின்றன. தைப் பூசம், சிவராத்திரி, பங்குனி உத்தரம், சித்திரைப் புதுவருஷம், ஆடிப்பூரம், சோமவாரம், திருவெம்பாவை, முதலிய காலங்களில் உற்சவங்கள் சிறப்பாக நடைபெறும். பல இடங்களிலிருந்தும் பக்தர்கள் இவ்வாலயத்திற்குச் சென்று இறைவனை வேண்டி அருள்பெறுவார்கள்.

### விசாலாச்சி சமேத விசுவநாத சுவரமி கோயில்—கந்தரோடை வீதி, சுன்னுகம்

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வாலயம் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

மூலமூர்த்தியாக சிவனும், அம்மனும் ஆலயத்தை அலங்கரிக்கின்றனர். பிள்ளையார், சுப்பிரமணியர், வைரவர், ஆகிய தெய்வங்களும் பரிவார மூர்த்திகளாக இருக்கின்றனர். தினமும், மூன்று காலப் பூசை முறையே நடைபெறுகின்றது.

### விசாலாட்சி சமேத விஸ்வநாதீஸ்வரர் கோயில் சோதி வேம்படி, அட்டகிரி வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வாலயம் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. நவாலியூர் சோமசுந்தரப்புலவரால் ஊஞ்சல் பாட்டு பாடப் பெற்ற பெருமை மிக்க ஆலயமாகும்.

இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தை லிங்கமூர்த்தி அம்பாள் சிலை அலங்கரிக்கின்றது சனீஸ்வரர், பிள்ளையார், முதலியோர் பரிவார மூர்த்திகளாக விளங்குகின்றனர். தினமும் இரு காலப் பூசை நடைபெற்று வரும், இவ்வாலயத்தில் பங்குனி மாதத்தில் 10 அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. தைப்பூசம், திருவெம்பா சோமவாரம் முதலிய காலங்களில் விசேட பூசைகள் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தில்லேஸ்வரம் சிவன் கோயில் 6 ம் வட்டாரம், மண்டைதீவு

தீவுப் பகுதி தெற்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மண்டைதீவு 6 ம் வட்டாரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

சிவலிங்க மூர்த்தி இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தை அலங்கரிக்கின்றது. சண்டேசுவரர், வைரவர், நவக்கிரகங்கள் முதலியன பரிவார மூர்த்திகளாக விளங்குகின்றன.

தினமும் மூன்று காலப் பூசை நடைபெறும் இவ்வாலயத்தில் வருடாவருடம் ஆனி மாதத்தில் அலங்கார உற்சவம் இடம்பெறும். பல இடங்களிலிருந்தும் இவ்வாலயத்திற்கு அடியார்கள் சென்று அங்கு வீற்றிருக்கின்ற ஈஸ்வரனை வழிபட்டுப் பலனடைகிறார்கள்.

### பாணாவிடைச் சிவன் கோயில் பாணாவிடை, ஊர்காவற்றுறை

தீவுப் பகுதி தெற்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இச் சிவாலயம் அமைந்துள்ளது.

ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்பாள் சமேத இராம லிங்கேஸ்வரர் பெருமான் மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ளார். பிள்ளையார், முருகன், சண்டேசுவரர், நவக்கிரகம், வயிரவர், ஐயனார், முதலிய பரிவார மூர்த்திகளுக்கு சந்நிதானம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தில் மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள மூர்த்தி, கடலில் கண்டெடுக்கப்பட்ட கல் ஒன்று சிவலிங்கமாக வளர்ந்துள்ளதாக வரலாறு கூறுவதாக அறியமுடிகிறது.

மூன்று நேரப் பூசை நடைபெறும் இவ்வாலயத்தில் வருடாவருடம் சதய நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவத் திருவிழா வரக்கூடியதாக கொடியேற்றப்படுகிறது. திருவிழாக்கள் 11 நாட்கள் நடைபெறும்.

### காசி விஸ்வநாவேஸ்வரர் கோயில் பெருங்குளம், வேலணை மேற்கு, வேலணை

தீவுப் பகுதி தெற்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

ஸ்ரீ நடராஜப் பெருமான் மூலமூர்த்தியாக இவ்வாலயத்தில் வீற்றிருக்கிறார். காலை, மதியம், மாலை ஆகிய மூன்று காலமும் பூசை நடைபெற்று வருகிறது. ஆனி, உத்தரம், மார்கழி, திருவாதிரை, ஆகிய விசேட காலங்களில் நடராஜப்பெருமான் ரதத்தில் ஊர்வலம் வருவார். பல பகுதிகளிலிருந்தும் அடியார்கள் ஆலயத்திற்குச் சென்று இவ் ஈஸ்வரனின் அருள் பெற்று ஏகுவார்கள்.

### இருபாலை ஸ்ரீ வாலாம்பிகைதேவி சமேத வைத்தீஸ்வரசுவாமி கோயில் கோப்பாய் தெற்கு, கோப்பாய்

திருவருட் செல்வங்கள் பொலிந்து விளங்கும் ஈழவள நாட்டின் வடபாலமைந்த யாழ்ப்பாணத்தில் வலிகாமம் கிழக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இருபாலை என்னும் கிராமத்தின் கண்ணே மிகப் பழமை வாய்ந்த ஒரு சிவாலயமாக விளங்குகின்றது.

1866 ம் ஆண்டு இருபாலை வாசியாகிய மூதாட்டி மாணிக்க அம்மை காசி யாத்திரையின் போது தாம் பயபக்தியுடன் கொணர்ந்த சிவலிங்கத்தினை இருபாலைக் கேணிக்குளத்தின் தென் பாகத்தில் பிரதிஷ்டை செய்து அடியார்கள் வணங்கி வரும் காலத்தில் இடவசதிக் குறைவினால் 1943 ம் ஆண்டு தற்போது குடிகொண்டிருக்கும் நெடுங்கேணி என்று அழைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் நிலப்பரப்பில் திரும்பவும் பிரதிஷ்டை செய்து வழிபடுவோரால் 1948 ம் ஆண்டு திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. 1967 ம் ஆண்டு அம்பாள் விக்கிரகம் ஸ்தாபிக்கப் பெற்று 1976 ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடாத்தப் பெற்றது.

தினந்தோறும் இரு வேளை பூசை நடைபெற்று வரும் இவ்வாலயத்தில் ஒவ்வொரு மாதத்திலும் வரும் விஷேட தினங்களில் விஷேச பூசைகள் நடைபெறும். பல இடங்களிலுமுள்ள பக்தர்களின் வழிபாட்டுத் தலமாக இவ்வாலயம் விளங்குகின்றது.

## ஸ்ரீ நடேசப்பெருமாள் கோயில் நீராவியடி, வண்ணார்பண்ணை

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வாலயம் பிரசித்தி பெற்று விளங்குகின்றது.

ஈழத்தில் ஞான குரு பரம்பரையை ஏற்படுத்திய கடையிற் சாமியாரால் " இது சிதம்பரமடா " என்று முன்மொழிந்த இடத்தில், அன்னாரின் சமாதிச் சருகில், சிதம்பரபாணியில், விநாயக மூர்த்தி செட்டியாரும், அவரின் இளைய சகோதரரும் இணைந்து 1920 ஆண்டில் இவ்வாலயத்தைத் தாபித்தனர்.

சிவகாம சுந்தரி சமேத நடேசர் இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக விளங்குகின்றார் அத்துடன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பூஜித்த விநாயகர் சிலையும், இக்கோயிலின் மூலஸ்தானத்தில் உள்ளதாக அறியக்கிடக்கிறது.

தினமும் இருவேளை பூசை நடைபெறும் இவ்வாலயத்தில் நடேசப் பெருமானுக்குரிய 6 அபிஷேகங்களும், விஷேசமாக நடைபெறும். திருவெம்பாவை, சிவராத்திரி, பிரதோஷங்கள், நாயன்மார் குரு பூசை, தினங்கள் முதலிய விஷேட தினங்களில் விஷேட பூசை நடைபெறும். பக்தர்கள் பல பாகங்களிலிருந்தும் இவ்வாலயத்திற்குச் சென்று இறைவனை வழிபட்டு பலனடைவார்கள்.

## தான்தோன்றியீசுவரர் கோயில் பாலாவி, பொன்னுவெளி

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. மூதாதையர்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தை தான்தோன்றியலிங்கம் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வாலயத்தை காகம் கரைந்தான் ஐயனார் ஆலயம் என்றும், அழைப்பார்கள். வருடா வருடம் ஊர் மக்கள் எல்லோரும் கூடி குளிர்த்தி, பொங்கல் ஆகியவற்றை சிறப்பாக நடாத்தி வைப்பார்கள். விசேட காலங்களில் சிலர் விரும்பி பூசை நடாத்துவார்கள் எனவும் அறியக்கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலேஸ்வரம்

இத்தலம் வடமாகாணத்தில் காங்கேயன் துறையிலிருந்து 3 மைல் தொலைவில் காணப்படுவது. முதற் சிங்கள மன்னனுகக் கருப்படும் விஜயன் தனது ஆட்சியை ஏற்படுத்துதற்கு பூர்வாங்கமாக கீழ்த்திசைக்குத் தம்பலகாமத்துக் கோணேசர் ஆலயத்தை நிறுத்தி மேற்றிசைக்கு மாதோட்டத்திற் பழுதுபட்டுக் கிடந்த திருக்கேதீச்சுரச் சிவாலயத்தைப் புதுப்பித்து தென்திசைக்கு மாத்தறையில் சந்திரசேகரர் கோயிலை எழுப்பி வடதிசைக்குக் கீரிமலைச்சாரலிலே திருத்தம் பலேஸ்வரர் கோவிலினைக் கட்டுவித்தான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது.

இதனைத் தரிசித்து பாவ விமோசனம் பெற்றுய்ந்தோராக நகுலமுனிவர் மாருதப்புரவீக வல்லி, நளமகாராசன், அருச்சுனன் ஆகியோர் குறிக்கப்படுகின்றனர்.

பிருகு முனிவர் இட்ட சாபத்தினுல் கீரிமுகமுற்ற ஜமதக்கினிமுனிவர், திருத்தம் பலேஸ்வரத்துக்கருகிலுள்ள வாவியில் நீராடி அந்த விகாரம் நீங்கப் பெற்றதால் இவ்விடம் கீரிமலை என்றும், திருத்தம்பலேஸ்வரமும் நகுலேஸ்வரம் என்று அழைக்கப்படலாயிற்று, என ஸ்காந்த புராணத்து ஒருபாகமாகிய தட்சண கைலாய புராணம் கூறும். மலையெனக் குறிக்கப்படும் கற்பாறையின் குகையில் வாழ்ந்த முனிவர், மிகுந்த விருத்தாப்பிய முற்றவராகி, தவத்தாலும், மூப்பாலும் கீரிபோல் உடல் குறுகிச்சுருங்கிக் காணப்பட்டமையின் நகுலமுனிவர் அழைக்கப்பட்டனர் எனக் கொள்ளல் பொருத்தம்.

பொருள் கவர்தலும், கத்தோலிக்க மதப்பரப்பலும் நோக்கமாகக் கொண்ட போர்த்துக் கேயர் கழுகு நோக்கிலிருந்து நகுலேஸ்வரமும் தப்பிற்றிலது, அவர்கள் தம்மோடு ஒன்றி நின்ற பரராசசிங்கன் இறக்கும் வரையில் பொறுத்திருந்து அவன் இறந்தவுடன் கோவிலை இடித்தழிக்க முற்பட்டனர். விடயத்தை ஏலவே அறிந்த கோயிற் குருக்கள ஆலயத்திருந்த விக்கிரகங்களைக் கோயிற் கிணற்றிலிட்டு மண்ணுல் மறைத்து விட்டு நீங்கினர் என்பர்.

நாவலர் அவர்கள், புராதன ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்ய வேணடுமென பிரசாரம் செய்தமையடுத்து, இதனையும் சீரமைக்க முயற்சிமேற்கொள் ளப்பட்டது. அதனுல் து ண்டப்பட்ட ஸ்ரீகார்த்திகேயக் குருக்கள் முயற்சியால் திருப்பணி நிறைவேறி 1859 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இன்று நித்திய நைமித்திய கிரியைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. இவ்வாலய மகோற்சவம் மாசி மாதத்தில் பதினைந்து நாட்கள் நடைபெறுகின்றது. மாசிமகா சிவராத்திரியில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

இவ்வாலயத்தின் தொன்மை பற்றிக் கூறும் நூல்கள் ; தட்சணகைலாய புராணம், கைலாய மாலை, நகுலாசல புராணம், நகுலமலைக் குறவஞ்சி, நகுலமலைச் சதகம், நகுலகிரி; புராணம், நகுலேஸ்வரர் விநோத வித்திய கவிப்பூங்கொத்து என்பனவாம்.

இவ்வாலயத்திற்குத் திருப்புகழ்ப் பாடல் ஒன்றும் உண்டு என்றும் திருப்புகழில் அருக் கொணமலை எனப் போற்றப்படுகின்றதலம் இதுவே எனவும் கொள்வர்.

இவ்வாலயத் தீர்த்தக் கரையின் சூழலிலே பல அநுபூதிமான்களது சமாதிகள் உள இவ்வாலயத்தைச் சூழப் பல திருமடங்களும் யாத்திரிகர் வசதிக் கேற்ப அமைக்கப்பட்டுள்ளன. கதிரவேலுச் சிறுப்பர்மடம், சித்தங்கேணி வைத்திலிங்கம் மடம், தொல்புரம் கிருஷ்ணபிள்ளை மடம் போன்றவை குறிப்பிடத் தக்க சிலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தோடு ஒட்டிய " சிவநெறிக்கழகம் " எனும் சைவநெறி பரப்பும் மன்றம் சைவ மகாநாடுகளையும் சைவக் கருத்தரங்குகளையும் சைவ சமய அறிவுப் போட்டிகளையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்ஷேத்திரத்தற்கு நூற்றெட்டு அடி உயரங்கொண்ட ஒன்பது தள இராஜகோபுரத்திற்கு நவரத்தின கர்ப்பாதார சங்குஸ்தாபனம் 19.01.1981ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

பூரணத்துவ நிறைவுள்ள ஒரு சிவாலயத்திற்கு தூலலிங்கம், சூக்கும லிங்கம், சூட்சுமா சூட்சுமலிங்கம் என்ற மூவகை இலிங்கங்களும் அமைய வேண்டுமென்பது சிவாகமவிதி.

தூலலிங்கம்—இராஜகோபுரம்.

சூக்குமலிங்கம்—கொடித்தம்பம்.

சூட்சுமா சூட்சுமலிங்கம்—மூலலிங்கம்.

பிண்ட நிலையில் அண்ட ஆலயத்தை நோக்கும் போது இராஜகோபுரம் திருப்பாதம்; கொடித்தம்பம்—குறி; மூலலிங்கம்—சிரசு (பிரமதந்திரம்) தூல தரிசனத்தை முதற் செய்தே பின் சூக்கும், சூட்சமாசூட்சும தரிசனத்தைப் பெற வேண்டும். வழிபாட்டு முறையும் அது வேயாகும்.

மூர்த்தி, தலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற அருள்மிகு நகுலாம்பிகா சமேத நகுலேசுவரர் ஆலயத்தின் இராஜ கோபுரத் திருப்பணி தொடங்கப் பெற்றது குறிப்பிடத் தக்கது.

**வண்ணை வைத்திஸ்வரன் கோவில்**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையிலே 1970 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் வளர்பிறைப் புனர்பூசநாளிலே மகாகும்பாபிஷேகத்துடன், வைத்தீஸ்வரப் பெருமான் அடியார்களுக்கு இன்னருள் பாலித்துக் கொண்டிருக்கிறான்.

கோபாலச் செட்டியாருக்கு அருமை மகனாக வைத்திலிங்கம் செட்டியார் பிறந்தார். கருவிலே திருவுடையவர். அக்காலத்து யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஒல்லாந்த தேசாதிபதியும் அவர் மனைவியும் குழந்தையில்லாக் குறையைப் போக்க, பேரழகு வாய்ந்த வைத்திலிங்கம் செட்டியாரைத் தத்த புத்திரனாகப் பெற்றோர் அனுமதியுடன் அன்புடன் வளர்த்தனர். வைத்திலிங்கச் செட்டியார் வளர்ந்து வாலிபனானதும் வளர்ப்புத் தந்தையாகிய மகாதேசாதிபதியினது அனுசரணையுடன் மன்னாரில் முத்துக்குளிக்கும் குத்தகையை ஏலத்திற் பெற்றுப் பெருஞ் செல்வந்தரானார். ஒல்லாந்தர் ஆட்சி முடிந்து தேசாதிபதியும், மனைவியும் நாடு திரும்புமுன் வைத்திலிங்கச் செட்டியார் சிவன் கோவில் கட்டுவதற்கு அனுமதி பெற்றுக் கொண்டார். இறைவன் கனவிலே கட்டளையிட்டபடி வண்ணார் பண்ணையிற் கோவில் கட்டத் தீர்மானித்தார். புள்ளிருக்கு வேளூர் வைத்தீஸ்வரன் கோவிலைப் போலவே தானும் ஒரு கோவில் கட்டத் தொடங்கினார்.

எதிராளிகளது சூழ்ச்சியினாலே வைத்திலிங்கம் செட்டியாருடைய நண்பர் பனங்காமம் பிரதானியாகவிருந்த நல்ல மாப்பாண வன்னியார் சிறை வைக்கப்பட்டார். வைத்திலிங்கச் செட்டியார் வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் கட்டிக் கொண்டிருக்கும் போதே கொழும்பு சென்று அரசினருக்கு 12,000 டொலர் பணம் கட்டி நண்பனைச் சிறைமீட்டு வந்த நன்றிக்கடனை ஈடு செய்யுமுகமாக, நல்ல மாப்பாண வன்னியர் தனது காணியிலிருந்து 20,000 பனைமரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் கட்டுவதற்குக் கொடுத்துதவியதுடன் ஆலயத்தின் துணுக்காயிலுள்ள தரங்கண்டல் என்னும் கிராமத்தையே சிவன் கோவில் நித்தியபூசைச் செலவுக்குத் தானமாகக் கொடுத்தார்.

புள்ளிருக்கு வேளூரைப் போலவே மூலமூர்த்திக்கு வைத்தீஸ்வரன் என்றும் அம்பாளுக்குத் தையல் நாயகி என்றும், தீர்த்தத்திற்குச் சித்தாமிர்தபுட்கரணி என்றும் பெயரிட்டு இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட சிற்பாசாரிகளினாலே ஆகம முறைப்படி அமைக்கப்பெற்ற சிவாலயமாக விளங்குகின்றது வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம். இவ்வாலயத்தில் ஆறுகாலப்பூசை நாளது வரை நடைபெறுகிறது.

பங்குனி உத்தர நாளன்று தீர்த்தத்துடன் முடிவடையுமாறு ஆண்டுதோறும் 22 நாட்களுக்கு வைத்தீஸ்வரப் பெருமானுக்கும், ஆடிப் பூரத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் முடிவடையுமாறு தையல் நாயகி அம்பாளுக்கும் மகோற்சவம் நடைபெறும். நவராத்திரி, திருவெம்பாவை, முதலான விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறுவன.

ஆகம முறைப்படி அமைக்கப்பெற்ற சிவாலயம் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் என்பதனாலே நல்லைநகர் ஆறுமுகநாவலர் நாள்தோறும் சென்று வழிபாடியற்றிக் கதாப்பிரசங்கம் செய்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நாவலருக்குப் பின் அவர் மருகர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளை புராணப்பிரசங்கங்களை அங்கேயே செய்து வந்தார். பின் சங்கரசுப்பையரும், கொக்குவில் சைவப்புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளையும், நல்லை ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்களும், திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களும், பிரசங்கம் பஜனை, கூட்டுப்பிரார்த்தனை, ஆகியவற்றை நிகழ்த்தி வண்ணை வைத்தீஸ்வரன் பேரருள் பெற்றனர்.

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலுக்குத் தமிழ்நாட்டிலிருந்து அந்நாளில் தருவிக்கப்பட்ட அர்ச்சகர்கள் சிவாகம விற்பன்னர்களாக இருந்தார்களெனவும், இந்நாட்டில் வேதாத்தியயனமும், சிவாகம ஞானமும் பரவுவதற்கு அவர்களே காரணர்களாக இருந்தார்களெனவும் கூறப்படுகின்றது.

### காரைநகர் சிவன் கோயில்—ஈழத்துச் சிதம்பரம்

மூர்த்தி—சுந்தரேசர்.

அம்மை—சௌந்தராம்பிகை.

ஈழத்துச் சைவமக்கள் யாவரும் தமிழகச் சிதம்பரத்தில் ஈடுபாடு உடையவர்கள். தமிழகத்துச் சிதம்பரம் போன்று ஈழத்தில் சிதம்பரம் ஆவது காரைநகரில் உள்ள " திண்ணபுரம் ". என்னும் சிவாலய மாகும்.

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் கூறுவது " தமிழகமும் ஈழமும் வெள்ளத்தால் பிரிவு கண்டாலும், அங்குள்ளவர்கள் உள்ளத்தால் ஒத்த கொள்கையுடையவர்கள். அதனாலே, தமிழகத்தலங்களின் பெயர்கள் ஈழத்தில் அமைந்து கொண்டமை வியப்பன்று. அவ்வாறு அமைந்ததொன்றே ஈழத்துச் சிதம்பரம் "

(ஈழத்துச் சிதம்பர புராண–வாழ்த்துரை)

சிதம்பரத்தைப் போலவே இங்கும் விழாக்களும் வழிபாடுகளும் நடைபெறுகின்றன. புலவர்மணி இளமுருகனார் " ஈழத்துச் சிதம்பர புராணம் " எனும் தலபுராணத்தை உள்ளக்கமலத்திலே ஊற்றெடுத்துச் சிவானந்தத் தேன் ததும்பும் அருவியாகப் பாடித் தந்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தை உருப்படுத்திய சிவமுருகர் "தில்லைக் கூத்தனை ஏத்துதல்" கூறும் பாடல் :—

தேவர்களுங் காணாத திருவடிகள் கண்டுகண்டே
ஆவினறு நெய்யனலிற் புகுந்ததென வகங்குழைந்து
மேவுமைந்த புலனெல்லாம் விழிகொளங்கண் ணீரரும்பப்
பாவியெனக் கருளென்று பாடினார் பரவிநின்றார்.

தில்லையில் போல் தின்னபுரத்து ஈழத்துச் சிதம்பரத்திலும் திருவெம்பாவை விழா நிகழும். திருவெம்பாவைத் திருவிழார் தொடங்கி ஒன்பதாம் நாளிலே தேர்த் திருவிழா நிகழும் அன்றிரவு பதினெட்டு நாழிகையின் மேல் இருபத்து நான்கு நாழிகை வரையில் ஆதிரையில் செய்யப்படும் அபிடேகத்தையும், அதன்மேல் சூரியோகத்திற் இடையில் செய்யப்படும் விசேட ஆராதனையும் காண்பது மானிடப் பிறவியைப் பெற்றதன் பயனே.

ஈழத்துச் சிதம்பரத்து ஐந்து தேரும் வீதிவலம் வரும் காட்சி.

தொல்லை துடைத்தரு ளைங்கரத் தூமணி தம்மோடு
மல்லன் மணித்தொடை மங்கையர் நாயக னோர்தேர்மேல்
அல்ல லறுத்தடி யார்க்கரு ளையனு மோர்தேர்மேல்
எல்லையி லின்மணி வாசக மீந்தவ ரோர்தேர்மேல்.

தொல்லை துடைத்து அருள் ஐங்கரத் தூ மணி தம்மோடுஅடியவர்களுக்கு வருகின்ற துன்பங்களை நீக்கியருளுகின்ற ஐந்து கரங்களையுடைய பிள்ளையாரோடு, மல்லல் மணித்தொடை மங்கையர் நாயகன் ஓர் தேர்மேலும்-வளம்மிக்க அழகிய மாலைகளை அணிந்த வள்ளிநாயகியா-ருக்கும் தெய்வநாயகியாருக்கும் தலைவனாகிய முருகப்பெருமான் ஒரு தேரின் மேலும், அல்லல் அறுத்து அடியார்க்கு அருள் ஓர் தேர் மேலும்—அடியவர்களின் துன்பங்களை நீக்கி அவர்களுக்கு அருள்புரிகின்ற ஐயனார் ஒரு தேரின் மேலும், எல்லையில் இன்மணிவாசாகம் ஈந்தவர் ஓர் தேர் மேலும்—எல்லையில்லாத இனிமை மிக்க திருவாசகத்தைப் பாடித்தந்த மணிவாசகப் பெருமான் ஒரு தேரின் மேலும்,

இதுவும் அடுத்த செய்யுளும் குளகம். தூ மணி என்றது பிள்ளையாரை—தூ மாணிக்கம் போன்ற சிவந்த நிறத்தை உடையவர். என்றபடி ஔவையாரும், "துங்கக் கரிமுகத்துத் தூ மணி", என்றார். உம்மை பிரித்துக் கட்டப்பட்டது.

ஐந்தொழில் நாடக மாடிடு மையனு மோர்தேர்மேல்
பைந்தொடி யாள்சிவ காமச வுந்தரி யோர்தேர்மேல்
மந்திர நான்மறை செந்தமிழ்மாமறை வானேற
வந்தடி யார்தொழ மாமணி வீதி வலம்வருவார்.

ஐந்தொழில் நாடகம் ஆடிடும் ஐயன் ஓர் தேர் மேலும்ஐந்தொழில் செய்தலாகிய திரு நடனத்தை ஆடும் நடராசப்பெருமான் ஒரு தேரின் மேலும், பைந்தொடியாள் சிவ காமசுந்தரி ஒரு தேர் மேலும்—பசிய வளையல்களை அணிந்த சிவ காமசுந்தரி அம்மையார் ஒரு தேரின் மேலும் ஆக, மந்திர நான் மறை செந்தமிழ் மாமறை வான் ஏறமந்திர வடிவமான நால்வேதங்க செந்தமிழ் மந்திரங்களான தேவார திருவாசகங்களும் பேரொலியினால் விண்ணிடத்திலும் கேட்க, அடியார் வந்து தொழ—அடியவர்கள் பலரும் வந்து வணங்கி நிற்க, மாமணி வீதி வலம் வருவார்—எல்லாக் கடவுளரும் மூன்றும் வீதியாகிய பெரிய அழகிய வீதியில் வலமாகச் சுற்றிவருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராத்திரியில் நான்கு சாமத் திருமுழுக்கும் வழிபாடும்.

நன்றே யருளுஞ் சிவனிராவின்
  நான்கு சாமப் போதெல்லாங்
குன்றுப் பிறவிக் குலமழித்து
  வீடு கூட்டும் பெருமாற்கு
மன்றற் கலசம் வளர்நீராற்
  பிறவான் முழுக்கும் வழிபாடுந்
துன்றுந் தொண்டர் விழித்தபயன்
  றுய்க்கும் வண்ணஞ் செய்வாரால்.

## புலோலிச் சுயம்புலிங்கம்

### உபயகதிர்காமம் வேலையில்

தென்னிந்தியாவில் திருநெல்வேலிப் பகுதியில் அமைந்த பாட்டப்பத்துக் கிராமத்தில்' பிராமண குலத்திலே பிறந்த எஸ். லோகாம்பாள் அம்மையாரால், கனவில் கண்ட கட்டளையின்படி கண்டபிடிக்கப்பட்டது இச்சுயம்புலிங்கம்.

"உபயகதிர்காமம்" என்பது முருகன் அருளிய படி இவ்வாலயத்தைக் கண்டுபிடித்த அம்மையாரால் இடப்பட்ட பெயராகும்.

உபயகதிர்காமத்தில் சுயம்புலிங்கமாகக் கண்டுபிடிக்கப்பட்ட மூலலிங்கத்தில் இயந்திர அமைப்பு அமைந்திருந்தது. இந்தயந்திரத்தை வரைந்து அர்ச்சித்து வழிபட்டுப் பலர் விரும்பிய பயன்களைப்பெற்றுய்கின்றனர்.

வல்லிபுரக் கோவிலுக்கு இத அண்மையிலுள்ளது. இவ்ஆலயம் முன்னரும் பிரசித்தி பெற்ற ஆலயமாய் விளங்கியிருந்தது. இடையில் அழிந்து இன்று, துலங்கும் ஆலயமாய் இருக்கலாம்.

"மந்திரமும் தேவும் மருந்தும் குருவருளும்
தந்திரமும் ஞானம் தருபுறையும் யந்திரமும்
மெய்யென்னில் மெய்யாய் விளங்குமே மேதினியில்
பொய்யென்னிற் பொய்யாகிப்போம்" ஔவையார்.

## மன்னார் மாவட்டம்

### திருக்கேதீச்சரம்

"திருக்கேதீச்சரம்" சம்பந்தப்பிள்ளையாராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. திருக்கேதீச்சரம் என்னும் நாமம் திருநாவுக்காசர் நாவால் உச்சரிக்கப் பட்டது. மந்திர சக்தி வாய்ந்தது. இவற்றால் தனக்குத்தானே இணையாத தனிச்சிறப்பு வாயந்த புனிதத்தலம் திருக்கேதீச்சரம் என்பர் இலக்கியக்கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (திருக்கேதீச்சரமும், நாவலர் அவர்களும்)

திருக்கேதீச்சரப் பழமை சரித்திரத்துக்கோ அகழ்வாராய்ச்சிகளுக்கோ எட்டாதது. புராணேதிகாசங்களால் ஒருவாறு ஊகித்தற்பாலது.



9—A 55085 (02/81)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு கற்பகத்தில் மேருமலையின் மூன்று சிகரங்கள் தென்கடலில் தள்ளப்பட்டன். அவற்றுள் ஒரு சிகரம் இந்திரன் ஆணையால் தேவதிபதியான விசுவகன்மாவினால் இலங்காபுரியாக அமைக்கப்பட்டது.

மற்றொரு சிகரம் திருக்கேதீச்சரம். அச்சிகரத்தைக் கொண்டு விசுவகன்மாவின் மூத்த புதல்வனை மகாதுவட்டா ஒரு சிறு நகரஞ் செய்து அதன் மத்தியில் ஒரு சிவஸ்தலத்தையும் அமைத்தான். நகரம் அவன் பெயரால் மகாதுவட்டபுரம் எனப்பட்டது. அதுவே மாதோட்டம் எனமருவிற்று. மத்தியில் அமைந்த சிவஸ்தலம் சிகரத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என வழங்குகின்றது.

மகாதுவட்டாவுக்கு இருவர் தம்பியர். ஒருவர் மயன். மயன் புதல்வி மண்டோதரி. நித்திய கன்னிகைகள் வரிசையிற் சேர்ந்த உத்தமி மண்டோதரி, இராவணன் மனைவி" பண்டிதமணி.

எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்து பத்தொன்பதாம் நூற்றாண்டு மத்தியில் ஒரேயொரு ஆறுமுகநாவலர் இதயத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டது. திருக்கேதீச்சரத் திருப்பணி செய்ய சைவர்களை ஊக்கப்படுத்தினார் நாவலர்பெருமான்.

நாவலர் பெருமானின் தவசக்தியின் வலிமையால் 1893 ஆம் ஆண்டில் திருக்கேதீச்சரம் இருந்தது எனக் கருதப்படுமிடமாகிய நாற்பது ஏக்கர் கொண்ட காணியை ஏலத்தில் யாழ்ப்பாணச் சைவப் பெருமக்களும், ஈழத்தில் வாணிபத்தில் ஈடுபட்டிருந்த நாட்டுக்கொட்டை நகரத்தாரதும் சார்பில் திரு. பழனியப்பச் செட்டியார் ரூபா 3,100 கொடுத்து விலைக்கு வாங்கினார்.

இதனைத் தொடர்ந்து 1894 ஆம் ஆண்டு தைமாதம் சைவச் சான்றோராகிய பசுபதிச் செட்டியார் யாழ்ப்பாணத்திலிருந்து குருக்கள்மார் வேலையாட்களுடன் சென்று காடுவெட்டிச் சோதனை செய்தபோது பழைய கோவில் இருந்த அடியீட்டு நிலமும் சுற்றுப்பிரதிட்ட இலிங்கமொன்றுங்கண்டுபிடிக்கப்பட்டன. அதே ஆண்டு ஆவணிமாதம் ஒரு சிறு கோவிலை அங்கே நிறுவிவிட்டுச் செட்டியார் மீண்டார்.

இக்கோவிலின் பரிபாலனத்தை மேற்கொண்ட இலங்கையிலிருந்த நாட்டுக் கோட்டை நகரத்தார் சில ஆண்டுகள் கழித்து, 1903 ஆம் ஆண்டு யூன்மாதம் 28 ஆம் நாள் ஒரு கற்கோயிலைக் கட்டி மகாகும்பாபிடேகம் செய்து வைத்தார்கள். அப்போது காசியிலிருந்து கொண்டு வந்த சிவலிங்கம் கௌரி அம்பாள் விக்கிரகங்களே இன்றும் எழுந்தருளியிருக்கின்றன.

முதலாம் உலக மகாயுத்தம் (1914–1918) முடிந்தபின் மன்னாரில் அரசு அலுவலகங்களில் பணிபுரிந்த சைவப்பெரியார்கள் சேர்ந்து கோயிலை மீண்டும் திருத்தி அமைத்தனர்.

இக்கோவிலைப் பண்டைப் பெருமைக்கும், சிறப்புக்கும் ஏற்பப் பெரிய கோயிலாகக் கட்டியெழுப்பி நித்திய நைமித்தியங்களை ஒழுங்காகக நடாத்தி வரவேண்டுமென்ற பேரவாவோடு 1948 ஆம் ஆண்டு திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை நிறுவப்பட்டது. சிவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் புனருத்தாரண சபையின் தலைவராகத் திகழ்ந்த காலத்தில் கோயிலும் அதன் சுற்றுடலும் உருவம் மாறத்தொடங்கியது. அன்னார் செய்த அருமையும், பெருமையும் வாய்ந்த பணிகளுள் பணிகளுள் சில பின்வருவன :—

1. நித்திய பூசை திருமுறை ஓதுதல்
2. காலையில் திருப்பள்ளியெழுச்சி ஓது
3. குருகுலம் நிறுவுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1961 ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்களில் சிவானந்த குருகுலம் தொடங்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு ஆவணி அவிட்டத்தன்று இக்குருகுலம் மீண்டும் தொடங்கப்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

4. குருகுல வெளியீடுகள்

பல சைவசமய நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை வெளிவந்த நூல்கள் :—

(1) முத்திராலட்சணம்

(2) சோபகிருது வருஷ நவராத்திரி, சிவராத்திரி விரத நிர்ணயம்

(3) சிவராத்திரி மாச நிர்ணயம்

(4) அக்கினி காரிய விதி (மூலமும் உரையும்)

(5) சிவபூசை விளக்கம்

5. திருமுறைகளில் நாயன்மார்களினால் கூறப்பட்ட அதே நிலையினை உருவாக்கியது

(அ) "பாலாவியின் கரைமேல்" என்ற பாடலுக்கு இணங்கசேறும் சகதியும் நிறைந்த மண்மேடான பாலாவியை வெட்டி அணைகட்டி நீர் தேங்கியோடும் தீர்த்தமாக ஆக்கியது. இதற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்களின் சேவை நம்மவர் நெஞ்சில் என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டியது. (இந் நூலில் பாலாவிப் படத்தைக் காண்க)

(ஆ) "மஞ்ஞை நடமிடும்மாதோட்டம்" என்றபாடலுக்கு அமைய மயில் வளர்ப்பதை ஊக்குவித்து மஞ்ஞையை நடமிடச் செய்தது.

(இ) மாவின்கனி தூங்கிடும் பொழில் மாதோட்டம் என்றபாடலுக்கு அமைய மாமரங்கள் நாட்டியது.

இன்றைய நிலையிலும் இவ்வாலயத்திருப்பணி சிறப்புற நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. அண்மையில் "கோ" பூசை தொடங்கப்பெற்றுள்ளது சாலச்சிறந்தது.

## வவுனியா மாவட்டம்

### புதுவிளாங்குளம் சிவன் கோயில் புதுவிளாங்குளம், மாங்குளம்

வவுனியா வடக்கு நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதுவிளாங்குளம் என்னும் கிராமத்தில் இச்சிவாலயம் அமையப் பெற்றுள்ளது.

1963 ஆம் ஆண்டில் காலஞ்சென்ற குருநாதர் சபாரட்ணம் என்பவரால் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. மூலஸ்தானத்தில் சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை பண்ணப்பட்டுள்ளது. தினமும் நண்பகல் பூசைகள் நடைபெறுகின்றன. பிரதி வருடமும் ஆவணி பூரணையை அடுத்து திருவிழா நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு மாவட்டம்

### ஒட்டுசுட்டான்

### தான்தோன்றி ஈஸ்வரர்.

"கோயில் எனப்படும் சிதம்பரம் பூமியின் இருதயஸ்தானம். முல்லைத்தீவின் இருதயஸ்தானம் ஒட்டுசுட்டான் சிவன் கோயில்.

இக் கோயிலின் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் சுயம்புலிங்கம். அதனாலேதான் "தான்தோன்றி ஈஸ்வரன்" என்ற திருநாமம் உண்டாகியது.

இலிங்கம் வெளிப்பட்ட வரலாறும், ஆலய அற்புதங்களும் மிகக ஆச்சரியமானவை. கர்ண பரம்பரையில் வழங்கி வருபவை.

திரு. முல்லைமணி கர்ண பரம்பரையில் கேட்டவைகளையும், தாம் கண்டவைகளையும் கோவை செய்து, காப்புச் செய்யுள்கள் உடபட 83 பாடல்களாகிய முத்துக்களால் ஓர் ஆரம் புனைந்திருக்கின்றார். அந்த முத்தாரத்தைத் "தான்தோன்றி ஈஸ்வரர் புராணம்" என்றே வழங்கலாம்." இது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் கூற்று.

முல்லையொடு மருதநிலம் மகிழ்ந்து கொஞ்சும்
  மண்ணினிலே சிறந்திட்ட ஒட்டு சுட்டான்
பல்வளங்கள் பொலிந்து அங்கு வாழும் மக்கள்
  பண்புடனே வாழுதற்குச் சுயம்பு லிங்க !
எல்லையில்லா அருள் சுரக்கும் அன்புத் தெய்வம்
  எங்கிலுமே ஈசுவரனின் வாக னங்கள்
பல்லுலகோர் போற்றுகின்ற பதியா மாகி
  பாரினிலே சிறந்தோங்கு வதனைச் காணீர்

நீருயரத் தாமரைகள் உயரும் வாவி
  நிறையுயரக் கற்புநெறி வழுவா மாதர்
பாருயர அருள்புரியும் சுயம்பு லிங்கம்
  பரமபிதா உறைகோவில் நிகர்ந்த தோற்றம்
சாரியிலே இறைவனைக்கண் டன்பு செய்து
  தம்வினைகள் போக்கவரும் மாந்தர் கூட்டம்
காரினைக் கண் டகமகிழும் மயில்கள்
  கரங்கூப்பி இறையருளைப் பெறுநற் காட்சி.

இறைவன் : தான்தோன்றி ஈஸ்வரன்
தேவி பூலோகநாயகி.

ஆவுடையார் : தான்தோன்றி ஈசுவரன் கோவில் லிங்கத்திற்கும் திருவானைக்காவிலுள்ள லிங்கத்திற்கும் அவற்றின் அடிப்பகுதியாகிய ஆவுடையார் இல்லை. ஒட்டுசுட்டான் கோவில் லிங்கத்திற்கெனத்தயாரிக்கப்பட்ட ஆவுடையார் பகுதி ஈஸ்வரன் அதை விரும்பாத தால் கோவில் உள்வீதியில் ஓர் மூலையில் உண்டு.

யாழ்ப்பாணம்—மாங்குளம்—ஒட்டுசுட்டான்.
வவுனியா—புளியங்குளம்—ஒட்டுசுட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகாலிங்கேஸ்வரர் கோயில் கொக்குத் தொடுவாய்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கொக்குத் தொடுவாய் என்னும் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

முதியோரால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயம் ஆவுடையாருடன் லிங்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தினமும் இரண்டு காலப் பூசை இவ்வாலயத்தில் நடைபெறும். சிவனுக்குரிய விஷேட காலங்களில் உற்சவம் நடைபெறும். மகாசிவராத்திரி, ஆனி உத்தரம், பங்குனி உத்தரம், மற்றும் ஒவ்வொரு மாதங்களில் வரும் விஷேச காலங்களில், விஷேட காலங்களில் சிறப்பாக பூசைகள் நடைபெறும். இப் பகுதி வாழ் மக்களின் சிவவழிபாட்டுத் தலமாக இது விளங்குகின்றது.

## மட்டக்களப்பு மாவட்டம்

**வம்மிக்கேணி சிவன் கோயில் ஆரையம்பதி 2, காத்தான்குடி**

மண்முனை வடக்கு மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரையம்பதி என்னும் கிராமத்தில் 2ம் குறிச்சியில் உள்ளூராட்சி மன்றத்திற்கு அண்மையில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

1940ம் ஆண்டிற்கு முன் திரு. சி. கந்தப்பன் சாமியார் அவர்களால் பராமரிக்கப்பட்டு வந்தது. பின் அவரது சந்ததியினரால் நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு ஆலயம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பஞ்சாட்சரத் தட்டின் மேல் நடராஜர் சிலையை மூலமூர்த்தியாகக் கொண்டுள்ளது. பார்பதியம்மன், விநாயகர், முருகன் ஆகியவற்றின் விக்கிரகங்கள் பரிவார மூர்த்திகளாக விளங்குகின்றன. ஆரையம்பதி மக்களின் சிவ வழிபாட்டுத்தலமாக இவ்வாலயம் இருந்து வருகிறது.

**தக்கயாகேஸ்வரர் கோயில் வெயிலி விதி, கோட்டமுனை, மட்டக்களப்பு**

மண்முனை வடக்கு மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கோட்டமுனை என்னும் கிராமத்தில் வெயிலி வீதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை தக்கயாகேஸ்வரர் என அழைப்பர். இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள கடவுளாகிய சிவபெருமானை கோட்டமுனை வாழ்மக்கள் மட்டுமல்லாது வழிப்போக்கர்களும் வழிபட்டுப் பலனடைகிறார்கள். பலனடைந்தவர்கள் பலர்.

இவ்வாலயம் பழமை வாய்ந்தது. முதலாம் கஜபாகு சோழ நாட்டுப் படையெடுப்பு இந்தத் கோயிற் காவியத்திற் கூறப்படுவதாக அறியமுடிகிறது. பரிவார மூர்த்திகளாக முருகன் பிள்ளையார், வீரபத்திரர், மகாவிஷ்ணு, காளி, வைரவர், முதலிய தெய்வங்கள் காணப்படுகின்றன.

வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசை நடைபெறுகின்றன. கொடியேற்றம் ஆடிப் பௌர்ணமையில் நடைபெற்று 7ம் நாள் தீர்த்தோர்சவம் நடைபெறுகிறது. இப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஒரு சிவாலயமாகத் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவன் கோயில் செட்டிபாளையம், குருக்கள்மடம்**

மன்முனை தென் எருவில் பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் செட்டிபாளையம் என்னும் கிராமத்திலுள்ள பாடசாலைக்கண்மையில் இச்சிவாலயம் அமைந்துள்ளது. தினசரி காலை, மாலை ஆகிய இரு நேரங்களிலும் பூசை நடைபெறும். இவ்வாலயத்தில் விஷேட காலங்களில் வி.ஷேச பூசைகளும், திருவிழாக்களும் நடைபெறும். அத்துடன் இவ்வாலயம் அடை.மக்கப்பட்ட தினத்தை முன்னிட்டு விசேட கலைநிகழ்ச்சியுடன் விழா கொண்டாடப்படும், என அறியக் கிடக்கிறது. இப்பகுதிவாழ் மக்களின் சிறந்த ஒரு சிவாலயமாக இது விளங்குகின்றது.

## கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர்

சைவமும், தமிழும் பல்லாண்டு காலமாக நிலைத்து வரும் கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற சைவத்திருத் தலங்கள் பல உள. இவற்றுள் மிகவும் பழமை வாய்ந்தததும்,, "தேரோட்டம்" போன்ற திருவிழாக்கள் நடைபெறுவதும் ஆன திருத்தலம் கொக்கட்டிச்சோலை சிவத்தலமே ஆகும்.

இக் கோயிலின் தொடக்கம் பற்றி செவிவழிக் கதையொன்று உண்டு, இக்கதை வேடர்களே முதன் முதலில் இங்கு வழிபாட்டை ஆரம்பித்தனர், என்று கூறுகிறது. தேன் தேடிச் சென்ற வேடர் சிலர் அங்கிருந்த கொக்கட்டி மரமொன்றில் தேனிருக்கக்கண்டு மேலும் அவதானித்தபோது அம் மரத்தின் அடியில் ஒரு இலிங்கம் இருக்கக் கண்டனர். அன்று முதல் கொத்துப்பந்தலிட்டுத் தமது வழிபாட்டு முறைப்படி பூசை செய்து வரலாயினர், என்று கூறப்படுவது ஒன்று, மேலும், கதிர்காம யாத்திரைக்கு வந்த கொக்கட்டியார் என்னும் இந்திய நாட்டைச் சேர்ந்த தபோதனர் இங்கு சமாதி இருத்தப் பெற்றதாயும் சிலர் கூறுவர். இந்த இலிங்கத்தை முதன் முதலில் கண்ட வேடர் குலத்தலைவன் திலகன் என்றும் மட்டக் களப்பு மான்மியம் கூறுகிறது. இக்கதைகளைக் கொண்டு இக்கோயிலின் வழிபாடு எப்பொழுது ஆரம்பித்தது என்று கூறமுடியாது. எனினும் இப்பகுதிகளில் வேடர் வாழ்ந்த காலத்தில் இலிங்க வழிபாடு ஆரம்பமாயிற்று, இங்கு நிலையான கோயில் கட்டப்படுவதற்கு நீண்ட ஒரு காலப்பகுதிக்கு முன்பே வழிபாடு ஆரம்பித்தது எனக் கொள்வதும் இலிங்கம் கண்டுபிடிக்கப்பட்ட தென்பதும் பொருத்தமாகும்.

திருக்கோணேஸ்வரப் பெருமானுக்குத் திருப்பணிகள் செய்துகொண்டிருந்த குளக்கோட்டன் தானே தோன்றிய "தான்தோன்றீஸ்வரரின்" பெருமையைக் கேள்வியுற்றுன். கொக்கட்டிச் சோலைக்கு வந்து தான்தோன்றியப்பருக்குக் கோயில்கட்டி, கோயிற்றிருப்பணிகள் செய்வதற்கு இந்தியாவிலிருந்து எழு குடி மரபினரை இங்கே குடியேற்றினன். கோயிற் பூசைக்கான பணிகள் யாவற்றையும் "கோயிலர்" என்றேரு வகுப்பினர் இன்றுஞ் செய்து வருவரை இங்குக் காணலாம்.

குளக்கோட்டு மன்னனல் இக் கோயில் கட்டப்பட்ர்ள்ளது என்பது இக் கோயிலுடன் தொடர்புடைய அனைவரதும் அசையாத நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்து கோணேசர் கல்வெட்டு இப்பகுதிகளிற் பெற்ற தப்பவாக்கால் ஏற்பட்டது எனலாம். குளக்கோட்டனது திருப்பணியைப் பெற்று ஒழுங்குப்படுத்தப்பெட்ட கோயில்கள் பற்றி இங்கு நிலவும் ஒரு கல்வெட்டுப் பாடல் கூறுவது :—

" சீர் மேவு இலங்கைப் பதி வாழ்வுதரு
செல்வமும் சிவநேச இருசமயமும்
செப்புதற்கரிதான மாணிக்க கெங்கையும்
செக மேவு கதிர மலையும்
ஏர் பெறும் தென்கயிலை வாழ் கோணலிங்கம்
மேன்மை தான் தோன்றுலிங்கம்
வெற்றி புனை மயூர சித்திர சங்காரவேல்
வெள்ளை நாவற் பதிய தாம்
பேர் பெறும் தென் திருக்கோயில்
சிவாலயம் சிவபூசை தேவாரமும்
செய்முறைகள் பன்றென்றும் நீடூழி காலமும்
தேசம் தளம்பாமலும்
ஏர் பெருகு பரிதி குலராசன்
குளக்கோட்டார் எவ்வுலகமுய்வதாக
ஏழு கோபுரம் கோயில் தொழுவார் திணம்
தேட எங்கெங்கு மியற்றினரே '

இப் பாடலிற் குளக்கோட்டனது சேவையைப் பெற்ற ஏழு கோயில்களின் பெயர்கள் கூறப் ட்டுள்ளன. அவை கதிர்காமம் (மாணிக்க கங்கை), கதிரமலை, கோணேஸ்வரம், கொக் கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயில், போரைத்தீவுச் சித்திரவேலாயுதர் கோயில், வெருகல், திருக்கோயில், என்பனவாகும். திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக்கோயில்கள், என்னும் தொகுப்புக்குள் இக் கோவில்கள் கூறப்பட்டு வருகின்றன. மண்டூர்த் திருத்தலத்துக் குக் குளக்கோட்டன் பணி கிடைத்திலது இங்கு நிலவும் மரபு வழியான தகவல்களில் இருந்து குளக்கோட்டன் இக் கோயிலைப் புதிதாக அமைத்துள்ளான் என்றோ புதுப்பித்தான் என்றோ கொள்ள இடமுண்டாகிறது. நிருவாகத்தைப் புதிய முறையில்அமைத்தும், தொண்டூழியங்களை யும் அவற்றிற்கு உரியோரையும் வகுத்துப் பூசை விழாக்களைத் திட்டம் செய்தும், மானியங்களை வழங்கியும் இம் மன்னன் இக்கோயில்களுக்குத் திருப்பணி புரிந்தானென்று மேலும் இவற்றால் அறியமுடிகின்றது.

**கோயில் அமைப்பு :**

இக்கோயிலுக்கு இரு சுற்று மதில்கள் உள்ளன. வெளிப்புற மதிலோடு தொடர்புள்ளன வாக நான்கு சிறு மடங்கள் நான் புறங்களிலும் உள்ளன. உள்புறத்தில் சிவன் கோயிலின் பக்கங்களில் பார்வதியம்மன், விநயகர், முருகன், வள்ளி, தெய்வானை, விஷ்ணு, நவக்கிரகங்கள், நாகதம்பிரான், வைரவர், என்னும் தெய்வங்களுக்குரிய கோயில்கள் காணப்படுகின்றன. இச் சிறிய கோயில்கள் காலத்துக்காலம் தனிப்பட்டவர்களால் கட்டி அர்ப்பணிக்கபபட்டவையாகும். சிவன் கோயில் சிகரத்தையுடையது.

கர்ப்பக்கிரகத்தையும், நான்கு மண்டபங்களையும், கோபுரம் இல்லாத முகப்பு என்னும் பகுதியினையும் கொண்டது. இக்கோயிலின் தம்ப மண்டபம் மிக அண்மையிலே கட்டப்ப பட்டுள்ளது. சுமார் அறுபதடி உயரமுடைய கொடித் தம்பத்தை இங்கு காணலாம் இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடித்தம்பத்திலும், கர்ப்பக்கிரகச்சிரகம் பதிவாகவே அமைந்துள்ளது. இக்கோயிலின் தம்ப மண்டபம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் காலத்தால் முற்பட்டவை. இங்குள்ள மூன்றாவது மண்டபத்தில் பார்வதி அம்மன் கோயிலுக்கு முன் புறமாக இடதுபக்கத்தில் கற்சிலை ஒன்றுள்ளது.

### கோயிலின் பரிபாலனம் :

இக் கோயிலின் பரிபாலனம் பழமை வாய்ந்ததாக மூன்று வண்ணக்குமாரைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. கோயிற் பரிபாலகரை "வண்ணக்கர்" அல்லது "வண்ணக்கு" என்று அழைப்பது மட்டக்களப்பின் பரவலான வழக்கமாக இருந்து வந்துள்ளது. "வண்ணக்கர்" என்பது ஒரு தமிழ் சொல். இது கணக்கறிஞர் தலைவன் எனப் பொருள்படும்.

### நித்தியபூசை, திருவிழாக்கள் முதலியன :

தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தினந்தோறும் மூன்று நேரப் பூசை நடை பெற்று வருகிறது. தைப்பொங்கல், தைப்பூசம், சித்திரைப்பிறப்பு, சித்திரைச்சித்திரை, திருக்கார்த்திகை, மார்கழித் திருவாதிரை என்னும் நாட்களில் விசேட பூசைகளும் திருவிழாக்களும் இங்கு இடம் பெற்று வருகின்றன. சிவராத்திரி, கந்தசட்டி, விநாயக சட்டி என்னும் விரதங்கள் பெருந் தொகையினரால் இங்கு அனுட்டிக்கப்படும் விரதங்களாகும்.

முற்காலத்தில் வருடாந்த உற்சவம் பங்குனி உத்தரத்தில் நடைபெற்று வந்தது என்று கூறுவர். இது காலப்போக்கில் கட்டாயம் மாற்றியமைக்கப்பட வேண்டிய ஒன்றாயிற்று. பங்குனி மாதம் இச் சுற்றுடலில் உள்ள விவசாயிகளின் பெரும்போக அறுவடைக் காலம் ஆகும். மேலும் பண்டைக்காலத்தில் தகுந்த போக்குவரத்து வசதிகள் இன்மையால் வெளியிடத்தவர்கள் இவ் வருடாந்த உற்சவத்துக்கு வருதல் குறைவாக இருந்தது. இதனால் சுற்றுடலிலுள்ள மக்கள் ஓய்வாக உள்ள காலப்பகுதிக்கு வருடாந்த உற்சவம் மாற்றப்படுவது அவசியமாயிற்று. தற்போதைய முறைப்படி ஆவணி மாதத்தில் வரும் முதற் பிறையில் கொடியேற்றப்பட்டு அதை அடுத்து வரும் பூரணைக்கடுத்த திங்கள் கிழமை தீர்த்தமும், அதற்கு முதல் நாள் ஞாயிறு பிற்பகல் தேர்திருவிழாவும் இடம் பெறுவதாயிற்று. கொடியேற்றத்திலிருந்து தேர் திருவிழா வரையும் பதினெட்டுக்கு மேற்பட்ட திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவற்றின் இறுதி ஏழு திருவிழாக்களும் முக்குகர். ஏழு குடியாளராலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு முதல் நாள் திருவிழா இங்கு தொண்டூழியம் செய்வோரால் நடத்தப்பட்டு வருகின்றது. முதற் பகுதித் திருவிழாக்கள் கோயிலின் பொதுக்கணக்கில் நடைபெறுதல் ஒழுங்கு.

இக் கோயிலில் நடைபெறும் தேர் திருவிழாவை மட்டக்களப்பு மக்கள் "தேரோட்டம்" என்று போற்றுவர். மட்டக்களப்பில் தேரோடுகின்ற கோயில் இது மட்டுமே. தேரோட்டத்தில் இரண்டு தேர்கள் திருவீதி வலம்வரும் தெய்வீகக் காட்சியைக் காணலாம். சித்திரைத் தேர் எனப்படும் பெரிய தேரில் சிவன், பார்பதிபாகராய் வருவர். பிள்ளையார் தேர் எனப்படும் சிறிய தேரில் விநயகர் முருகப்பெருமானோடும் எழுந்தருள்வர். மறுநாள் தீர்த்த நாளாகும்.

தீர்த்தத் தினத்தன்று அதிகாலையில் திருவேட்டை நடைபெறும். இது ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்குத்தடையாக இருக்கும் மலங்களை இறைவன் அழிக்கும் பாவனையியில் அமைந்த ஒரு புது நிகழ்ச்சியாகும். திருவேட்டையை அடுத்து கோயில் பரிபாலகர்களையும் தொண்டூழியர்களையும் விழாவிற் கலந்து கொண்டோர்களையும் கௌரவக்கும் சீர்வரிசையாக "குடுக்கை கூறுதல்" என்னும் நிகழ்ச்சி நடைபெறும். இந் நிகழ்ச்சி பற்றிய விவரங்களையும் வரலாற்றுச் செய்திகளையும் மட்டக்களப்பு மான்மியத்திலுள்ள குடுக்கை கூறும் விவரம் பற்றிய பகுதியில் வரும் "சூத்திர சாதி முதற், குலம் வெள்ளாளனுக்கும், உங்கள் பதினெட்டுச் சிறைகளுக்கும், பட்டுப்போடப்படாதென்றும் கட்டளையிட்டு வரிசை பூட்டி பண்ணும் படி பண்ணினன்", என்பது முதலாவது உள்ள பகுதியினுட் காணலாம். ஆனால் முட்டியின் மேலே பட்டுப் போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்காலமும் வரிசை கூறவேண்டுமென்றும், இக் குடுக்கை கூறும் வைபவத்தில் இந்நாட் பல்வேறு பிரதேச மக்களும், பிராமணர் முதல் பறையர் ஈறாக எல்லாச் சாதியினரும் குடுக்ஆக பெற்றுக் கௌரவிக்கப்படுவர்.

(மட்டக்களப்புச் சைவக்கோவில்கள்—வித்துவான் பண்டிதர் வி. சி. கந்தையா வி. ஓ. எல் இன் நூலிலிருந்தும் பிற சான்றுகளிலிருந்தும் தொகுத்தது.

உகந்தையிலிருந்து வெருகல் வரையுள்ள முப்பது ஆலயங்களின் வரலாற்றினைக் கொண்ட இந்நூல் மிகவிரைவில் வெளிவரவுள்ளது இந்துசமயப் பணிப்பாளர்).

## திருகோணமலை மாவட்டம்

## திருக்கோணேசர் ஆலயம்

*நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்*
*நிமலர்நீ றணிதிரு மேனி*
*வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த*
*வடிவினர் கொடியணி விடையர்*
*கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்*
*அளப்பரும் கனமணி வரன்றிக்*
*குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்*
*கோணமா மலையமர்ந் தாரே.*

திருஞானசம்பந்த சுவாமிகள்

### பெருங்கற் பண்பாட்டுக் கோயில்

புதிய ஆராய்ச்சிப் பின்னணியில் கோணேசர் கோயிலின் தொன்மையும், வரலாறும், நிறுவ வேண்டும் எனக் கூறும் பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்கள் :

> இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவில் கேரளம், தமிழ் நாடு போன்ற இடங்களில் பரவியிருந்த பண்பாடு தொல்பொருளியல் ஆராய்ச்சி யாளராலே பெருங்கற் பண்பாடு எனப்படுகின்றது. இந்தப் பண்பாட்டு நிலையிலிருந்து தான் சில நூற்றாண்டுகளுள் இராச்சியங்களும் பிற நிறுவனங்களும் வளர்ந்து வரலாற்றுக்காலம் தொடங்கியது. தென்னிந்தியாவில் இடம்பெறும் பழைய வழி பாட்டுத் தலங்கள் இத்தகைய ஒரு பண்பாட்டுப் பின்னணியிலிருந்தே தோன்றின. சிறப்பாக, வர்த்தகம் முக்கியத்துவம் பெற்றிருந்த அக்காலத்தில், கரையோரங்களில். அமைந்திருந்த ஆலயங்கள் பிரபல வழிபாட்டுத் தலங்களாக வளர்ந்தன.
>
> இலங்கையிலும் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவில் காணப்பட்ட பண்பாட்டு நிலையே இருந்தது என்பது இப்பொழுது தெளிவாகி வரு கின்றது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டையில் நடைபெற்ற தொல் பொருளாராய்ச்சியும், அதற்கு முன் புத்தளம் மாவட்டம், அனுராதபுர மாவட்டம், திருகோணமலை மாவட்டம் போன்ற இடங்களில் கிடைத்த தொல் பொருளியற் சான்றுகளும் இந்நாட்டின் பல பாகங்களிலும் பெருங்கற் பண்பாடு 2500 ஆண்டு களுக்கு முன் பரவியிருந்ததைக் காட்டுகின்றன. தென்னிந்தியாவின் பழைய வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுத் தலங்கள் எவ்வாறு இப்பண்பாட்டின் பின்னணியிலே தோன்றி வளர்ந்தன தனவோ, அவ்வாறே இங்கும் பழைய வழிபாட்டுத் தலங்கள் அதே பின்னணியில் தோன்றி வளர்ந்தன.

அவ்வாறு தோன்றிய பழைய வழிபாட்டுத் தலங்களுள் முக்கியமானவை யாகக் கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்ற ஈஸ்வரன் ஆலயங்களைக் கொள்ள வேண்டும்.

**தேவாரக் கோயில்**

" கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்து "

" தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம்மடிப்போற்றி செய்யவாயினும் மனத்தும் மருவினின்ற கலா மாண்பினராம் " மாதுமையம்பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமானின் ஆலயச் சிறப்பினை ஸ்ரீ காஞ்சிகாமகோடி பெரியவர்கள் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் பின்வருமாறு கூறியுள்ளார்கள் :

> சேஷத்திரங்கள் இரண்டுவகை. தேவராவப் பாடல் பெற்றது, அல்லாதது என்பன. தேவாரத்ற்கு மூவர் தேவராமெனப் பிரசித்திபுண்டு. ஞானசம்பந்தர் அப்பர், சுந்தரர் இம்மூவர் தேவார ஆசிரியர்களாவர். இயற்கையாகவே கோவிலுள்ள பூமி பவித்ரபூமி, புண்ணிய பூமி, சமயக் குரவர்களால் தேவாரம் பாடப்பெற்ற பூமி மிகவும் பவித்திரமான பூமி. மனித வாழ்விலே நாம் எவ்வளவோ பாவங்களைச் செய்திருக்கின்றோம். நம்முடைய பாவங்கள் அகல, நம்முடைய எண்ணங்கள் மேலிட, தேவார சேஷத்திரங்களை வலம் வருவதும், தரிசிப்பதும், தேவார பாடல்களைப் பாடுவதும் மிகவும் உன்னதமான பணி. ஆயிரம் புதுக் கோயில்களைக் கட்டுவதில் எவ்வளவு புண்ணியமோ அதில் ஒரு புதுக் கோயிலைக் கட்டுவதில், அதிலும் ஒரு தேவாரக் கோயில் கட்டுவதில் மிகுந்த புண்ணியமுண்டு. ஈழநாட்டிலே தேவாரப் பாடல்பெற்ற இரண்டு சிவஸ் தலங்கள் உண்டு. தசஷணகைலாசம் என்று போற்றப் படுவது, திருக்கோணேஸ்வரம் ஆகும்.

போர்த்துக்கீசர் 1624 ம் ஆண்டு ஆலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கினர். அடுத்து பிரிட்டிஷார் 1795 ம் ஆண்டு கைப்பற்றினர். அதன் பின்பு சைவ மக்கள் இடிந்த நிலையிலிருந்த ஆலயத்துக்குச் சென்று வழிபட அனுமதிக்கப்பட்டனர். போர்த்துக்கீசர் ஆட்சியின் போது நிலத்தின் அடியில் புதையுண்டிருந்த சிவன், பார்வதி, சந்திரசேகரமூர்த்தி திருவுருவங்கள் ஏகாம்பரம் வீதியின் கடற்கரையில் ஒரு கிணறு தோண்டும் பொழுது கண்டெடுக்கப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்களை முதலியார் ச. கார்த்திகேசு அவர்களின் உபயமாக கட்டப்பட்ட கோயிலுக்குள் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டன.

1624 ம் ஆண்டு இக்கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கும் போது கோயில் விக்கிரகங்களை எடுத்துக் கொண்டு நாலா பக்கங்களிலும் ஓடிய பக்தர்கள் வசதியான இடங்களில் புதைத்து வைத்தனர். ஆனல் இருபாகை முதன்மைக் குருக்களில் சிலரும், தானத்தாரும், வரிப் பத்தாரும், சில விக்கிரகங்களை எடுத்துக் கொண்டு தம்பலகமத்திற்கு மேற்கேயுள்ள " சுவாமி மலை " என்ற இடத்தில் ஒளித்து வைத்தனர். தம்பலகம வாசிகள் சிலர் " கோணமலைக் கிழங்கு " எடுக்க சுவாமிமலை சென்ற சமயம் சுவாமி மலையில் விக்கிரகத்தோடு செப்பேடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டு தம்பலகமத்தில் ஓர் கோயில் கட்டி பிரதிஷ்டை செய்தனர். இப்போது அக்கோயில் " ஆதி கோணைநாயகர் கோயில் " என்று வழங்கப்பட்டு வருகிறது. இவ் ஆதி கோணைநாயகர் கோயில் குடமுழுக்கு ஆவபவம் 28.01.1980 ல் நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963 ம் ஆண்டு மீண்டும் புதிதாக கோயிலைக் கட்டி, சிவபதமடைந்த திரு. ந. இ. இராசவ ரோதயர் அவர்கள் தலைமையில் கும்பாபிஷேக வைபவம் நடைபெற்றது. இன்றைய ஆலய பரிபாலன சபைத் தலைவர் முருகுப்பிள்ளை கோணமலை செல்வராஜா அவர்கள் தலைமையில் திருக்கோலக்கா இராமநாத சிவாசாரியார், பிரதிஷ்டான குரு சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன குருமா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் ரௌத்திரி வருடம் தைத்திங்கள் 12 ஆம் நாள் (25.01.1981) இல்கும்பாபிஷேகம் இனிது நடந்தேறியது.

**மலர்**

சைவப் புலவர் இ. வடிவேலு, புலவர் வை. சோமாஸ்கந்தர் ஆகியோர் இணையாசிரியராக இருந்து வெளியிட்ட கும்பாபிஷேக மலர் பக்திச்சுவையும் சரித்திர ஆழமும், வர்ணப் படங்களும், கொண்டதாய் திகழ்வது குறிப்பிடத்தக்கது. சைவப் புலவர் இ. வடிவேல் அவர்கள் இயற்றிய திருக்கோணசர் திருவூஞ்சற் பதிகம் இவ்வாலயத்திற்கு மெருகூட்டுகின்றது.

சைவப்புலவர், பண்டிதர் இ. வடிவேலு அவர்கள் ஆக்கிய ருக்கோணசர் திருவூஞ்சற்ப பதிகத்தில் ஒரு பாடல் பின்வருமாறு :

சீர்மேவு மாமறைகள் கால்களாகச்
செய்யதிரு ஆகமங்கள் விட்டமாக
கார்மேவு பைந்தமிழ்சேர் பண்களோடு
பகர்ரிய திருமுறைகள் வடமதாக
ஏர்மேவும் ஓங்காரப் பீடமீதில்
ஏழிசையின் மலர்தூவி இனிது போற்றக்
கார்மேவு தென்கைலைக் கோணை தன்னில்
மாதுமைசேர் கோணேசா ஆடீருஞ்சல்.

## தம்பலகாமம் கோணேசர் ஆலயம்

திரு தம்பலகாமம் ஸ்ரீ ஹம்சகமனும்பிகாதேவி சமேத அருள்மிகு ஸ்ரீ ஆதிகோணநாயக சுவாமி கோவில் சாஸ்த்திர விதிப்படி புத்தாக நிர்மாணிக்கப்பெற்று 1980 ஆம் ஆண்டு தைமாதம் 14 ஆம் நாள் (28.1.1980) மாகசும்பாபிஷேகம் நடைபெற்றது.

தமிழ்நாடு, மாமல்லபுரம், சிற்பக்கலைக் கல்லூரிவை. கணபதிஸ்யபதி அவர்களின் தந்தையார் திரு. ம. வைத்தியநாதஸ்தபதி அவர்கள் நிர்மாணித்த ஐந்து நிலை இராஜ கோபுரத்தைப்பார்த்திடும் பாக்கியம் பெற்றோர் சிவனருள் பெற்றோரே.

இவ்வாலயம் பற்றித் திருக்கோணமலை சிவயோக சமாஜம் சுவாமி கெங்காதரானந்தா, பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

" தென்கயிலையில் அமர்ந்தொளிரும் கபிலை நாதருடைய இரண்டாவது ஷேத்திரமாகிய தம்பலகாமம் கோணேஸ்வர ஆலயத்தின் புனருத்தாரண " மகாகும்பாபிஷேகம் " ஆலயத்திலிருக்கும் தெய்வ சைதன்யம் குன்றுமல்பத்தர்களுடைய பக்தி விசுவாசத்தைப் பெருக்கி இறை சாமீப்பியத்தை கொடுப்பதற்குரிய ஒரு புண்ணிய கைங்கரியமாகும். ஆலய மகிமை யெல்லாம் பொருந்தியிருக்கும் இந்தஸ்தலம் இலங்கை வரலாற்றில் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது இந்த ஆலய வரலாறுகிய கோணேஸ்வரக்கல்வெட்டை சூக்குமமாகப் படிக்கின்றவர்களுக் இந்த ஆலயத்தின் பூர்வீக கர்த்தாக்களுடைய தீர்க்க தரிசனமான செயலும் ஆலயங்களில் அவர்களுக்கிருந்த பக்தி விசுவாசமும் தம் அனைவரையும் கூடுதலாகச் சிந்திப்பதற்கும் " உணர் வதற்கும் " செயலாற்றுவதற்கும் இன்னும் கூடுதல் இடமளிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது பிரார்த்தனை உரையில் கூறியதாவது :

" திருக்கோணமலை தெய்வத்தன்மை வாய்ந்தது ;
திருக்கோணமலையின் நெற்களஞ்சியம் தம்பலகாமம்

மருத நிலத்துக்கோர் எடுத்துக்காட்டுத் தம்பலகாமம்
தம்பலகாமத்தின் சிரோரத்தினமாய்த்
திருவருள் பிரகாசித்துக் கொண்டிருப்பது,
ஸ்ரீ ஹம்ச கமனும்பிகாதேவி சமேத
ஸ்ரீ ஹம்ச கமனும்பிகாதேவி சமேத அருள்மிகு
ஸ்ரீ ஆதிகோணநாயக சுவாமி தேவஸ்தானம்."

## வெள்ளை வில்வபத்திர கோணேஸ்வரர் ஆலயம் மின்சார நிலையவீதி, திருகோணமலை

திருகோணமலை பட்டணச் சூழலில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மின்சார நிலைய வீதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

இவ்வாலயம் பழைமையானது. மூலஸ்தானத்திலிருக்கும் லிங்கம் தான்தோன்றீஸ்வரர் என அறியப்படுகிறது.

தினமும் காலையிலும், மாலையிலும் இருநேரப்பூசை நடைபெறுகிறது. திருகோணமலை வாழ் இந்துக்களுக்கு இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கின்ற இறைவன்சகல சௌபாக்கியங் களையும் கொடுத்து அருள்பாலித்து வருகிறார்.

## செம்பிஸ்வரர் ஆலயம் செம்பிமலை, குச்சவெளி

கட்டுக்குளப் பற்றுக்கிழக்கு குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குச்சவெளி யிலிருந்து சமார் நான்கு மைல் தொலைவில் செம்பிமலை என்னும் இடத்தில் இவ்வாலயம் அமையப் பெற்றுள்ளது.

பழைமை வாய்ந்த இவ்வாலயத்தில் ஒரு சிவலிங்கம் உள்ளது. வாரம் இருமுறை இவ்வாலயத்தில் பூசை நடைபெறும். சிவராத்திரி விழா, சிறப்பாகக் கொண்டாடப்படும். செம்பிமலை, குச்சவெளி, வாழ்மக்களுக்கு இவ்வாலயத்திலுள்ள இறைவனை வேண்டி அருள் பெற்றுப் பலனடைகின்றார்கள்.

## சிவன் ஆலயம் சங்கை, கிண்ணியா

கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கங்கை என்னும் இடத்தில் கங்கைத் துறைக்கு அணையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

வாரத்தில் வெள்ளிக்கிழமைகளில் பூசைகள் நடைபெறும் இவ்வாலயத்தில் வருடந் தோறும் ஆடி அமாவாசை தினம் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. கங்கை, கிண்ணியா, வாழ் மக்கள் தங்கள் மனக் குறைகளைக் கூறி, நோய, பிணி தீர்த்து இவ்விறைகளின் அருள் பெறுகிறார்கள். இப்பகுதியில் இவ்வாலயம் ஒரு பிரசித்தி பெற்ற ஆலயமாக திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள இவ்வாலயம் அப்பகுதியில் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. இவ்வாலயம் மிகப்பழமை வாய்ந்த ஓர் ஆலயமாகும்.

மகாவலி கங்கைக் கரையில் அமைந்த கரசைப்பகுதியில் அகத்தியரால் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் சிவலிங்கப் பெருமானை மூலமூர்த்தியாகக் கொண்டு இவ்வாலயம் விளங்குவதாகப் புராணங்களிலிருந்து அறியக்கிடக்கிறது.

இவ்வாலயத்தில் தினமும் ஒரு நேரப்பூசை நடைபெறுகின்றது. வருடாவருடம் ஆடி அமாவாசை தினத்தின்று சிவன் தீர்த்தமாட அருகிலுள்ள மகாவலி கங்கைக்கு எழுந்தருளுவார். தீர்த்த வைபவத்தின் போது திருக்கரசைப் புராணம் படித்துப் பொருள் சொல்லப்பட்டு வருவது ஓர் அம்சமாகும். அப்பகுதி வாழ் மக்கள் எல்லோரும் அங்கே கூடுவர். அத்துடன் பல இடங்களிலிருந்தும் பக்தர்கள் இவ்வாலயத்திற்குச் சென்று தம்குறைகளைக் கூறி குறையகன்று திருப்தியைபெறும் ஆலயமாக மிளிர்கின்றது.

### கன்னியாய் நடேசர் ஆலயம்

கன்னியாய் வென்னீர் ஊற்றிலிருந்து திருக்கோணேசர் ஆலயத்திற்குச் செல்லும் வழியில் நடேசர் ஆலயம் என்னும் சிறப்பு மிக்க சிவாலயம் தோன்றி உள்ளது. சைவப் பெருமக்களின் தவப்பயனே, கருவறையில் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நடேசரையே கொண்டு சிவயோக சமாச பரிபாலனத்தில் சிறந்து விளங்கும் இவ்வாலயம்; தருமபுர ஆதீனத்தின் பரிபாலனத்தில் சிறப்புற விளங்கும் 27 ஆலயங்களை நினைவூட்டுவதாய் அமைந்துள்ளன. இங்கு பூசை செய்யும் சிவாச்சாரியார் ஓர் உதாரண புருஷர்.

கன்னியாய் வென்னீரூற்றில் தென் புலத்தாரைப் போற்றுதலாகிய பிதிர் கடன் செய்வதற்குச் செல்லும் சைவ பெருக்களுக்கும், பண்டைப்பெருமை மிக்க கோணேசர் ஆலய வழிபாட்டுக்குச் செல்லும் சிவனடியார்களுக்கும், தங்கும் வசதியும், சாந்தமான சூழலும் தரும் நிலையமாக இக்கன்னியாய் நடேசராலயம் திகழ்கின்றது.

கோணேசப் பெருமானின் முதல் குடமுழுக்கை முன்னின்று நடாத்திய சிவமணி இராஜவரேதயம் என்னும் வள்ளல் பெருமான் உவந்தளிக்க பூமியில் இவ்வாலயம் அமைக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கன்னியாய் வென்னீர் ஊற்றில் கங்கா ஸ்ஞானம் செய்து, கோணேசப் பெருமானைச் தரிசித்து, சிவயோக சமாசத்துச் சுவாமி கெங்காதரானந்தா அவர்களின் அருள் பெற்ற அடியார்கள் பலர் இலங்கையிலும், இந்தியாவிலும், மேல் நாடுகளிலும் இருக்கின்றனர்.

### திருமங்கலாய் சிவாலயம்

இவ்வாலயம் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கிளிவெட்டியிலிருந்து 5 மைல் மேகே மகாவலிகங்கை கரையோரத்தில் அமைந்த இவ்வாலயம் 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சரித்திர பழமை வாய்ந்த ஆலயமாகும்.

அகத்தியர்ச்ஸ்பனம் என்று அழைக்கப்படும் சிவாலயத்திலிருந்து 2 மைல் தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இங்கு பழைய லிங்கத்தையும் அழி பொருட்களையும், இன்றும் காணலாம்.

இவ்வாலயத்திற்கு " திருமங்கலாய் புராணம் " உண்டு.

குறிப்பு.— இவ்வாலயம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் மட்டக்களப்பு சைவப்புலவர் சங்கத் தலைவராகிய கல்லடி உப்போடையைச் சேர்ந்த உயர்திரு. க. கிருஷ்ணபிள்ளை அவர்களை, கிளிவெட்டியிலுள்ள திரு. பசுபதிச்சாமி அவர்களையும் தொடர்பு கொள்ளலாம். இந்துசமயப்பணிப்பாளர்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. ஸ்ரீ பாசுபதேஸ்வரர் ஆலயம், பனங்காடு, அக்கரைப்பற்று

அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பனங்காடு என்னும் கிராமத்தில் இப் பாசுபதேஸ்வரர் கோயில் கொண்டு வீற்றிருந்து அருள்புரிகிறார்.

பழைமை வாய்ந்த இவ்வாலயம் இப்பகுதியில் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. ஆலய மூலஸ்தானத்தில் சிவலிங்க மூர்த்தி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. விநாயகர், சுப்பிரமணியர் அம்பாள், ஐயனார், வைரவர், சண்டேசுபரர் முதலிய பரிவார மூர்த்திகளுக்கு சந்நிதானம் அமைக்கப் பெற்றிருக்கிறது.

தினமும் மூன்றுகாலப் பூசை நடைபெற்று வரும் இவ்வாலயத்தில் வருடாவருடம் வரும் ஆவணி மாதத்தில் மகோற்சவம் 6 நாட்கள் தொடர்ந்து நடைபெறும். பல இடங்களிலிருந்தும் அடியார்கள் ஆலயத்திற்குச் சென்று ஈஸ்வரனை வழிபட்டுப் பலனடைகிறார்கள்.

## புத்தள மாவட்டம்

### முன்னேஸ்வரம் (முன்னைநாதர்)

இலங்கையின் வட மேல்மாகாணத்தில் சிலாபத்துக்குக் கிழக்கே ஒருமைல் தொலைவில் விளங்குவது முன்னேஸ்வரம்.

1. இக்கோவில் தாபிக்கப்பட்டமைக்குச் சரித்திர பூர்வமான சான்றுகள் இல்லை. ஐதிக மரபுகளைக்கொண்டு நோக்குமிடத்து, உலகமக்கள் உய்தி பெறுதற் பொருட்டு இவ்வாலயம் பிரம்மதேவனால் தாபிக்கப்பட்டதென சூதமுனிவர் கூறியதாக தக்கிண கைலாயபுராணக்கூற்று உண்டு. தக்கிண கைலாயபுராணச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்றது முன்னேஸ்வர மான்மியம் என்னும் நூல். இதனை எழுதியவர் இவ்வாலயத்தைச் சேர்ந்த மு. சோமஸ்கந்தக் குருக்கள் ஆவார்.

2. இராவண சங்காரத்தை முடித்துக்கொண்டு இராமர் அயோத்திக்குஏகுங் காலை பிரமகத்தி அவரைப்பிடித்துக்கொண்டது. இராமபிரான் முன்னேஸ்வரத்தைச் சமீபித்த காலை சாயா ருபமான பிரமகத்தி அகன்று விடவே, அத்தலத்து விசேடத்தை உணர்ந்து சிவதீர்த்தத்தில் மூழ்கி இறைவனைப்பூசித்து, இராமலிங்கம் என்னும் பெயரோடு சுவர்ணலிங்கம் ஒன்றைத் தாபித்து வழிபட்டு ஏகினர். இவ்வாறு தட்சண கைலாயபுரானத்துப் பதினேந்தாவது அத்தியாயம் கூறுவதாக முன்னேஸ்வர மான்மியம் உணர்த்து கின்றது.

3. வேதங்களை வகுத்தவரும் வடமொழிப் பாரதம் பாடியவருமாகிய வியாச முனிவரும் விஷ்ணு பரத்துவத்தைக் காசியிலே கூறமுற்பட்டு நந்தியால் தண்டிக்கப்பெற்று பின் சபை விமோசனம் நீங்க, முன்னேஸ்வரத்தையடைந்த வழிபட்டு பெற்றதாகதட்புராணத்தின் 16 வது அத்தியாயம் கூறுவதாக மான்மியம் செப்புகிறது.

4. மனுநீதி கண்ட சோழன் மரபில் உதித்தவனும் வாமதேவனின் பவுத்திகனுமான குளக்கோட்டு மன்னன் இவ்வாலயத்தைத் திருத்தியமைத்தான் எனவும் கோயிற்கைங்கரியங்களைச் செய் விதில் நடாத்தற்கு சோழநாட்டிலிருந்து பல்வேறு வகுப்பினரைக் கொண்டுவந்து கோயி பூமிக்குரிய 64 கிராமங்களில் குடியிருத்தினன் என்னும் மான்மியம் கூறும். இவற்றை யெல்லாம் பரிபாலித்தற்குத் தண்யுஸ்ருப்பூபாலன் என்னும் அரச குமாரனைமதுரையி லிருந்து அழைப்பித்து அரசிருக்குச் செய்தான் என்பதும் மான்மியம் கூறும் செய்தி.

5. வரலாற்றுக்கால கட்டத்தில், பலசிங்கள மன்னர்கள் இவ்வளாலயத்தை ஆதரித்து வளர்த்தமையும் சாசனங்களால் தெளிவாக்கப்பட்டுள்ளது. சங்கபோதி மன்னன் வழிவந்து 11 வது பராக்கிரமபாகு 15 ஆம் நூற்றுண்டு (1412—67) இத்தலத்துக்கும் பல காணிகளை மாணிய மாக்கி திருப்பணியும் செய்வித்து நித்திய நைமித்திய பூசைகளும் ஒழுங்குசெய்தான் என கல் வெட்டு கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. போர்த்துக்கேயர் காலத்தில் டயகோடிமெல்லோ என்போன் தலைமையிலானபடையினர் 1578 இல் முன்னேஸ்வரத்தை அழித்துச் சூறையாடினர்.

7. அந்நியராட்சியின் போது புசழ்குன்றி நின்ற முன்னேஸ்வ த்தில் 18 ஆம் நூற்றாண்டில் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன், இந்தியாவிலிருந்து சிற்பாசாரியர்களைத் தருவித்து திருப்பணி செய்து 1753 இல் புனருத்தாரண மகாகும்பாபிஷேகம், காஞ்சிபுரம் குமாரசுவாமிக்குருக்களால் நடாத்தப் பெற்றது. அக்காலம் முதல் முன்னேஸ்வ ம் சைவமக்கள் நாடித்தொழும் புண்ணிய தலமாகத் திகழ்ந்துவருகிறது.

8. இங்குள்ள இறைவன் முன்னைவள நாதன் எனவும் இறைவி வடிவாம்பி எனவும் அழைக்கப்பெறுவர். வேறுதலங்களுக்கு இல்லாத விசேடம் இதற்குண்டு. அது யாதெனில் 63 நாயன்மார்க்கும் எழுந்தருனி விக்கிரகங்கள் இருத்தலாகும்.

பாடப்பெற்றுள்ள நூல்கள்—

| | | |
|---|---|---|
| கொக்குவில், சிலம்புநாதபிள்ளை | — | ஊஞ்சல். |
| சோமசுந்தரப் புலவர் | — | ஊஞ்சல். |
| பாலசுப்பிரமணியக் குருக்கள் | — | ஊஞ்சல். |
| சிலம்பு நாதபிள்ளை வடிவழகியம்மை ஆசிரிய விருத்தம் | | |
| காரைதீவு சிவசிதம்ப ஐயர் | — | நவமணிமாலை. |
| இன்னும்பலர் விடுத்தம், அந்நாதி யாதியனபாடியுள்ளனர். | | |

## மொணருகலை மாவட்டம்

## கதிர்காமத்து

## முத்துலிங்கசுவாமி கோவில்

சிவன் கோவில் என்று இன்று கதிர்காமத்தில் வணங்கப்படுவது முத்துலிங்கசுவாமி கோயில் ஆகும். கதிர்காமத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் இருந்து முருகனைப் பூசித்து முருகனடி சேர்ந்து சமாதியான முத்துலிங்க சுவாமிகளால் வணங்கப்பட்ட, சடாட்சர மந்திர வடிவாக அமைக்கப்பட்ட முருகப்பெருமானது இயந்திர பொற்றகடு உள்ள பெட்டியே இப்பொழுது திரைச்சீலையால் மறைக்கப்பட்டிருக்கும் கதிர்காமத்கந்தன் ஆலயத்து மூலஸ்தானத்தில்வைக்கப் பட்டிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

கதிர்காம யாத்திரிகள் பிள்ளையார் ஆலயம், முருகன் ஆலயம், தெய்வானை அம்மன் ஆலயம், வள்ளியம்மன் ஆலயம் ஆகியவற்றை வழிபாடு செய்து, முத்திலிங்கசுவாமி ஆலயத்தினையும் வழிபடுவர்.

இது ஆகம முறைப்படி பூசை நடைபெறும் கோயிலல்ல. பூசை புரிபவர் வாயைச் சீலையால் கட்டிக்கொண்டு மௌனமாக நின்று பூசை செய்வதை வழக்கம். இதுவே கதிர்காமம் கந்தனுக்கும் இன்று பூசை நடைபெறும் முறையாகும்.

சமாதியடைந்த யோகியின் உடல் சயம்புலிங்கமாகி அருள் பாலிக்கும் தன்மையினைக் கதிர்காமத்து முத்திலிங்க சிவன் கோவிலில் காணலாம்.

## இரத்தினபுரி மாவட்டம்

## இரத்தினபுரி திரிபுர சுந்தரி சமேத இரத்தின சபேசர் தேவஸ்தான வரலாறு

1938ம் ஆண்டு யூன் மாதம் 8ந் திகதியன்று திரிபுர சுந்தரி சமேத இரத்தினசபேசர் தேவஸ்தானத்தில் முன்னேஸ்வரம் ப.ரம்மஸ்ரீ சோமாஸ் கந்தக் குருக்களால் மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தப் பெற்றது. இரத்தினபிரி வாழ் சைவப் பெரு மக்களது நலன்கருதிஇரத்தினபுரிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ பரிபாலன மகாசபை கொழும்புத்துறைக் குருபரன் யோகர் சுவாமிகளதும், பிரம்மஸ்ரீ சங்கரசுப்பையர் சுவாமிகளதும் ஆலோசனைகளுடன் இரத்தினபுரியில் சிவாலயம் அமைத்தல் வேண்டும் என்னும் தீர்மானத்தை அடுத்து, திருப்பணிக் கைங்கரியத்தை மேற்கொண்டது. 1935ம் ஆண்டு சைவப்பெரியார் திரு. த. வேலுப்பிள்ளை அவர்கள்தரும சாதனமாகக் கொடுத்து-தவிய காணியில் இரத்தினபுரி சிவன் கோவிலுக்கான கட்டிட வேலைகள் யாவும் நிறைவேறின.

காசியில் எழுந்தருளியிருந்த இன்னருள பாலக்கும் விஸ்வநாதப் பெருமானது தேவாலய அமைப்பினையே இரத்தினபுரி சபேசர் பெருமான் தேவஸ்தானமும் உடையது. அடியார்கள் சிவலிங்கப் பெருமானை அருகிலே நின்று வணங்கக் கூடிய வசதிகளுடன் நான்கு பக்க வாயில் களையும், நடுவே மூலமூர்த்தியாகச் சிவலிங்கப் பெருமானையும் இடது பக்கத்தில் அண்டசரா களையும், நடுவே மூலமூர்த்தியாகச் சிவலிங்கம் பெருமானையும் இடது பக்கத்தில் அண்டசரா சரங்களையும் பெறுது பெற்றும் கன்னியாக விளங்கும் திரிபுர சுந்தரி அம்பாளும், இரத்தின சபேசராகக் கோவில் கொண்டு எழுந்தருளி அடியார்க்கருள் பொழியும் உலக முதல்வரது பரிவார மூர்த்திகளாக விநாயகர், சுப்பிரமணியர், சூரியர், சந்திரர், சந்தான கோபாலர், நாக-தம்பிரான், சனீஸ்வரர், வைரவர், சண்டேசுரர், ஆகியோருக்கு தனித்தனி சந்நிதானங்களும் அமைந்துள்ளன. நந்தி, பலிபீடம் ஆகியனவும் பிரதிட்டை செய்யப் பெற்றுள்ளதோடு, சமய-குரவர் நால்வரும் தாபிக்கப்பட்டுள்ளனர்.

சிவலிங்கப் பெருமானுக்கு முத்தள வரிசையில் அமைந்த தூபியின் கிழக்குப் பக்கமாக சந்திரசேகர், திரிபுர சுந்தரி முகூர்த்தங்களும், தெற்குப் பக்கமாக தக்ஷிண மூர்த்தியாகச் சிவபெருமான் கல்லால நிழலில் அமர்ந்து இன் முத்திரைக் காட்டிக் மோனமாயிருந்து சனக, முகூர்த்தமும், மேற்குப் பக்கத்தில் பூ தேவி, ஸ்ரீ தேவிசமேத, மகாவிஷ்ணுமூர்த்தியும், வடக்குப் பக்கத்தில் சரஸ்வதிதேவி சமேத பிரம மூர்த்தியும் சுதையில் அமைந்த எழிற் கோலத்தில் காட்சி தருகின்றனர். அத்துடன் உலக மாதாவாகுய கிரிபுர சுந்தரி அம்பாளுடைய தூபி ஏகதளமாக அமைந்துள்ளது.

1961ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ந் தேதி அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் புனராவர்த்தன ஜீர்ணோர்த்தாரண மாக கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நிறை வேற்றினர்.

சைவமகாசபை தேவஸ்தானத்தின் மேற்குப் பகுதியில் நிலத்தை விலைக்குப்பெற்று அறைகளைக்கட்டி, அரசாங்க உத்தியோகத்தர் தங்குதற்கு வசதியை செய்து கொடுத்தமையால், ஆலய பூசை தங்குதடையின்றி நடைபெறுவதற்கு வழிவகை செய்ததாயிற்று. தேவஸ்தான எல்லைகளைச் சுற்றி மதில் எழுப்பப் பெற்றது. தற்போது பிரமஸ்ரீ செ பரமானந்தக்குருக்கள் தேவஸ்தான பிரதம குருக்காக இருக்கிறர்.

இரத்தினபுரிச் சிவன் கோவிலில், சிவராத்திரி, நவராத்திரி,பிரதோஷம், ஆனி உத்தரம், ஆவணிச் சதுர்த்தி, கந்தசஷ்டி, திருக்கார்த்திகைத் தீபம், மார்கழிதிருவெம்பாவை, தைப்பூசம், மாசிமகம், ஆகிய விழாக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன.

ஆனி மாதம் ரோகிணி நட்சத்திரத்துடன் கூடிய சுப தினத்திலே மணவாளக்கோலம் அதி விமரிசையாகக் கொண்டாடப் பெறுவது வழமை.

ஈழ நாட்டிலுள்ள சைவப் பெரியார்கள், தமிழகத்திலிருந்து ஈழநாட்டுக்கு வருகை தரும் அறிஞர்கள் எல்லோரும் இரத்தினபுரிச் சிவாலயத்திற்கு வந்து அருளுரையாற்றுவர்.

சிவாலயத்தில் நிகழும் திருவிழாக்கள் அனைத்திற்கும் இரத்தினபுரி வாழ் வர்த்தகப் பிரமுகர், அரசாங்க உத்தியோகத்தர், சைவ அன்பர்கள், மெய்யடியார்கள் ஆகியோருடன் ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் அன்பர்கள் எல்லா விதமான ஆதரவும்தருவதனாலே சாதி, மத, இனபேதமின்றி எல்லோரதும் வழிபாட்டுத்தலமாக திரிபுர சுந்தரி இரத்தினபுரி சமேத இரத்தின சபேசர் ஆலயம் விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீஸ்வரம் மகாலிங்கத்தின் தோற்றமும் மூலத்தானத் தூபியின் தோற்றமும்.

TIRUKETHEESWARAM, MAHALINGAM AND VIMANAM








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலாவித் தீர்த்தக்கரையில் கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வரநாதர் அடியார்புடை சூழத் தீர்த்தம் ஆடும் காட்சி திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் தந்துதவியது.

**PALAVI THEERTHAM TIRUKETHEESWARAM** (Photos given by Mr. S. Arumugam, Designer of Palavi and the Author of Ancient Temples of Ceylon, Polonnaruwa Temples and Tiruketheeswaram)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரிகோணமலை கோணநாதர் கோயில் வானொளிப்படம். **An Aerial view of Tirukoneswaram—Trincomalee**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில்—கொழும்பு
## PONNAMBALAVANESWARAR KOVIL—COLOMBO

இராச கோபுரத் தோற்றம்.
Gopuram



கோவில் உட்பிரகாரத் தோற்றம்.
Decorative monolith pillored Corridor



பிரதோஷ மூர்த்தி இடபவாகனத்தில் வரும் காட்சி.
PRADOSHAMOORTHI



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பசு தானாகவே சிவலிங்கத்தின் மீது பால் பொழியும் காட்சி.

Cow performing abhishekam



பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில்—கொழும்பு

Ponnambalavaneswarar Kovil—Colombo

தம்ப மண்டபத் தோற்றம்.

THAMPA MANDAPAM

with the decorative pillars.



கண்ணப்பர் தோற்றம்.

Kannappa Nayanar one of the 63 Celebrated Saints of Periya puram by Sekilazhar Swami



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம்பலவாணேசர் கோயில்—கொழும்பு

**PONNAMBALA VANESWARAR KOVIL—COLOMBO**



தக்ஷிணாமூர்த்தி
**DAKSHINAMOORTHY**



லிங்கோத்பவமூர்த்,
**LINGODBHAVA MOORTHY**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேபாள அரசர் மாட்சிமைதங்கிய பிரேந்திரா பீர் பிக்றம்ஷா தேவ் அவர்களும் மாட்சிமைதங்கிய அரசியார் ஐஸ்வரியராஜ்யலக்ஷ்மி தேவி அவர்களும் இலங்கைக்கு வருகை தந்து 26.02.1980 ல் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலில் வழிபாடு செய்தகாட்சிகள். (1) பிரதம தருமகருத்தா ச. பத்மாநாதன் மன்னருக்கு மாலே பிடல் ; (2) இராசோபசாரங்களுடன் மன்னரை அழைத்துச் செல்லல் ; (3) இலங்கைக் குடியரசினது சனுதிபதி அதியுத்தமர் ஜே. ஆர் ஜயவர்த்தனு அவர்களும், மன்னரும் வழிபடல் (4) கோயில் பிரதம குரு. பிரம்மஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் மன்னருக்குக் காளாஞ்சிவழங்கல்.

**KING OF NEPAL AT A SPECIAL POOJA AT SRI PONNAMBALAVANESWARAR KOVIL—26th February 1980.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# INJURE NOT ...

माता रुद्राणां दुहिता वसूनां
स्वसोदित्यानाममृतस्य नाभिः ।
प्र नु वोचं चिकितुषे जनाय
मा गामनागामदितिं वधिष्ट ॥

*The Rudras' Mother, Daughter of the Vasus,*
*Centre of nectar, the Adityas' Sister—*
*To folk who understand will I proclaim it—injure not Aditi, the Cow, the sinless.*

**—Rigveda VIII 101.xv**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம்—திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர்

சிதம்பரம் சேக்கிழார் மடம், சிலை, படம் தந்துதவியவர் பேராசிரியர் ஆத்திரேய ராமசேஷன் (சேக்கிழார்தாசன்)

ஒரத்தநாடு—தஞ்சாவூர் மாவட்டம்

GNANAPRAGASA MUNIVAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிதம்பரத்திலுள்ள ஞானப்பிரகாச முனிவர் குளம். யாழ்ப்பாணத்தார் மடங்கள் குளக்கரையிற் காணப்படுகின்றன.

**GNANAPRAGASA MUNIVAR TANK AT CHIDAMPARAM—(Photographs given by Professor Sekkiazhardasan of Kumbakonam).**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சிவதொண்டன் நிலையத்தினைத்தாபித்து. அடியார்களை சிவராத்திரி தினத்தில் சிவபூசை, சிவசிந்தனை, சிவபுராண பாராயணம் என்பனவற்றில் ஈடுபடச்செய்த கொழும்புத்துறை குருபரன் யோகர் சுவாமிகள்

YOGAR SWAMIGAL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யோகர் சுவாமிகளின் ஆஞ்ஞையினுல் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் கோயிலுக்கு அன்மையில் ஆச்சிரமம் அமைத்து அருந் தொண்டாற்றும் 80 ஆண்டு நிறைவெய்திய தவத்திரு வடிவேற் சுவாமிகள்.

**VADIVEL SWAMI—OF KILINOCHI ASHRAM**



யோகர் சுவாமிகளின் ஆசிபெற்று அமெரிக்க நாட்டு காவாய் நகரில் சைவசித்தாந்த நிறுவனத்தை அமைத்து, உலகிலேயே மிகப் பெரிய நந்தியைத் தாபித்து, பரகாயப் பிரவேசம் செய்வதற்கு முன்னும் பின்னுமான திருமூலர்சிலைகள் ஆகியவை உண்டாக்கி சிவம் மணக்கச் செய்யும் சுப்பிரமணியசுவாமிகள்.

**SWAMI SUBRAMUNIYAR of HAWAII, AMERICA**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கன்னியாய் வெந்நீர் ஊற்றுக்கு அண்மையில் அமைந்துள்ள நடேசர் ஆலயமும் அதனை அமைத்த சிவயோக சமாசத்தின் ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா ஜீ. அவர்களும்

**SWAMI GENGATHAR ANANDAJI OF SIVAYOGA SAMAJAM AND NADESAR KOVIL NEAR KANNIYAI HOTWELLS TRINCOMALEE.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்காதீஸ்வரர் கோவில் நுரளியில் நிறுவிய சுவாமி சிவபால யோகி அவர்கள்
SRIMATH SIVABALA YOGI who established the Lankatheeswaram Kovil—Nuwara Eliya.

185788

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES




சிவனொளிபாதமலை — வானொளிப்படம் SIVAN OLI PADA MALAI—ADAMS PEAK.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நல்லை ஆதின குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மாண்புமிகு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்கள், அமைச்சின் இணைச் செயலாளர் திரு. சிவா. சி. மாணிக்கவாசகர் அவர்கள், இந்துசமயத் திணைக்களப் பணிப்பாளர் திரு. வே. ந. சிவராசா அவர்கள் ஆகியோர் 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் தேதி கொழும்பு, ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் நடை பெற்ற இந்து மகாநாட்டில் கலந்து சிறப்பித்த காட்சி.

SrilaSri Swaminatha Desika Gnana Sambandha Para machariya Swamigal of Nallai Atheenam inaugerating the Hindu Conference held at Kathiresan Hall, Colombo on 23rd November, 1980—Seated on the stage are—Chelliah Rajadurai—Hon. Minister of Regional Development—Siva C. Manikka Vasagar, Additional Secretary, V. N. Sivarajah Director Hindu Affairs Department.



தேவர் குறளும் திருவாசகமும், 80 ஆம் வயதில், ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த, தமிழ்த்தாசன் ஜி. யூ. போப் ஐயர்

Rev. G. U. Pope of Balliol College, Oxford "Lover of Tamil" who translated TIRUKKURAL AND TIRUVACAKAM in the year 1900.

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★
University of Jaffna
185788
Library
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரியில் நான்குசாமப் பூசை விதிமுறைகள்

| சாமம் | அபிடேகம் | பட்டு | நைவேத்தியம் | மலர் | பத்திரம் | பழம் | தூபம் | தீபம் | வேதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆவது பி.ப. 8.00 | பஞ்சகவ்யம் | செம்பட்டு | பாலன்னம் | தாமரை, அலரி | வில்வம் | வில்வம் | சாம்பிராணி | [illegible] பூஜை | இருக்கு |
| 2 ஆவது பி.ப.10.30 | பஞ்சாமிர்தம் | மஞ்சள் பட்டு | பாயசான்னம் | சண்பகம், தாமரை | துளசி, வில்வம் | பலா | சந்தனக்கட்டை | நசஷத்திர தீபம் பூஜை | யசுர் |
| 3 ஆவது நள்ளிரவு 12.15 | பலோதகம் தேன் | வெண்பட்டு | எள்ளு, அன்னம் | செங்கழுநீர் ஆத்தி, பிச்சி | முட்கிளுவை, வில்வம், அறுகு | மாதுளம் | குங்குலியம் | பஞ்சமுகதீபம | சாமம் |
| 4 ஆவது அதிகாலை 3.30 | கந்தோதகம் கருப்பஞ்சாறு | நீலப்பட்டு | சுத்தான்னம் | நந்தியாவர்த்தம் | விளா | நானாவிதபழங்கள் | கர்ப்பூரம், இலவங்கம் | வில்வதீபம் | அதர்வணம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்று உண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையகத் துள்ளார்க்கு வகுத்து வைத்தானே

(திருமூலர் திருமந்திரம்)



**வெளியீடு**
இந்து சமயத் திணைக்களம்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
த. பெ. எண் 1700,
244, காலி வீதி
கொழும்பு 4.
இலங்கை.

**ප්‍රකාශනය :**
හින්දු කටයුතු දෙපාර්තමේන්තුව
ප්‍රාදේශීය සංවර්ධන අමාත්‍යාංශය
තැ. පෙ. අංක 1700
244, ගාලු පාර
කොළඹ 4 - ශ්‍රී ලංකා

**Publication**
Department of Hindu Affairs
Ministry of Regional Development
P. O. Box 1700
No. 244, Galle Road,
Colombo - Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] பதிப்பிக்கப்பட்டது